Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් பெப். 20-26.2000

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

முரசு 345

தீர்வுத்திட்டத்திற்கு

தலையாட்டுவார்களா தமிழ்க் கட்சிகள்?

ஸ்வித்யாவுக்கு கமல் எழுதிய கடிதம்

விக்ரமனும் ஐயும்

காரிகைகள் கொடுத்த காலண்டர் போஸ்

முரசம்

முழுமையான தீர்வு?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இனப் பிரச்சனைக்கு
அரசியல் தீர்வு
காண்பது குறித்து
ஆராய்வுகள்
மீண்டும் ஆரம்பித்துள்ளன.

ஆனால் அவை
யுத்தத்துக்கு
முடிவு காணும்
பேச்சு வார்த்தைகளாக
இன்னும் தெரியவில்லை
ஏனெனில்,
இனப் பிரச்சனையும்
யுத்தமும்
ஒன்றோடொன்று
தொடர்புபட்டதென்ற
புரிதல் இங்கே
காணப்படவில்லை.

அதனால் அவை
ஒன்றாக அணுகப்படாமல்
வேறு வேறாகக்
கையாளப் படுகின்றன.

இதனாலேயே
இந்தப் ஆராய்வுகளின்
முதற்கட்டத்தில்
விடுதலைப் புலிகளுடன்
பேசப்படவில்லை.

அரசாங்கம்,
முன்னரே தயாரித்திருந்த
அரசியல் தீர்வுத்திட்டத்தை
செப்பஞ் செய்வதற்கான
முன்னெடுப்பாகவே
இந்த ஆராய்வுகள்
அமைந்துள்ளன.

முதற்கட்டத்தில்
பொதுஜன ஐக்கியமுன்னணியின்
கூட்டுக் கட்சிகளுடன் பேசி,
தமிழ்க்கட்சிகளுடன் பேசி,
ஐ.தே.க.வுடன் பேசி-
இறுதியாகப்
புலிகளுடன் பேசுவதான
நிகழ்ச்சி நிரலில்
இவை முன்னெடுக்கப்
படுகின்றன.

ஆனால்
கேள்வி என்னவென்றால்,
புலிகளுடன் பேசியபின்
காணும் உடன்பாட்டை
தமது கட்சிக்குள்ளும்
ஏனையவற்றுக்கிடையேயும்
ஆராய்வதா,
அல்லது
தமது கட்சிக்குள்ளும்
ஏனைய கட்சிகளுக்கிடையேயும்
ஆராயப்பட்டவற்றை
புலிகளுடன் பேசுவதா-
தீர்வுக்கு உதவும்
என்பது தான்.

புலிகளைத் திருப்திசெய்யும்
விடயங்களை அறிந்து கொண்டு
ஏனைய கட்சிகளிடையே
உடன்பாடு காணுவதுதான்
உசிதமான வழி.

ஏனைய கட்சிகளைத்
திருப்தி செய்யும்
விடயங்களையிட்டுப்
புலிகளுடன் பேசுவது
தலைகீழான முயற்சி.

இந்தக் கட்டத்தில்
புலிகள் உடன்படாவிட்டால்,
முன்னைய ஆராய்வுகள்
அர்த்தமற்றதாகி விடும்.

ஏனெனில்
புலிகள் இணங்காமல்
யுத்தம் ஓயாது
யுத்தம் ஓயாமல்
பிரச்சனை தீராது.

எனினும்,
அரசாங்கத்தின் முயற்சியை
அதன் வழியில்
பரீட்சித்துப் பார்க்க
இடம் கொடுப்பதும்
தவறில்லை.

இல்லாவிட்டால்
தீர்வுக்குத் தடையாயிருந்த
பழியை அரசாங்கம்
தமிழ்த் தரப்பினர் மீது
அமத்திவிடுவதற்கு
வசதியாகிவிடும்.

அரசாங்கம் ஆராயும்
தீர்வுத் திட்டம்
அரசாங்கக் கட்சிகளில்
ஆராயப்பட்டு இப்போது
தமிழ்க் கட்சிகளுடன்
ஆராயப் படுகிறது.

முன்னர் முன்வைத்த
தீர்வுத் திட்டமே
மீண்டும் இப்போது
ஆராய்வுக்கு வருகிறது.

முன்னைய திட்டத்தில்
தமிழ் பேசும் மக்களின்
அபிலாஷைகளை
ஈடு செய்யாத
விடயங்கள் பல
இணங்காணப் பட்டிருந்தன.

அரசாங்கக் கட்சிகளின்
ஆராய்வுகளில்
இவை குறித்த
திருப்தியான மாற்றங்கள்
எதுவும் செய்யப்பட்டதாகத்
தெரிய வரவில்லை

அரசியலமைப்பு மாற்றத்தில்
சிங்களக் கட்சிகளின்
தேவைகள் குறித்தே
அந்த ஆய்வுகளில்
அதிக அக்கறை
காட்டப்பட்டிருந்தது.

எனவே
விடயம் இப்போது
தமிழ்க் கட்சிகளின்
மேசை மீதுதான்
போடப்பட்டுள்ளது.
திருத்தங்களைச் செய்து
செப்பனிடச் செய்வதற்கு
இயன்றவரை முயல்வதில்
தவறில்லை.

ஆனால்
இம்முறையாவது
அரசியல் தீர்வை
நிறைவேற்றச் செய்யவேண்டும்
என்ற முனைப்பில்
இளக்காரமான தீர்வுகளுக்கு
இணங்கிவிடலாகாது.
முழுமையான தீர்வு ஒன்றுக்கே
முழு மனதுடன் முயற்சிக்க வேண்டும்.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

ஆன்மீகம்

லோக மகேசுவரன்

இயற்கையில் காணப்படும் பொருள்களெல்லாம் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியவைகள்தான். மரத்திலிருந்து விதை உண்டாகிறது. பிறகு விதையிலிருந்து மரம் உண்டாகிறது. இவ்வாறு காரணகாரிய மயமாக அவைகளிடத்துப் பெருந் தொடர்பு உண்டு.



இக் கோட்பாட்டின்படி பரமாத்மாவினிடத்திலிருந்து தேவர்களும் ரிஷிகளும் தோன்றினார்களானால், அப்பரமாத்மா யாரிடத்திலிருந்து உண்டானார் என்ற கேள்வி பிறக்கக்கூடும். இதற்கு விடையாக அவர் தம்மை 'அனாதி' என்று சொல்லுகிறார். அவருக்குத் துவக்கம் கிடையாது. ஆகை யால் அவர் பிறவாதவர் ஆகிறார்.

கானலில் நீர் தோன்றுவது போன்றும், சூரியனிடத்திலிருந்து கிரணங்கள் தோன்றுவது போன்றும், கடலிலிருந்து ஆவியாக நீர் வருவதுபோன்றும் சர்வேசுவரனிடத்திலிருந்து சரம் அசரம் ஆகிய அனைத்தும் தோன்றுகின்றன. அதனால் அவரிடத்து ஒரு குறையும் ஏற்படுவதில்லை. யாண்டும் நிறைபொருளாகவே இருக்கிறார். அவருடைய முன்னிலையில் இந்த உலகங்களின் நடைமுறை கோணலின்றிக் காரியப்படுகின்றது. அணுவும் அவரது ஆணையை மீறி நடப்பதில்லை. ஆதலால் அவர் லோக மகேசுவரன் என்று அழைக்கப்படுகிறார்.

தொகுப்பு:- எம்.தில்லைராஜா-பசறையூர்.

ஏழ்மையிலும் இன்பம் காண்

ஹஸ்ரத் லுக்மான் வறுமையைப் பற்றி தன் மகனிடம் பின்வருமாறு அறிவுரை பகிர்ந்தார்கள்.

"மகனே! உனக்கு வறுமை ஏற்பட்டால் அதை பிறரிடம் செல்லாதே. ஏனெனில் அவர்கள் உன்னை மரியாதைக் குறைவாக நடத்துவார்கள். உன்னோடு பேசுவதைக்கூட இவர்கள் இழிவாகக் கருதுவார்கள்.

அளவு கடந்த வறுமை ஒருவனை இறை மறுப்பின் (குப்ரின்) அருகில் கொண்டு செல்லும். அப்போது அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்ற உறுதியான ஈமானோடு செயல்பட வேண்டும்.

எம்மைப் படைத்து பாதுகாத்து போஷிப்பவனும் அல்லாஹ்தான். ஆகவே மகனே ஏழ்மையிலும் இன்பம் காண்!" என்றார்கள்.

ஆதாரம்: தாரீத

எம்.சி.கலீல்-கல்முனை-05.

தலைகீழ்

மேலே தெரிவது
ஆட்டு நடப்பு...!
கீழே தெரிவது
நாட்டு நடப்பு!!

எஸ்.பிரபா, பதுளை.

அடையாள அட்டை

எம்மை வளர்த்தவர்களைக் காணவில்லை;
எங்கே என்று தேடுகின்றோம்!
அயலூரில் போய் தேடுவோம் என்றால்,
ஆடுகள் எமக்கும்
அடையாள அட்டை கேட்பினமோ?

திருமதி மெற்றில்டா மரியதாஸ்- பண்டாரவளை.

கொடுமை

அன்றாடம் அகதிகளாக்கும்
அவலப்போர்தான்
ஒன்றுமறியா உங்கள் கொட்டிலையும்
கொய்து சென்றதோ?

அ.ஜெகதீஸ்வரன்-புசல்லாவ.

அவ மதிப்பு

மந்தைகளோ இன்று-
மானிடத்தின் மேல்!!!
மானிடமோ இன்று-
மந்தைகளைப் போல்!!!

லிங்கராஜா கிரிசாந்தி-
மட்டக்களப்பு

கவனம்

அடி எடுத்து வைக்கும்
ஆடுகளே கவனம்!
மிதி வெடிகள் இருக்கும்
நிலத்திற்கு அடியில்!

ச.ஷாமி ஷதுர்சன்-
மட்டக்களப்பு

யுத்தமில்லா பூமி!

குண்டு மழை பெய்வதாலும்
புல் டோசரும் டாங்கிகளும்
புல் (வயல்) வெளிகள்-
அத்தனையையும்
மேய்ந்து விடுவதால்
நாங்கள் மேய்ந்து பசியாற
புறப்பட்டு விட்டோம்
யுத்த மில்லா பூமியைத் தேடி!

நடராஜா உமாகாந்த்-நாவலப்பிட்டி.

நிழலும் நிஜமும்

நிஜத்தில் மட்டும் அல்ல,
நிழல் தண்ணீரிலும் தெரிகிறது.
நிஜமாகப் பிடிபட்ட நம்மக்கள்
நிழல்கூட தெரியாது
போவதேனோ?

பி.பிரபை-கொழும்பு-13.

கவிதைப் போட்டி இல.342

பரிசுக்குரிய கவிதை

அணிவகுப்பு

ஆட்டிலெறிக்கும் அஞ்சாமல்,
ஏறுபோல் வீறுநடை போடும்
ஆட்டுக்குடும்ப அடையாள
அணிவகுப்பு
அந்திப் பொழுதில்-புனலில்
அழகாய்த் தெரிகிறது!

எஸ்.ஞானராஜா-வாழைச்சேனை

புதினம்!

நூட்டிய சிறைக்குள்ளும்-
புதினம் நடக்கையில்,
றோட்டில் நீங்கள்,
தப்பியதே புதினம்!!

அ.கௌரிதாசன்-கிண்ணியா

புத்தாயிரத்திலும்

அப்படிப்
பார்த்தாலும்,
இப்படி
பார்த்தாலும்,
எந்தக் கோணத்தில்
பார்த்தாலும்,
தீர்வுப் பொதியில்
ஒன்றுமில்லை!

அ.அச்சுதன்-முதூர்.

நம் நிலை!

ஏய்ப்பவர் நிறைந்த
இத்திரு நாட்டில்
மேய்ப்பவர் அற்ற
மந்தைகள் நாம்!

அ.சந்தியாகோ-கண்டி.

சோதனைச் சாவடி

ஆடுகளின் அணிவகுப்பைப்
பார்த்தால் முன்னால் உள்ளது
சோதனைச் சாவடியோ?

அ.சுதர்சன்-மட்டக்களப்பு.

கவிதைப் போட்டி இல.345

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 26.02.2000
(பட உதவி: அன்னபூரணி)

கவிதைப் போட்டி இல.345
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

இடம் பெயர்வு

தொடர்கின்ற யுத்தத்தில்
தொடரான இடம் பெயர்வு
விதிவிலக்கு நமக்கு இல்லை!

தெ.லோஜனா-கொழும்பு-15.

ஏக்கம்

நடந்து அலுத்து விட்டோம்.
தேடிய பாதையை மறந்துவிட்டோம்.
எங்கள் வாழ்க்கை நீர் மேல்-விழுந்த
நிழல் போல் ஆனதே.

ப.சங்கீதா-கொழும்பு-13.

வாசக(ர்)சாலை

மதிப்பிற்குரிய முரசே!

'தலை நகரில் முளைவிடும் அபாயம்' என்ற தலைப்பில் அமைந்த நரனின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' தமிழர் மனதில் எழுந்த பல சந்தேகங்களைப் போக்கும் வகையில் சிறப்பாக அலசி ஆராயப்பட்டிருந்தது. அதனை எழுதிய நரனுக்கு நன்றிகள் பல.. உண்மையிலேயே! தமிழ் உலகிற்கே நிழல் தந்த மாபெரும் ஆலை மரங்கள் இரண்டு அடியோடு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. இவ்விழப்புக்கள் இரண்டும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாக அமைந்துவிட்டதுடன் நின்றுவிடாமல் 'தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தால் உன் நிலமையும் அதுபோன்றதே!' என்ற ஒரு அச்சத்தையும் தமிழர்கள் மனதில் ஆழமாகப் பதித்துவிட்டுச் சென்றுவிட்டது.

'தினமுரசு' என்னும் தமிழர் அபிமான பத்திரிகை மூலம் திரை மறைவில் இருந்து கொண்டு பேனாவைக் கையில் ஏந்தி தமிழரின் துன்ப, துயரங்களை உலகிற்குப் பறை சாற்றிய 'அருமைத் தமிழன்' அற்புதராஜா அவர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். அதன் பின் தலைநகரில் அவதரித்து தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வழி செய்த 'வீரத் தலைவன்', 'மாமனிதன்' குமார் பொன்னம்பலம் அவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். இவர்களின் இழப்புக்காக ஆயிரமாயிரம் தமிழர்கள் கண்ணீர் வடித்தனர். அதனால் கொலையாளியார்? என்ற துப்புக்கள் துலங்கப்பட்டனவா? இனிமேலும் துலக்கப்படுமா?

ரீ.குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

அன்பின் முரசே,

உன்னுள் வரும் அனைத்து அம்சங்களும் தேனிலும் இனிமையானவை. அதிலும் 'வீரன் தான் பிரீன்' 'மோனிக்கா' தொடர், 'அரசியல்' ஆகியவை என்னை மிகவும் கவர்ந்துள்ளன. ஆரம்பமாகியிருக்கும் புதிய மிலேனியத்தில் எமது உள்ளம் கவர்ந்த முரசு மேலும் வெற்றிநடை போட எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

ஆர்.சுபா, லெபனான்.

அன்புடன் ஆசிரியருக்கு!

முரசு புது மெருகுடன் வருகிறது. அரசியல் கட்டுரைகளில் இன்னும் ஆழம் தேவையாக உள்ளது. 'பஹீமா ஜஹானி'ன் கவிதைகள் உள்ளம் நிறைகின்றன. எங்கே 'ஆத்மராஜாரூத் சந்திரிக்கா'வைக் காணோமே சிறுகதைகளில்...! இராஜகுமாரனுக்கு வாழ்த்துக்கள்!

ஹரீரா அனஸ், இலண்டன்.

என் இனிய முரசே!

உனது சகல அம்சங்களும் அற்புதம்.

அதிலும் 'இடி அமீனின் கதை' 'புலிகளின் வெற்றியின் இரகசியங்கள்' ஆகியன பிரமாதம்.

மேலும் உனது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

எஸ்.நஜீம், திருகோணமலை.

இனிய தமிழ் முரசே,

'சினி விசிட்' பகுதியை கொஞ்சம் குறைத்தாலென்ன? பத்திரிகை உலகில், நீ துள்ளுநடை போட்டு பவனி வரும்போது, பார்க்கச் சகிக்காத பொறாமைக் கண்கள் அகலவிரித்து அமுக்க நினைக்கலாம். என்ன செய்ய? முரசு வாசக நெஞ்சங்கள் நாளுக்கு நாள் பெருகி வரும்போது, தோல்வி பொறாமைக்காரர்களுக்கே. முரசு தொடர்ந்து முன்னேறும். எனது வாழ்த்துக்கள்!

கவிக்குயிலன், சேனையூர்-06.

●●

எப்பொழுது விடியும்?

என் உயிர் முரசே!

முரசே! உனது ஒவ்வொரு வார்த்தையும் பெரியோர்களின் பொன் மொழிக்கு சமமானது. உனது குரல் கேட்டு சலித்த மனமே இல்லை. வியாழன் எப்பொழுது விடியும் எனக் காத்துக்கிடக்கும் நெஞ்சங்கள் தான் அதிகம். ஏனென்றால் உனது குரல் கேட்டு இன்புறத்தான்.

சி.அருணன், கிரான்.

●●

'அற்புதம்'

அற்புதம் படைத்திட்ட அன்பான முரசே...! அற்புதன் விட்டுச் சென்ற ஆருயிர் முரசே...! உன்னில் வெளியாகும் அத்தனை அம்சங்களும் அற்புதமாகத்தான் இருக்கின்றன. அதனால் அன்பு முரசுக்கு... ஆருயிர் முரசுக்கு... பல்லாண்டு நீ-தொண்டு செய்து அற்புதங்கள் பல படைத்திட பல்லாண்டு வாழ்த்துகிறேன்! உன்னை நான் போற்றுகிறேன்...!

என்.எல்.முஸம்மில்,புதிய காத்தான்குடி-06.

முரசே!

இலங்கை பிரிட்டிஷாரிடம் சுதந்திரம் பெற்றதில் இருந்து இனவாத ரீதியாக தமிழர்கள் எப்படியெல்லாம் நசுக்கப்பட்டு வந்துள்ளார்கள் என்பதை இராஜதந்திரியின் கட்டுரை நன்றாக விளக்கியது. இன பிரச்சனைக்குத் தீர்வாக எத்தனையோ ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டும் இனவாதிகளின் எதிர்ப்பினால் அவை கிழித்தெறியப்பட்டதை பார்க்கும்போது,தற்போதுள்ள அரசும் எதிர் கட்சியும் புலிகளும் நிரந்தர சமாதான தீர்வு யோசனைகளுக்கு வருமிடத்து இனவாதிகளின் போக்கு எவ்வாறு அமையும் என்பதே கேள்வியாக உள்ளது. (ஆனால் 58ல் இருந்த இனவாதம் தற்போது நன்றாக வளர்ந்து விட்டது என்றால் மிகையாகாது)

பி.ஆர். அசோக்குமார், டிக்கோயா.

●●

இனிய முரசுக்கு!

உன் உடலில் வரும் எல்லா விடயங்களும் மிகவும் தரமானவை. ராஜேஸ்குமாரின் 'சிகப்பு வணக்கம்' மிகவும் அற்புதமாக நகருகின்றது. மற்றும் 'சிந்தியா பதில்கள்', சிறுவர் பகுதி 'பாப்பா முரசு' என்பவை மிக வும் பாராட்டத்தக்கவை. உதித்த இப் புத்தாயிரமாம் ஆண்டில் இன்னும் பல சிறந்த அம்சங்களும் நீ தர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஏ.எல்.மொஹமட் ரஸ்மி,
அட்டாளைச்சேனை.

●●

என் இதயம் தொட்ட முரசே!

வாரத்தில் ஒருமுறை வந்து உலகெங்கிலுமுள்ள செய்திகளை கரம் சேர்ப்பதற்கு நன்றி. வாரம் ஒரு நாடு பற்றிய தகவலை மீண்டும் சேர்த்துக் கொண்டால் சூப்பரோ சூப்பர்!

ஜ. ஜஸ்ரி, பெரியபாலம், முதூர்-05.

●●

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்(Fax):- 074-513266

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

அமைதிக்கான ஏற்பாடுகளை முறியடிக்க முளைக்கும் முட்டுக்கட்டைகள்!

களைந்தெறிய வேண்டியதே தலையாய கடமை!

இனப்பிரச்சனையைத் தீர்த்து அமைதியை ஏற்படுத்த முயற்சிகள் மும்முரமாக நடைபெறத் தொடங்கியுள்ள இச்சந்தர்ப்பத்தில் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டைகளும் முளைக்கத் தொடங்கியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இடையூறுகளைக் களைந்து, நாட்டில் அமைதி தோன்ற வழிகாண வேண்டியது அவசியமாகிறது.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு பிரயத்தனங்கள் முனைப்புடன் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நாட்டைக் குட்டிச் சுவராக்கிவரும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டு மக்களனைவரையும் சீரழித்து வரும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு திரிகரண சுத்தியுடன் முயன்று வருவோரும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் மற்றொரு புறத்தில் முட்டுக்கட்டைகள் முளைப்பதையும் காணக்கூடியதாகவிருக்கிறது.

அரசியல் யாப்பினைச் சீர்திருத்துவதன் மூலமும் அதிகாரப் பகிர்வை அமுல் நடத்துவதன் மூலமும் இனப்பிரச்சனைக்குத் தீர்வினை எட்டமுடியும் என்று ஆளும் தரப்பினர், எப்போதோ கிடப்பில் போட்ட அரசியல் தீர்வுப் பொதியை, தூசு தட்டி மீண்டும் எடுத்து பலதரப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆராயத் தலைப்பட்டுள்ளனர். ஏற்கனவே ஆளும் கட்சியினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுப் பொதி, அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளை உள்வாங்குவதற்காக, வெட்டிக் கொத்திச் சிதைக்கப்பட்ட பின்னர் எங்கோ ஒரு மூலையில் கிடத்தப்பட்டது.

இப்பொதி மீண்டும் ஆராயப்பட ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் இனிமேலும் மாற்றங்களைப் பெறக்கூடும்.

ரணிலின் கூற்று

இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளுக்கு அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதாக அண்மையில் அறிவித்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காஇப்பொழுது ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். ஏற்கனவே பொதுஜன முன்னணி கொண்டு வந்திருந்த தீர்வுப் பொதியைத்தான் தான் ஆதரிக்கத் தயார் என்றும், இப்பொழுது நடைபெற்று வரும் ஆலோசனைகளினால் புகுத்தப்படும் திருத் தங்களுடன் கூடிய பொதியைத் தான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று சிகப்புக் கொடி காட்டியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, நோர்வே நாட்டு வெளிவிவகார அமைச்சர் நெற் வெல்லபெக், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யும் நோக்குடன் இலங்கை வந்திருந்தார். இவர் இங்கு வருவதற்கு முன்னர் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைக் கண்டு, இரு மணிநேரம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார் எனத் தெரிகிறது. இச்சந்திப்பின்போது, விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் அமைதிப் பேச்சில் ஈடுபடுவதானால் அதற்கான சில நிபந்தனைகளை விதித்திருப்பதாக உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் கூறுகின்றன.

இதேபோன்று நோர்வே அமைச்சரைச் சந்தித்த அரசாங்கத்தரப்பினரும் சில நிபந்தனைகளை முன் வைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

விட்டுக் கொடுத்தால்....!

இவ்விரு தரப்பினரும் எத்தகைய நிபந்தனைகளை விதித்திருப்பார்கள் என்பதை அவதானிகள் தாமாகவே உணர்ந்துள்ளனர். இரு தரப்பினரும் தத்தமது நிபந்தனைகளை ஓரளவாவது விட்டுக் கொடுக்க முன்வந்தால் மட்டுமே, நோர்வே நாட்டமைச்சரின் முயற்சி கைகூடும்; அமைதிக்கான பேச்சுவார்த்தைகளும் தொடங்கும்.

இது இவ்வாறிருக்க, "நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பரப்பி வரும் - தடை செய்யப்பட்ட -புலிகள் இயக்கத்துடன் எத்தகைய பேச்சுவார்த்தையும் நடத்தக் கூடாது" என்று பேரினவாத சக்திகள் இப்பொழுதே தூபமிடத் தொடங்கி விட்டதையும் எவரும் சிறிய விடயமாக எடுத்துவிட முடியாது.

எனவே, இந்நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை உருவாகும் இச்சந்தர்ப்பத்தில் மேற் கூறப்பட்ட முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் நீக்குவதற்கு முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நலன் விரும்பிகள் வேண்டி நிற்கின்றனர்.

'சண்'ணுக்கு எதிரான மாணவர் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழ்ப்பெண்களை இழிவுபடுத்தும் விதத்தில் தகவல் பிரசுரித்த கனடா-ரொரண்ரோவில் வெளியாகும் ஆங்கில நாளேடு 'ரொரண்ரோ சண்'ணுக்கு எதிராக மாணவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கடந்த 12ம் திகதி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

'கனடாவில் வாழும் தமிழ்ப் பெண்கள் தவறான முறையில் பணம் சம்பாதித்து இலங்கைப் போராளிகளுக்கு அப்பணத்தை அனுப்பி வருகின்றனர்' என்ற கருத்துப்பட 'ரொரண்ரோ சண்' தகவல் ஒன்றை வெளியிட்டமை குறித்தும், இது தொடர்பாக கனடாவில் பலத்த கண்டனங்கள் நடத்தப்படுகின்றன என்றும் கடந்த வாரம் முரசில் தெரிவித்திருந்தோம்.

இதனைத் தொடர்ந்து கடந்த 12ம் திகதி கனடாவில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள் ஒரு எதிர்ப்புப் பேரணியை நடத்தினார்கள். 3000 பேர் வரை கையொப்பமிட்ட ஒரு மகஜரையும் அப்பத்திரிகை பிரதம ஆசிரியர் மைக் ஸ்ரோபெல் (Mike Strobel) என்பவரிடம் கையளித்தனர். இம்மகஜரைப் பெற்றுக் கொண்ட அவர் இவ்வாறு, தனது வருத்தத்தை வெளியிட்டார்:

"வெளிப்படையாக கூறுவதானால் அவர்கள் ஆத்திரப்படுவதையிட்டு நான் எதுவும் குற்றம் சாட்டமாட்டேன்." எனவும் "மக்கென்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சில ஆத்திரமூட்டக்கூடிய குறிப்புக்களையே 'சண்' பத்திரிகை வெளியிட்டிருந்தது." எனவும், "தமிழ் மக்களில் பெரும்பாலானோர் சட்டத்தை மதித்து வாழ்பவர்கள்" எனவும், "அதை நாம் தெளிவாக குறிப்பிடவில்லை என்று மனம் வருந்துகிறோம்." (We're Sorry, if that wasn't made clear) சமாதான முறையில் கருத்துக்களை அவர்கள் வெளிப்படுத்தி உள்ளனர். "நாங்கள் இந்தவாரம் மீண்டும் அவர்களைச் சந்தித்து மேலும் உரையாட உள்ளோம்." என்றார். இப் போராட்டத்தில் மாணவ மாணவிகளின் 55 அமைப்புக்கள் கலந்து கொண்டன.

'பாஸ்' முறை உடனடியாக அமுலுக்கு வராது!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தென்னிலங்கைக்கும், நாட்டின் இதர பகுதிகளுக்கும் செல்வதாயின் பாதுகாப்புப் படையினரிடமிருந்து 'பாஸ்' பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு உடனடியாக அமுலுக்கு வராது என்று தெரிகிறது.

இந்தவித பாஸ் முறை இந்த மாதம் 15ஆம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டு வரப்படவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவித்தல் வெளியானதிலிருந்து மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டப் பொது மக்களும், பொது நல அமைப்புக்களும், பா.உக்களும், சட்டத்தரணிகளும் பல்வேறு தரப்பினரும் அரசுக்கு பலத்த எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இதனாலேயே இந்தவித 'பாஸ்' முறை தற்போதைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

இதனிடையே 15ஆம் திகதி பாஸ் முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டால், தாம் பெரும் நெருக்கடியை எதிர் நோக்க வேண்டி வரும் என்பதைக் கருத்திற் கொண்டு தமது வெளியிடப் பயணங்களைக் கூடுமானவரை மக்கள் தவிர்த்து வருகின்றனர்.

இதனால் போக்குவரத்திலீடுபடும் பஸ்களில் குறைந்தளவு பயணிகளே பயணம் செய்வதாக கிழக்கின் பஸ் டிப்போ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

'நியாப்' நியமனங்களில் முறைகேடுகள்!

(காரைதீவு நிருபர்)

உலக வங்கியினுதவியுடன் அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 'நியாப்' திட்ட நியமனங்களில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமனம் பெற்றவர்கள் போட்டிப் பரீட்சையோ நேர்முகப் பரீட்சையோ இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் எம்.சங்கரிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டுள்ளனர்.

மாகாண உயரதிகாரியொருவரின் சிபார்சில் வந்த ஒருவரே இத்தகைய வேலைகளைச் செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை மேற்படி 'நியாப்' திட்டத்திற்கென முறைப்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை மூலம் நியமனமான சில பொறியியலாளர்களும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களும் எவ்வித காரணமுமில்லாமல் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை ஆச்சரியப்படுத்திய இச்செயலால் அவர்கள் விரக்தியுற்றுள்ளனர்.

'நியாப்' திட்டப்பணிப்பாளராக பொறியியலாளர் ஒருவரே நியமிக்கப்படவேண்டும் என எம்.பீக்களும், பொது விவசாய ஸ்தாபனங்களும் கோரிவருகின்றனர். மாகாண ஆளுநர் உரிய பதில் தெரிவிக்கவில்லையென அவர்கள் கவலையடைந்துள்ளனர்.

பொலிசாரின் உடற்பசிக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலை மாணவன்

பாடசாலைச் சிறுவன் ஒருவனை இரண்டு பொலிஸ்காரர்கள் முறைகேடான உறவுக்கு பயன்படுத்தியுள்ளார்கள் என்ற குற்றச் சாட்டு மூதூரில் எழுந்துள்ளது.

மூதூர் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பதினொரு வயதுச் சிறுவன் கடந்த வெள்ளியன்று பிற்பகல் மூன்றரை மணியளவில் தனது பாடசாலை வளவுக்குள் விளையாட வந்த வேளையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

பாடசாலை வளவுக் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸார் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைத் தனியே அழைத்து, மறைவான இடத்துக்குக் கொண்டு சென்று தவறான நடவடிக்கைக்கு உட்படுத்தினராம்.

இச் சம்பவம் பற்றி பொலிஸ் மேலிடங்களுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகின்றது.

இரண்டு அணி வகுப்புகள் இடம் பெற்ற போதிலும் சிறுவனால் சரியான நபர்களை அடையாளங்காட்ட முடியவில்லை. மேலும் பொலிசார் விசாரணைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறார்கள்.

11ம் கொலனி பொலிஸ் முகாமை இடமாற்றக் கோரிக்கை!

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள 11ம் கொலனியில் கடந்த 29.01.2000 அன்று அமைக்கப்பட்ட பொலிஸ் காவல் முகாமை அகற்றுமாறு மட்டக்களப்பு மாவட்ட த.வி.கூ.எம்.பி.யோசப் பரராஜசிங்கத்திடம் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 11ம் கொலனி தமிழ், சிங்கள மக்கள் கூட்டாக இணைந்து கையெழுத்து வேட்டை நடாத்திப் பெற்ற மகஜரை எம்.பியிடம் கையளித்தனர்.

அம்பாறை மாவட்ட த.வி.கூட்டணி பிரமுகர் எம்.மயில்வாகனத்தினூடாகவே இக்கோரிக்கை அனுப்பிவைக்கப்பட்டது.

அம் மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"நாம் 1990இல் இடம்பெற்ற இனக்கலவரத்தில் வீடுவாசல்களையிழந்து அநாதைகளாக வெளியேறினோம். பின்பு ஒருவாறாக 1995இல் மீண்டும் குடியேறி குச்சுக் குடிசைகளில் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்து வந்தோம்.

இந்நிலையில் கடந்த 29.01.2000 அன்று திடீரென எமது பிரதேசத்தில் பொலிஸ் சோதனை காவல் முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு பாதுகாப்பு வழங்கவே இம்முகாம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அப்படியானால் அவர்கள் வாழும் பகுதியில் இம் முகாமை அமைக்கட்டும்.

எமது பகுதியில் இந்த முகாம் பல பிரச்சனைகளை ஏற்படுத்தும். எனவே நாம் வெளியேறாமலிருக்க வேண்டுமானால் இம் முகாமை அகற்றுங்கள்!" இவ்வாறு அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொரண்ரோ தொழிற்சாலையில் தமிழ்த் தொழிலாளி மரணம் சக தொழிலாளர்கள் வெளிநடப்பு

கனடா-ரொரண்ரோ நகரின் வெளிப்புறமாக அமைந்துள்ள ஒரு தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கையில், இலங்கைத் தமிழர் ஒருவர் தவறிவிழுந்தார். தொழிற்சாலை நிர்வாகத்துக்கு விவரம் தெரிவிக்கப்பட்டும் உரிய அவசர நடவடிக்கை எடுக்கப்படாமல் அசிரத்தையாக இருந்தமையால் அவருடைய உயிர் பிரிந்தது. தொழில் கொள்வோரின் சிரத்தையின்மையால் ஆத்திரமடைந்த சக தொழிலாளர்கள் வெளிநடப்புச் செய்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

யாழ் உடுவில், கற்பகுணையைச்சேர்ந்த 34 வயதுடைய பத்மநாதன் கமலநாதன் (கமல் என்பவர் 'கனெக் கிச்சின்ஸ்' (CANAC KITCHENS) என்ற தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தார். கடந்த 10ம் திகதி பகல் அவர் கடமையிலீடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்துவிட்டார். தொழிற்சாலை நிர்வாகத்துக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டும் எவரும் சிரத்தை காட்டவில்லை. இதனால் அவர் அவ்விடத்திலேயே மரணமானார். உடனடியாக அம்பியுலன்ஸ் தருவித்து, அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தால் அவர் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்.

இம்மரணம் சம்பந்தமாக தொழில் அமைச்சும் மரண விசாரணை அதிகாரியும் விசாரணை நடத்தி வருகின்றனர். இருப்பினும் இம்மரணத்துக்கான காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை.

சுமார் 600 தொழிலாளர்கள் பணிபுரியும் இத்தொழிற்சாலையில் 200 பேர்வரை இலங்கைத் தமிழ்த் தொழிலாளர்கள். காலஞ்சென்ற திரு.கமலநாதன் திருமணமானவர். இரு குழந்தைகளுக்குத் தந்தை.

கோப்ரல் சலீம் சூட்டுக்குப் பலி

பெப்ரவரி 13ம் திகதி இரவு 9.45 மணியளவில் முதூர் நகரில் வைத்து இராணுவக் கோப்ரல் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சலீம் என்றழைக்கப்படும் கோப்ரல் தஸ்லீம் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

ஜாயா வீதியிலுள்ள தனது இல்லத்தில் நண்பர்கள் புடைசூழ, இருந்த சமயம் அங்கே வந்தவர்கள் சலீமை சுட்டுக் கொன்று விட்டு மறைந்து விட்டனர்.

சலீம் ஸ்தலத்திலேயே மரணமானார். அவரது இரு நண்பர்கள் காயமடைந்துள்ளனர்.

மாணவர்களைக் குழப்பும் பாடநூல் தடை செய்யுமாறு கோரிக்கை

தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் 7ம் வகுப்பு மாணவர்களுக்கான 'சமூகக் கல்வியும் வரலாறும்' என்ற பாட நூலில் எழுத்துப் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. ஏனைய மதங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இடம் பெறாமல் பௌத்த மதம் பற்றிய வரலாறு மட்டுமே இந்நூலில் இடம் பெற்றுள்ளது. ஆகவே இந்நூல் மாணவர்களுக்குப் பெரும் குழப்பத்தையே விளைவிக்கும் என்பதால் இந்நூலை பாவனையிலிருந்து நீக்கிவிடுமாறு இல.தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி உயர்கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொண்டுள்ளது. சங்க செயலர் த.மகாசிவம் அமைச்சின் செயலர் அன்ரூடி சில்வாவுக்கு அனுப்பிவைத்த மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"இந்த நூலில் சராசரி ஒரு பக்கத்தில் 15க்கும் மேற்பட்ட பல்வேறுவகையான பிழைகள் காணப்படுகின்றன. 'எருமையின் படத்திற்கு எருது' என அடிக்குறிப்பிட்டுள்ளது.

அட்டைப் படத்திலுள்ள படங்களில் இந்துகோயிலின் படம் சிறிதாக வரையப்பட்டுள்ளது.

72 பக்கங்கள் கொண்ட இந்நூலில் 27 பக்கங்கள் சிங்கள பௌத்த வரலாறு தொடர்பாகவேயுள்ளது. அதாவது நூலின் 37.5% சிங்களபௌத்த வரலாற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனையவற்றுக்கு இடமில்லை.

சொற்பிழைகள் கருத்துப்பிழைகள், இலக்கணங்கள் தவறான எண்ணக் கரு, கருத்து முரண்பாடு கருத்துத் திணிப்பு என்பன பரவலாக உள்ளன.

இது மாணவரின் கல்வியைச் சீரழிக்கும். எனவே உடனடியாக தடை செய்க!"

'நியாப்' திட்டப் பணிப்பாளராக பொறியியலாளரை நியமிக்கவும்!

(காரைதீவு நிருபர்)

"வடக்கு-கிழக்கு மாகாணசபை தரம் பெற்ற பொறியியலாளர்களை ஓரங்கட்டி வருவதேன்? அம்பாறை மாவட்ட 'நியாப்' திட்ட பணிப்பாளராக பொறியியல் சேவையைச் சாராத ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதை எமது சங்கம் வன்மையாக ஆட்சேபிக்கிறது. உடனடியாக அப்பதவிக்கு சிரேட்ட பொறியியலாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்."

இவ்வாறு தேசிய விஞ்ஞான தொழில் நுட்ப பொறியியல் தொழில் சார்ந்தோர் சங்கம் (நுபெறல்) ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம் மகஜரொன்றை வழங்கியுள்ளது.

மேற்படி சங்கத் தலைவர் எந்திரி பி.தயாரத்ன, செயலாளர் எந்திரி.கே.எம். எஸ்.பி.ரெர்கோகம ஆகியோர் கையெழுத்திட்டு இம்மகஜரை அனுப்பியுள்ளனர்.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- 'நியாப்' திட்டம் செயற்படுத்தப்படும் வவுனியா, மன்னார், திருமலை, அனுராதபுரம், பொலநறுவ, மட்டக்களப்பு, மொனராகலை, புத்தளம் போன்ற மாவட்டங்களில் திட்டப் பணிப்பாளராக பொறியியலாளர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் ஏனிந்த விதிவிலக்கு என்று புரியவில்லை! இதன் உள்நோக்கம் புரியாத புதிராகவுள்ளது.

ஏலவே இப்படியான நடவடிக்கையொன்றினால் எமது எந்திரி ஒருவர் மன விரக்தியடைந்து மாகாணத்திற்கு வெளியே சென்றுள்ளார். எனவே அத்தகைய நிலைக்கு ஏனையோரையும் தள்ள வேண்டாம் எனக் கோருகிறோம்!"

கல்முனையில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சங்கம் உதயம்!

(காரைதீவு நிருபர்)

கல்முனைக் கல்வி மாவட்டத்தில் கடமையாற்றும் கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஒன்று சேர்ந்து சங்கமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கு 'கல்முனைக் கல்வி மாவட்ட கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சங்கம்' என பெயரிட்டுள்ளனர். இச்சங்கத்தில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று வலயங்களைச் சேர்ந்த 37 பணிப்பாளர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 13ம் திகதி கல்முனை மஃமூத் மகளிர் கல்லூரியில் உ.க.பணிப்பாளர் ஏ.எல்.எம். முக்தார் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக இசட்.எம்.நதீர், பிரதி தலைவர்களாக வி.ரி.சகாதேவராஜா, ஏ.எல்.எம். அமீன், செயலாளராக ஆர்.சண்முகநாதன், நிருவாகச் செயலாளராக ஏ.எல்.எம்.முக்தார், பொருளாளராக ஏ.எம்.ஹுசைன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நிருவாக சபை உறுப்பினர்களாக கே.செல்லத்துரை, எம்.ஜேராசிக், என்.செல்வநாதன், ஏ.எல்.எம். முபாறக், வி.சுப்பிரமணியம், ஏ.அலாவுதீன், எஸ்.செல்லத்துரை, கே.எம். நஜிமுதீன், ஏ.பி.சரீப்தீன் ஆகியோர் தெரிவானார்கள்.

தமது பதவியில் உறுதிப்படுத்தல் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை அணுகுதல், தமக்கு இதுவரை வழங்கப்படாதிருக்கும் விசேட கொடுப்பனவைக் கோரல்; கல்விச் சேவை ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்த்தல் போன்ற முக்கிய தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

விரைவில் அம்பாறை மாவட்ட எம்.பி. சட்டத்தரணி, யூ.எல்.எம். மொகைதீனுடனான கலந்துரையாடலொன்றை சங்கம் மேற்கொள்ளவுள்ளது.

தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM SOCIAL AND SPIRITUAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம்காதல,கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொலலமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காணடம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து தூனபம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

அயுர்வேத மருத்துவர் "பாலு சோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை, நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ;பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேறிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"

அடையாள அட்டை

அனைவரும் வாசியான ரோசினி செல்லையா என்பவரின் 538372196 இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முரசு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் எமது அலுவலகத்துக்கு ஆதாரங்களுடன் வந்து இதனைப் பெற்றுக்கொள்ளலாம்!

-ஆசிரியர்-

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி மருத்துவ நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான **Dr.R. தியாகராஜன் DHMS, AMRSH (LON)** இலங்கை விஜயம் செய்யும் நாட்கள் **17.02.2000-22.02.2000** நீரிழிவு, ஆஸ்துமா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

ஹோட்டல் கிரீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி
தொலைபேசி: 585592-581986

புத்தாயிரமாம் ஆண்டில்
Bright Book Centre (Pvt) Ltd

கல்விப் பணிகளில் இணைந்து
உங்கள் தகைமைகளையும்
வேலையையும்பெற்றுக்கொள்ள
வாழ்த்துகிறது

Bright - இன்
தபால் மூலக் கல்வித்திட்டம்

* 90 Days Spoken English
* Spoken Sinhala
* Spoken Tamil
* Business English
* Method of Computerised Book Keeping & Accountancy (MCBA)
* Nursery Teacher Training Coures (NTTC)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.
BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, First Floor, C.C.S.M. Complex
Colombo - 11. T.P. 434770

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (மாமா மாமி அக்கா)

தோற்றம்:
13.03.1920

மறைவு:
03.03.1999

திதி
22.02.2000

வள்ளலூரில் பிறந்து வளமான வாழ்க்கை வாழ்ந்து அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து அன்பு ஊட்டி வளர்த்து மங்காப் புகழுடன் மறைந்த எம் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல் : மகன் Mrs. A.Srikantha. No.46 St.Marys Road. Mattakkuliya Colombo - 15.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 22 ✣ 06 ✣ 1934



இறப்பு 17 ✣ 01 ✣ 2000

அமரர் சு.செல்வநாயகம்

பனிப்புலம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகஸ்தர் திரு.சுப்பையா செல்வநாயகம் காலமானார். இவர் சுப்பையா-அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சின்னையா- தெய்வானைப்பிள்ளை.

தம்பதியினரின் மருமகனும் ஆவார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகுமாரன் (ஜெர்மன்), ஜெயக்குமாரன் (இலங்கை), செயக்குமாரன் (ஜெர்மன்) ஸ்ரீகுமாரன் (ஜெர்மன்), உதயக்குமாரன் (ஜெர்மன்), தேவி (ஜெர்மன்), ஆகியவர்களின் அன்புத்தந்தையும் ஸ்ரீதேவி (இலங்கை), அம்பிகாதேவி (இலங்கை), சுரேஸ்குமார் (ஜெர்மன்), சாந்தாதேவி (இலங்கை) ஆகியோரின் மாமனாரும் சிவகுரு, ஸ்ரீ குமாரவேல், லீலாவதி, தாய்வாணி, வாழ்வுமலர் (கனடா) ஆகியோரின் சகோதரரும் தங்கராசா (இலங்கை), சின்ராசா (ஜெர்மன்), பாலசுந்தரம் (கனடா), சந்தசாமி (டென்மார்க்), நவரத்தினம் (சவூதி), மீனாம்பாள் (இலங்கை) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமைக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும். மற்றும் சகல விதத்திலும் எமக்கு உதவியவர்களுக்கும், எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, 16.02.2000 அன்று எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மஹாசக்தி மருத்துவம்

YOGA HOMOEOPATHY - INDIAN MEDICAL RESEARCH & SERVICES

"எல்லாப்புகழும் இறைவனுக்கே"

யோகாசனம்-பூசை-தியானம், பிராத்தனை
அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட புனித சேவை ஸ்தானம், பதிவு இல: HA14/B7/176 குருசுக்தி நிலையத்தின் பிரதமகுரு டாக்டர்- "மந்திரயோகி" (யோகி-டாக்டர்-T.மயில்வாகனம்) **YOGI-DR.T.MYLVAGA NAM.**
[D.Ac-R.H.M.P(CEY) M.B.B.S.H (இந்தியா)] சுகாதார அமைச்சின் பதிவு, இல H061 (CEYLON) தீவசக்திகளினால் ஏற்பட்ட தீராத நோய்கள், தகாத உறவு, போதை வஸ்துப்பாவனை, குடும்பப்பிரிவு, காதல், திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகள், கணவன்-மனைவி குடும்பப் பிரச்சனைகள், தாமபத்தியக் குறைபாடுகள் (பாலியல் பலவீனம்) பயம், தாழ்வு மனப்பான்மை, மனநோய் (மனச்சிக்கல்) தீராத தலை இடி, வேறு நோய் பிரச்சனைகளை சீன அக்குப்பங்சர்-ஜேர்மன் ஹோமியோபதி இந்திய மாற்று மருத்துவ மனோதத்துவ, மாந்திரீக மனோவசிய, தெய்வீக வசியயந்திர, சாந்தி பரிகாரங்களினால் நேரில் வந்து தீர்த்துக் கொள்கிறார்கள். வரமுடியாதவர்கள், கடல் கடந்த வெளிநாட்டவர்கள் தபால், தொலைபேசி, ;பக்ஸ், ஈமெயில் மூலம் தொடர்பு கொண்டு தபால் மூலம் பெற்று, இன்றவன் நாட்டத்தோடு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

"சீர்டிவாவா பாதசரணம்"

இரகசியங்கள், உண்மையாக பாதுகாக்கப்படுகின்றன. சகல ரோகங்களைத் தீர்பதற்கும், நன்மையான மாந்திரீக வசிய விடயங்களுக்கு மாத்திரமே நாடவேண்டிய விலாசம்.

GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
KALLADY- BATTICALOA.(P.O) SRILANKA
FAX-009465237 96E.MAIL No-bescom @ vinet lk
தொ.பே.இ: 065-24872

கொழும்பில் குறிப்பிட்ட திகதிகளில் சந்திக்க விரும்பினால் விபரம் அறிந்து முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.



அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு * இழுப்பு * இளைப்பு *மாய்ச்சல்
* முச்சுத்தட்டல் * மண்டைச்சளி *நெஞ்சுச்சளி *தடுமன்
* இருமல் * கண்கடி *மூக்கடைப்பு * பீனிசம்
* தலைவலி * தும்மல் *நாசிஅரிப்பு *மூக்கால்நீர்வடிதல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

07.10.99 தீபாவளி நாள் விரகேரி பேப்பரில் வெளிவந்தது

அஸ்மா நோயைக் குணப்படுத்திய டாக்டருக்கு நன்றி

வாழ்க்கையின் வசந்தமான காலங்களில் களித்திருந்த நான், நாளடைவில் உணவிருந்து உண்ண முடியாமலும், உறைவிடம் இருந்து உறங்க முடியாமலும், அண்டை வெளி எல்லாம் வளி(காற்று) இருந்து சுவாசிக்க முடியாமலும், பொருளிருந்து நிம்மதி இல்லாமலும், அஸ்மா (தொய்வு- இழுப்பு) நோயின் கொடுமையால் மனம் வெறுத்த நிலையில் இருந்த போது எனக்கு கருணையின் வடிவோடு, ஒரு தாயின் பரிவோடு, கண்டிப்பின் உருவோடு, மருத்துவத்தின் மகிமையோடு அறிவுரையளித்து, அருமருந்தளித்து, பல வருடங்களாக அவஸ்தைப்பட்ட என்னை இந்நோயில் இருந்து குணப்படுத்தி என் வாழ்வில் நம்பிக்கையெனும் ஒளி தீபம் ஏற்றி வைத்த இல 25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லேவினியா) கொழும்பு எனும் இடத்தில் வைத்தியம் செய்யும் வைத்திய கலாநிதி அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்களுக்கு, இந்நோயால் அவஸ்தைப்படும் பிற நோயாளர்களுக்கு இச் செய்தியை அறிவிப்பதன் மூலம் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.074-201582 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு சிகிச்சை அளிக்கப்படும். நாளையும், நேரத்தையும் பெற்றுச்செல்லவும். இப்படிக்கு P.ராஜன், 15, பராக்கிரம வீதி கொழும்பு -14.

ஒரு நாள் மருந்துடனேயே இரண்டரை வருடங்களாக இருந்த மாய்ச்சல் அறவே போய்விட்டது என்கிறார் காத்தான்குடியைச் சேர்ந்த முகமட் லத்தீப் என்பவர்.

டாக்டர் சுறாஜ்சோமசுந்தரம் Ph.D.(Ind); M.B.B.Sc.(Cey)
அஸ்மா சிகிச்சை நிபுணர் Govt. Reg. No: A 1553 (1970)

பார்வை இடப்படும் இடங்கள்

25, சில்வெஸ்டர் வீதி,கல்கிசை மவுண்ட்லேவினியா-(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர் காலி வீதி)

இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் மற்றும் பதிவு செய்த புதிய நோயாளர்களும் செவ்வாய்-வியாழன்-சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00மணி வரையும், தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00மணி வரையும் பார்வையிடப்படுவர்.
தொலைபேசி இல : 074-201582

44A, பாடசாலை அவெனியு, புகையிரத நிலைய(ஸ்ரேஷன்) வீதியூடாக,தெகிவளை.(கொழும்பு) (பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் தெகிவளைச் சந்தி)

இவ்விடத்தில் தொலைபேசி மூலம் பதிவு செய்யப்பட்டு நேரம் பெறப்பட்ட புதிய நோயாளர்கள் மட்டுமே திங்கள்-புதன்-வெள்ளிக் கிழமைகளில் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையும் இதே நாட்களில் இரவில் 9.00 மணி முதல்10.30 மணி வரையும் பார்வையிடப்படுவர்.
தொலைபேசி இல : 728767

காலநிலை காரணத்தால் தற்சமயம் தினமும் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் மேலதிக நாட்களிலும் மேலும் ஒரு புதிய இடத்திலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தூர மாவட்டத்திலுள்ள புதிய நோயாளர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும், நேரத்தையும், இடத்தையும் பதிவு செய்து பிரயாணத்தை ஆரம்பிக்கவும.

அவசர தொலைபேசி இலக்கம்: 078-650516
E-mail - drsuraj@eureka.lk

மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்

நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD.ஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அர்ஷ்ட ஆடருக்கு உரியவரிடம் பார்ஸல் போய் சென்றடைய உலகலவிய நீதிமிகு பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மதைர நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571, 431137, 470615, 342463, 342464, 344831, 344832 இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை [illegible] ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் [illegible]காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தரண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
Dr. P. K. Samy (J.D.G.A.N) JP

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk

இன்னும் எமது சேவைகளை அறிய எமது இன்டர்நெட் வெப் தளத்தை நாடவும்
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

மனோதத்துவ வைத்தியம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கல்முனையில் மார்ச் 4,5ம் திகதிகளில்
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

வவுனியாவில் மார்ச் 11,12
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கொழும்பில் பெப்ரவரி 20 முதல் 27 திகதி வரை
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338163, 338166, 336165 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.

தீர்வுத் திட்டத்திற்கு தலையாட்டுவார்களா தமிழ்க் கட்சிகள்?

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு குறித்து சில முன்னெடுப்புக்கள் தற்போது முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வைத் தருகின்ற புதிய யாப்பினை வகுப்பதற்கான ஆராய்வுகளில் தற்போது அரசாங்கம் தீவிரமாக இறங்கியுள்ளது. அதில் இப்போது தமிழ்க் கட்சிகளுடனான ஆராய்வு நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால், இந்தப் பரபரப்பான பேச்சுகளுக்கு மத்தியில் உண்மையில் இங்கு என்ன ஆராயப்படுகிறது என்று சற்று உன்னிப்பாக நோக்கினால், அவநம்பிக்கைதான் தலைதூக்குகிறது. ஏனெனில் இப்போது ஆராயப்படும் விடயங்கள் இனப்பிரச்சனைக்கான முழுமையான தீர்வு குறித்த விடயங்களாக இல்லை. அவற்றின் ஒரு பகுதியாக,- அரசாங்கம் பேச எடுத்துக்கொண்ட சில விடயங்கள் மட்டுமே முழுமையான தீர்வுத் திட்டம் குறித்து ஆராய இங்கு இடம் கிடைக்குமா என்பதே கேள்வியாகவுள்ளது. அவ்வாறு அல்லாமல், அரசாங்கம் பேசுவதற்குக் குறித்துக் கொடுத்த விடயங்களை மட்டுமே பேசுவதால், ஒரு வேளை அவற்றில் சாதகமான உடன்பாடுகள் எட்டப்பட்டால்கூட பூரணமாக அமையாது. ஏனெனில் பேசப்படாத பல விடயங்களில் தீர்வுக்கான வழிகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

தீர்வு ஆலோசனைகள் என்ற விடயம், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்ப கட்டத்திலேயே-1995ம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவினால் முன் வைக்கப்பட்டிருந்தது. அப்போது முன்வைக்கப்பட்ட தீர்வு ஆலோசனைகளில் பெரும்பாலானவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடியனவென தமிழ்க் கட்சிகள் பலதும் வரவேற்றிருந்தன. எனினும் அவற்றிற்குக்கூட சில திருத்தங்கள் செய்யப்பட்டாலே பூரணமான தீர்வாக அமையுமெனக்கூறி அவை குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென தமிழ்க் கட்சிகள் கோரியிருந்தன. அதேவேளை இத்தீர்வு ஆலோசனைகளிலிருந்த குறைபாடுகளை ஏற்கமுடியாத விடுதலைப்புலிகள் அத்திட்டத்தையே நிராகரித்திருந்தனர்.

அதனால், செழுமைப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை அத்தீர்வுத் திட்டம் தாங்கி நின்றது. ஆனால் நடந்தது தலைகீழாக இருந்தது. அதனைச் செழுமைப்படுத்தி உயர்த்தி செல்வதற்குப் பதிலாக மலினப்படுத்தித் தாழ்த்திச் செல்லும் செயற்பாடே பின்னர் நிகழ்ந்தது.

அத்தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முன்றில் இரண்டு பெருபான்மை வாக்குகள் தேவையென்றும், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பும் தேவையென்றும் காரணங்காட்டி, ஐக்கிய தேசியக் கட்சியினரைத் திருப்தி செய்யும் பல மாற்றங்களை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புகுத்த ஆரம்பித்தார். ஐ.தே.க.வை ஒருவாறு இத்தீர்வுத் திட்டத்தை ஏற்கச் செய்துவிடலாமென்ற நம்பிக்கையை ஒரு புறம் காட்டிக் கொண்டு, இதிலிருந்த பல விடயங்களை மாற்றிச் செல்லலானார். ஐ.தே.க.வோ, பேராசிரியருக்குப் போக்குக் காட்டிக் கொண்டு, இயன்றவரை இழுத்தடித்து, தீர்வுத்திட்டத்தை நன்றாக மலினப்படுத்த வகைசெய்துவிட்டு இறுதியில் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

(இப்போது ஆதாரவளிக்கத் தயாரெனக் கூறுவது வேறுவிடயம்) இதேவேளை அரசாங்கத்தில் கூட்டுச் சேர்ந்திருந்த வசதியான சூழலையும், தேர்தல் பேரங்களையும் பயன்படுத்தி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தரப்பினருடன் இணக்கத்துக்கு வராமலே, நேரடியாக அரசாங்கத்தில் செல்வாக்குச் செலுத்தி தனக்கான முஸ்லிம் தனியலகுக்கான ஏற்பாட்டையும் செய்துகொண்டது.

ஆக, இந்த இனப்பிரச்சனையின் தீர்வு யாருக்கு அதி அத்தியாவசியமானதாகத் தேவைப்படுகிறதோ, அந்தத் தமிழ்த் தரப்பினரின் கருத்துக்களும், அபிலாஷைகளும்தான் இறுதியில் இங்கு கைவிடப்பட்டுப் போயின.

இலங்கையென்ற நாடு இனப்பிரச்சனையென்ற கேட்டினால் இரண்டுபட்டுக் கொண்டு செல்வதைத் தடுப்பதென்றால் அதன் மறுபகுயினரான தமிழ்த் தரப்பினரைத் திருப்தி செய்ய வேண்டியதே முதன்மையான காரியமாக இருக்க, இங்கே அவர்களை விடுத்து ஏனைய தரப்பினரையே திருப்தி செய்யும் வகையில் இவ்வரசியல் தீர்வுத்திட்டம் மேலும் மலினப்படுத்தப்பட்டது. அப்படி மலினப்படுத்தப்பட்ட இத் தீர்வுத்திட்டம்கூட ஐ.தே.க.வால் நிராகரிக்கப்பட்டுவிட பல காலமாகக் கிடப்பில் போடப்பட்டது. இதற்கிடையே மறுபுறமாக யுத்த முனைப்புக்கள் பெருகத் தொடங்கின. யாழ்ப்பாணத்தைப் புலிகளிடமிருந்து மீட்கும் பாரிய இராணுவ நடவடிக்கையும் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்குத் தரைப்பாதை திறக்கும் மற்றொரு பாரிய இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் அரசியல் தீர்வுக்கான அரசின் ஆர்வம் குறித்து சந்தேகங்கள் தலைதூக்கின. தமிழ்த் தரப்பினரிடையே அதிருப்திகள் மேலோங்கின.

இந்நிலையில்தான் இறுதியாக அரசாங்கம் தனது தீர்வுத்திட்டத்தினை 1997 ஒக்டோபரில் முன்வைத்தது. இந்தத் தீர்வுத் திட்டமோ முன்னர் வெளிப்படுத்தப்பட்டதைவிட பலபடி மலினப்படுத்தப்பட்டதாகவே இருந்தது.

சரி, இப்போது அதைத்தான் தமிழ்க் கட்சிகளுடன் ஆலோசிக்கின்றார்களாக்குமென எண்ணினால், அதுதான் இல்லை! இப்போது ஆலோசிக்கப்படும் விடயங்கள் வேறு.

புதிய ஜனாதிபதி தேர்தலில் உயிராபத்துக்கு மத்தியில் வெற்றிகண்ட ஜனாதிபதி, தான் எவ்வாறாயினும் இம்முறை இவ்வினப்பிரச்சனைக்கான அரசியற்தீர்வை நிறைவேற்றியே ஆகுவாரென உறுதி தெரிவித்திருந்தாரல்லவா? அதன்படி இதற்குத் தீர்வுக்கான நான்கு கட்டங்களிலான ஒரு வழிமுறையை அவர் வகுத்தார்.

முதற்கட்டத்தில் அரசாங்கக் கட்சிகளுக்குள்ளே இத்தீர்வுத் திட்டத்தை ஆராய்வது; அடுத்து தமிழ்க் கட்சிகளுடன் ஆராய்வது; பின் ஐ.தே.க.வுடன் ஆராய்வது; இறுதியாகப் புலிகளுடன் ஆராய்வது என்ற கட்டங்கட்டமான நகர்வினை மேற்கெள்ளத் தீர்மானித்தார்.

இதில் முதற்கட்டமான, அரசாங்கக் கட்சிகளுக்குள் ஆராயும் பகுதியை முடித்துக் கொண்டு, தற்போது, தமிழ்க்கட்சிகளுடன் ஆராயும் படலத்தை ஆரம்பித்துள்ளார்.

அதற்கென்ன, நல்லதுதானேயென நாம் கருதலாம். ஆனால் இங்கே ஆராய்வுக்கு முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் எவையென்று பார்க்கும்போதுதான் அதிர்ச்சியேற்படுகிறது.

அதாவது, ஆரம்பத்தில் சந்திரிக்கா முன்வைத்த தீர்வு ஆலோசனைகளை, மலினப்படுத்தி பின்னர் அமைச்சர் பீரிஸால் வழங்கப்பட்ட 1997ம் ஆண்டுத் தீர்வுத்திட்டம் இருக்கிறதல்லவா? அதனை இப்போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் ஆராய்ந்தார்களல்லவா? அப்படி ஆராய்ந்தபோது அதற்கும் சில திருத்தங்கள் செய்தார்கள். அந்தத் திருத்தங்களைத்தான் தற்போது தமிழ்க்கட்சிகளுடன் ஆராய எடுத்து வந்திருக்கிறார்கள். கவனிக்கவும்- திருத்தங்களை மட்டுந்தான்- அசலையல்ல!

எப்பேர்ப்பட்ட கணக்கில் தமிழ்க்கட்சிகளை இங்கே அவர்கள் கருதியிருக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்த இனப்பிரச்சனைக்கான தீர்வென்பது தமிழ்த் தரப்பினரின் முழு மனதுடனான சம்மததுடன்தான் ஏற்பட முடியுமென்பது அடிப்படையான விடயம். அப்படியிருக்க, அதுகுறித்து வகுத்த தீர்வுத் திட்டத்தில் அரசாங்கக் கட்சிகள் ஏற்றுக் கொண்ட சகலவிடயங்களையும் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அவற்றை ஆராயத் தேவையில்லை; திருத்தங்களை மட்டுமே அவர்களுடன் ஆராய்ந்தால் போதுமென்ற கணக்குப் போட்டுக்கொண்டு இங்கு வந்திருக்கிறார்கள்.

இதில் நாம் அரசாங்கத்தை அதிகம் தப்புச் சொல்வதிலும் அர்த்தமில்லை, ஏனென்றால் அரசாங்கம் அவ்வாறு தம்மைக் கணிக்கும் விதத்திலேயே தமிழ்க் கட்சிகள் பலரும் நடந்திருக்கிறார்கள்.

அதாவது, தீர்வுத்திட்டம் தொடர்பான தமது தெளிவான நிலைப்பாட்டை ஏற்கனவே அரசாங்கத்திற்கு உணர்த்த அவர்களில் பலர் தவறிவிட்டார்கள். பொதுவாக யாவரும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றனரென்ற எண்ணப்பாட்டையே தோற்றுவித்திருக்கிறார்கள். தமிழ்ப் பத்திரிகைகளில் அதிருப்தி தெரிவித்து அறிக்கைகள் விட்டாலும், அரசாங்க உயர்மட்டங்களுடன் பேசும்போது தாம் ஆதரிப்பதாகவே காட்டிக் கொண்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி எந்த மாற்றுக் கருத்துக்களையும் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை ஏனைய ஐந்து தமிழ்க்கட்சிகள் சேர்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தார்கள். அத்தோடு ஈ.பி.டி.பி. 19 பக்கத் திருத்தமொன்றையும் முன்வைத்திருந்தது. ஆனால் அரசாங்கம் அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தமது திருத்தங்கள் தொடர்பான முனைப்பை அவர்கள் செயல்முறையில் வெளிப்படுத்தவில்லை.

இத்தீர்வுத்திட்டத்தை வகுப்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தரான காலம்சென்ற நீலன் திருச்செல்வமும் பங்காற்றியிருந்ததால் கூட்டணியினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்களென அரசாங்கம் கருத இடமிருந்தது. அவ்வாறே, அதில் 'எக்ஸிகியூட்டிவ் கமிட்டி' என்ற புதிய திருத்தத்தை அரசாங்கம் முன்வைத்தபோது, நீலன் முதற் கொண்டு எந்தக் கூட்டணிப் பிரமுகர்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென்பது ஒரு சிறந்த உதாரணம்.

எக்ஸிகியூட்டிவ் கமிட்டி எனும் நிறைவேற்றுச் சபையொன்று புதுமையான ஒரு சிபாரிசு.

அதாவது, பிராந்திய சபைகளில் போட்டியிடும் கட்சிகள் எடுக்கும் வாக்குகளின் விகிதாசாரத்துக்கேற்ப ஒவ்வொரு கட்சிக்கும் அமைச்சர் பதவிகள் தீர்மானிக்கப்படுமென்றும் இந்தக் கூட்டு அமைச்சரவைதான் பிராந்தியங்களை நிர்வகிக்குமெனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறான நிர்வாகம் செயற்பாடற்றதாகவே இருக்குமென்பது வெளிப்படை. எதிர்க்கட்சிகளும் அமைச்சரவையில் அங்கம் வகித்தால் அரசாங்க இரகசியங்களைப் பேணுவதும் கொள்கை வகுப்பதும் திட்டங்கள் தீட்டுவதும்- செயற்படுத்துவதும் குழப்பகரமானதாகிவிடும்.

இதுவே நல்ல வழிமுறையானால் அதனை முதலில் மத்திய அரசாங்கத்தில் செயற்படுத்திப் பார்த்துவிட்டு பின்னர் பிராந்தியங்களில் பிரயோகிக்கலாமல்லவா? ஆனால் அரசாங்கம் கபடத்தனமாக, மத்தியஸ்தத்தைத் தவிர்த்துக் கொண்டு பிராந்தியங்களிலேயே குழப்பத்தை உண்டுபண்ண முயற்சிக்கிறது. பிராந்தியங்களில் குழப்பமான நிர்வாகமிருந்தால் அவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டு அவற்றின் அதிகாரங்களை மத்திய அரசு கட்டுப்படுத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கும்.

இவ்வாறு பல்வேறு விடயங்கள் தொடர்பாக கடுமையான எதிர்ப்பை முன்வைக்காத காரணத்தினால், தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்திற்கு எதிர்ப்பில்லை என்ற எடுகோலை அரசாங்கம் மேற்கொண்டுவிட்டது. மொத்தமான தீர்வு விவகாரங்கள் பற்றி ஆராயாமல், அதன் பகுதியான, அரசாங்கக் கட்சிகள் முன்வைத்த திருத்தங்களைத்தான் தமிழ்க் கட்சிகளுடன் இப்போது அது ஆராயத் தலைப்பட்டுள்ளது. அவ்வாறு ஆராய எடுத்துக்கொண்ட திருத்தங்களைப் பார்த்தால் அவை மேலும் மலினப்பட்டுக்கிடக்கக் காணப்பட்டன.

இதுவரை ஆராயப்பட்டவற்றில் ஆளுநர் நியமனம், ஒற்றையாட்சியா சமஷ்டியா, காணி, மதசார்பின்மை குறித்த விடங்களில் சர்ச்சைகள் எழுந்திருந்தன.

முன்னைய வரைபில் ஆளுநர் நியமனமானது பிராந்திய சபை முதலமைச்சரின் சிபாரிசில் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படுமென இருந்தது. மாகாண சபைச் சட்டமூலத்திலும் அவ்வாறே பேணப்பட்டிருந்தது. இதனை இந்த அரசாங்கக் கட்சிகளின் திருத்தத்தில் திருடிவிட்டிருந்தார்கள். அதாவது முதலமைச்சரின் சிபாரிசு இங்கு நீக்கப்பட்டிருந்தது. இதனைத் தமிழ்க் கட்சிகள் வாதாடித்தான் திரும்பப் பெறவேண்டிய தாயிற்று. அதேபோல் ஆரம்பத் தீர்வுத் திட்டத்தில் ஒற்றையாட்சி முறைக்கு பதிலாக சமஷ்டி ஆட்சி முறையை ஒத்த சிபாரிசு அமைந்திருந்தது.

ஐ.தே.க. ஒற்றையாட்சியை மாற்ற எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து பேராசிரியர் பீரிஸ், அதனை 'கலைக்கப்படாத பிராந்தியங்களின் ஒன்றியம்' எனப் பெயர் மாற்றம் செய்தார். இதில் சமஷ்டி என்ற பதம் இல்லாவிட்டாலும் ஒற்றையாட்சி என்ற பதமும் நீக்கப்பட்டிருந்ததானது ஓரளவேனும் பாதகமில்லாததாய் இருந்தது. ஆனால் தற்போது இந்த அரசாங்கக் கட்சிகள் செய்துள்ள திருத்தத்தில் 'பிராந்தியங்களை உள்ளடக்கிய ஓர் ஐக்கிய அரசு என்ற மாற்றுப் பதம் பாவிக்கப்பட்டுள்ளது. (Republic of Sri-lanka Comprised Regions Within a United State) இது சுற்றி வளைத்து மீண்டும் ஒருவிதத்தில் ஒற்றையாட்சியை அர்த்தப்படுத்துவதாய் அமைந்து விடுகிறது. ஏனெனில் 'ஓர் ஐக்கிய அரசு' (A United State) என்ற ஒருமைப் பதத்திலான முடிவு ஒற்றையாட்சியை நோக்கியே இட்டுச் செல்கிறது. மாறாக 'ஐக்கிய அரசுகள்' (United States) என்ற பன்மைப் பதமாக அமைந்திருந்தால் பாதகமில்லாததாயிருக்கும்.

(அமெரிக்காவில் உள்ளதுபோல்) இந்தப் பெயர் பற்றிய போராட்டத்தில் தமிழ்க் கட்சிகள் எவ்வளவு தூரம் வெற்றியீட்டியிருக்கின்றனவென்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஜனாதிபதி பிரிக்கப்படாத பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற பெயரை ஏற்றுக் கொண்டுள்ளதாக அரசாங்கப் பத்திரிகைகள் தெரிவித்திருக்கின்றன. ஆனால் அவை இறுதியாக எழுத்துருவில் வரும் போதுதான் எவ்வாறு சொற்பிரயோகங்கள் அமைந்திருக்கின்றன என்பதைக் கண்டுகொள்ளலாம்.

இதைவிட, காணி தொடர்பான விடயத்தில் பிராந்தியங்களிலுள்ள அரச காணிகளை- மத்திய அரசு தேவைப்படுமிடத்து, பிராந்திய சபைக்கு அறிவித்துக்கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றிருந்த திருத்தத்தை, பிராந்திய சபைகளின் சம்மதத்தோடு பெற்றுக் கொள்ளலாமென மாற்றும்படி தமிழ்க் கட்சிகள் கோரியுள்ளன.

மதசார்பற்ற அரசாகப் பிரகடனப் படுத்தும் படியான கோரிக்கைக்கு ஜனாதிபதி அசைந்து கொடுக்கவில்லை. ஏற்கெனவே மதசார்பற்ற வகையில்தான் ஆலோசனைகளில் உள்ளதாகக் கூறி விடயத்தை சமாளித்து விட்டார். ஆனால் அரசாங்கத்தின் ஆலோசனைகளில் பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்படல் வேண்டுமென்றும், புத்தசாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டுமென்றும், புத்த சாசனம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரொருவர் இருத்தல் வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இது மதசார்பற்ற கொள்கையை மறுதலிக்கும் விடயமாகவுள்ளது.

இவ்விடயங்கள் குறித்துச் சிந்திப்பது ஒருபுறமிருக்க, மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் இன்னும் பார்வை செலுத்தப் படவில்லையென்பது மற்றையவிடயம்.

அதிகாரப் பரவலாக்கலா, அதிகாரப் பகிர்வா என்றவிடயத்தில் முடிவுகாணவேண்டியுள்ளது. பரவலாக்குவது என்பது மத்தியின் அதிகாரம் அப்படியே இருக்க அதை பிராந்தியங்களுக்கும் எடுத்துச் செல்வதாகவே அர்த்தப்படும். அதிகாரப் பகிர்வென்பது மத்தியின் அதிகாரத்தை ஏனைய பிராந்தியங்களுக்கும் பகிர்ந்தளிப்பதாகும். இனப்பிரச்சனையில் தேவைப்படுவது அதிகாரப் பகிர்வேயன்றி, பரவலாக்கலல்ல.

அதிலும் இனப்பிரச்சனைக்கான தீர்வென்ற அடிப்படையில் இங்கு தீர்வுகள் வகுக்கப்படவேண்டுமேயன்றி நிர்வாகப் பிரச்சனைக்குரிய முறையிலல்ல. இலங்கையிலுள்ள ஏனைய பிராந்தியங்களுக்கு அரசாங்கம் அதிகாரத்தைப் பரவலாக்க முற்பட்டால் அது அவர்களின் விருப்பம். எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அதே பரவலாக்கல் இனப்பிரச்சனைக்குமான தீர்வாக அமையாது. அது அவர்களில் நிர்வாகப் பிரச்சனை மட்டுமே. இனப்பிரச்சனைக்கான அடிப்படை அம்சங்கள் ஆராயப்பட்டு அவற்றுக்கான பிரத்தியேகமான தீர்வுகள் எமக்குத் தேவைப்படுகின்றன. அவை ஏனைய பிராந்தியங்களுக்கு அவசியப்படாதவையாகவும், வழங்க முடியாதவையாகவும் இருக்கலாம்.

போதும் கடைசியாக முன்வைக்கப்பட்டிருந்த தீர்வு யோசனைகளில் பெரும் குழப்பகரமான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு இணைவதாவென கிழக்கில் சர்வஜனவாக்கெடுப்பு வைத்து, அதில் இணைவதாக முடிவானால் முஸ்லிம்களுக்கான தென்கிழக்கு மாகாண சபைதானாகப் பிரியுமாம். (வடக்குக் கிழக்கை இணைப்பதானால் மட்டும் தேர்தல் தேவை தென்கிழக்கு மாகாண சபையைப் பிரிப்பதற்கோ தேர்தல் தேவையில்லையாம்-ஒருவேளை முஸ்லிம் மக்கள் வடக்கு கிழக்கோடு இணைந்து வாழ விரும்பினாலும் அவர்களின் விருப்பம் அறியப்படாமல் பலாத்காரமாகப் பிரிக்கப்பட்டுத்தான் ஆவார்களாம்)-இது முஸ்லிம் காங்கிரசை தாஜா பண்ணுவதற்கான ஏற்பாடு (தமிழ் மக்களுக்கு மட்டும் எந்தத் தாஜாவுமில்லை கூஜாவுமில்லை!) வடக்கு கிழக்கு பிரியும்படி தேர்தலில் தீர்ப்பானால் முஸ்லிம்களுக்கான தென்கிழக்குப் பிராந்தியம் அவசியமில்லையாம். அதாவது "நீங்கள் பிரிந்தால் நாங்கள் உங்களோடு சேர்ந்திருப்போம், நீங்கள் இணைந்தால் நாங்கள் உங்களைவிட்டுப் பிரிந்து செல்வோம்" என்று தமிழருக்குக் கூறும் நிலையை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் ஏற்பாடு இது. அத்தோடு வடக்கு கிழக்கு இணைந்து, முஸ்லிம்கள் பிரிந்து, தென்கிழக்கு மாகாணம் அமைந்தால், அங்குள்ள அம்பாறை மாவட்டச் சிங்கள மக்கள் பற்றியும் கரிசனை காட்டி, அவர்கள் அம்பாறைப் பிராந்தியமாக அமைவதா, அல்லது ஊவா பிராந்தியத்துடன் இணைவதா, என்று தீர்மானிக்கவும் ஒரு பிரத்தியேக சர்வஜன வாக்கெடுப்பு அங்கு நிகழ்த்தப்படுமாம்.

இவ்வளவு சிக்கலாகப் பிணைந்து பிணைந்து வகுத்த இந்த அலகு பற்றிய தீர்வில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் மட்டுமே கரிசனை காட்டப்படவில்லை. உண்மையில் தமிழ் மக்கள் இணைந்து வாழ்வதா என்ற கேள்வியல்ல இங்கு உள்ளது. ஏனெனில் அவர்கள் ஏற்கெனவே இணைந்துதான் வாழ்கிறார்கள். அவர்கள் ஏன் பிரிக்கப்பட வேண்டும் என்பதே கேள்வி.

இந்தக் கேள்விக்கு தமிழ்க்கட்சிகளுடனான அரசாங்கத்தின் ஆராய்வு என்ன பதிலைத் தரவுள்ளது என்பது அக்கறைக்குரிய ஒரு பிரதானமான விடயம்.

அதுமட்டுமன்றி அதிகாரப் பகிர்வில் பிராந்திய அரசாங்கத்துக்கான பட்டியல் பற்றி தெளிவான வரையறையும், அதிகாரங்களும் ஆராயப்பட வேண்டும். இதில் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் பிராந்திய நிர்வாகமென்று குறிப்பிடாமல், 'பிராந்திய அரசாங்கம்' என்ற பதத்தால் அடையாளப்படுத்தி அவ்வரசை அங்கீகரிக்க வேண்டும்.

பிராந்திய அரசாங்கத்துக்கான நிதியும், அதை ஒதுக்கீடுசெய்யும் மத்திய அரசாங்கத்தின் அதிகார பீடமும் தெளிவாக்கப்படல் வேண்டும். இதைவிட பிராந்திய அரசின் நிர்வாகம் பற்றியும் அதற்கான நிர்வாகிகளை வழங்குவதும், உருவாக்குவதும், கட்டுப்படுத்துவதும் பற்றிய விடயங்களும் ஆராயப்படல் வேண்டும்.

இன்னுமொரு விடயம் பிரதானமானது. இங்கு அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தில் சொல்லப்பட்டவை மட்டும் முக்கியமானவையல்ல; சொல்லப்படாதவையும் முக்கியமானவை. சொல்லப்படாதவையாவும் மத்திய அரசாங்கத்துக்குரியவையாகத் தானாகவே பொருள் கொள்ளப்பட்டுவிடும்.

தமிழ்க் கட்சிகள் இப்போது அரசாங்கக் கட்சிகளின் திருத்தங்கள் பற்றித்தான் கருத்துக்கூற அழைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கருத்துக்கூறுவது தவறல்ல. ஆனால், திருத்தங்களைத் தாண்டி முழுமையான அரசியல் தீர்வையும் ஆராய வேண்டும். முதன் முதலில் அரசாங்கம் வெளியிட்ட தீர்வு ஆலோசனைகளின் நிலைக்கு உயர்த்த வேண்டும். அதன்போது முன்னர் தமிழ்க் கட்சிகள் இத்தீர்வுத் திட்டத்துக்குச் சமர்ப்பித்திருந்த ஆலோசனைகளையும் உள்ளடக்க வேண்டும்.

அவ்வாறன்றி வெறும் தலையாட்டி பொம்மைகளாக அமர்ந்துவிட்டு வருவதற்கோ, அங்கு எதையும் ஆக்கபூர்வமாகப் பேசாது விட்டுவிட்டு வெளியே வந்து தாம் விட்டுக் கொடுக்கவில்லையென வீராப்புப் பேசுவதற்கோ இவர்கள் முனையலாகாது.

தலையாட்டுவார்களா, தர்க்கம்புரிவார்களா, என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். ஆனால் எது எப்படியானாலும் இவை புலிகளின் அபிப்பிராயத்திற்கு முன்வைக்கப்படும் போது ஏற்கக்கூடிய ஒன்றாய் இருந்தால் மட்டுமே சுமுகமாக நிறைவெய்தும். இல்லையேல்...?

-நரன்-

இந்தியாவின் காஷ்மீர் இதற்கு நல்ல உதாரணம். அங்கு ஏனைய மாநிலங்களைவிட விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அம் மாநிலத்தில் பிற மாநிலத்தவர் எவரும் காணி வாங்கவும் முடியாது, அம் மாநிலத்துக் குடிமக்களாகப் பதிவு செய்யவும் முடியாது. அதனால் அம்மாநிலத் தேர்தல்களில் வாக்களிக்கவும் முடியாது.

இத்தகைய வகையிலான பிரத்தியேக ஏற்பாடுகள் பல இனப்பிரச்சனைக்கான தீர்வில் அவசியப்பட்டு நிற்கின்றன. ஆனால் அவை பற்றி இங்கு பேச்சே இல்லை. பத்தோடு பதினொராவது பிராந்தியமாக (உண்மையில் ஏழோடு எட்டும் ஒன்பதாவதுமான பிராந்தியங்களாகப்) பொதுமைப்படுத்திவிடும் முனைப்பே இங்கு தெரிகிறது.

தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சனையென்ற ஒன்று இங்கு உண்டு என ஏற்றுக்கொண்ட முதலாவது ஜனாதிபதியாக இன்றைய ஜனாதிபதி கூறப்பட்டாலும், அவரது தீர்வுக்கான திட்டத்தில் அவ்வகையான பார்வை செலுத்தப்படவில்லை.

அத்தோடு அதிகாரப் பகிர்வென்பதற்கான அலகு என்ன என்ற விடயமும் இன்னும் தீர்வு காணப்படவில்லை. வடக்கு-கிழக்கு இணைந்த பிராந்தியமொன்றையே தமிழ்த் தரப்புகள் காலகாலமாக வலியுறுத்தி வந்தபோதும்,-தற்போதுள்ள மாகாண சபை அமைப்பில் கூட தற்காலிகமாக இணைந்த பிராந்தியங்களாகவாவது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற

~ஸ்பெஷல் ரிப்போர்ட்~

புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

இந்தியாவை எதிர்க்கத் துணிந்த முடிவு என்பது சாதாரணமான ஒன்றல்ல.

இந்தியா
ஒரு மிகப் பெரிய நாடு.
அதன் இராணுவம்
உலகின் நான்காவது
பெரிய இராணுவமென
வர்ணிக்கப்படுவது.

சின்னஞ்சிறிய இலங்கையிலுள்ள
சிறுபான்மை இனத்தைச் சார்ந்த
ஒரு போராளிக்குழு
இந்தியாவைச் சவால்விடுவதென்பது
எடுத்த எடுப்பில் எவராலும்
வேடிக்கையாகவே பார்க்கப்படலாம்.

ஆனால் அந்த வேடிக்கையை
விபரீதமென உணரவைக்கப்
புலிகளால் முடிந்தது.

இந்தியாவை எதிர்ப்பதென்பது
வெறும் இராணுவத்தை மட்டும்
எதிர்ப்பதாகக்கூட அமையாது.
இந்தியாவின் கௌரவத்தையும்
தன்மானத்தையும் எதிர்ப்பதாகிறது.

இந்திய-இலங்கை
உடன்படிக்கையில்
இந்தியாவுக்குள்ள
கடப்பாட்டை எதிர்ப்பதாகிறது.

இந்தியா இலங்கைக்குள்
தலையிடுவதற்கு உரித்துடைய
சமாதான நோக்கம்கொண்ட
நல்லெண்ணவாதிகளென்ற
தோற்றப்பாட்டை எதிர்ப்பதாகிறது.

அதனால்,
தமிழீழ விடுதலைக்கோ
தமிழ் மக்களின் உரிமைகளுக்கோ
இந்தியாவின் உதவி
அத்தியாவசியமானதென
வலியுறுத்தி வந்துள்ள
கோட்பாடுகளை எதிர்ப்பதாகிறது.

சர்வதேச அரங்கிலும்
ஐக்கிய நாடுகள் சபையிலும்
இந்தியாவுக்குள்ள
செல்வாக்கை நிராகரிக்கும்
செயலாகிறது.

இதுவரை காலமும்
இலங்கை அரசையே
எதிரியாகக் கருதி
நடத்தப்பட்டு வந்த
இன விடுதலைக்கான
ஆயுதப் போராட்டத்தின்
திசை வழியிலேயே ஒரு
பாரிய திருப்பத்தை
ஏற்படுத்தும் செயலாகிறது.

இதனைக் கண்ணுற்று
ஆச்சரியப் பட்டவர்களாக
அனைவரும் இருக்க
ஆனந்தப்பட்டது
இலங்கை அரசே.

அதனால்தான்
'நடுவராக வந்தவர்களை
எதிர்த்தரப்புக் கெதிராக
விளையாட வைத்துவிட்டேன்' என
ஜே.ஆர் அப்போது தன்
மதியூகத்தையிட்டுப்
பெருமைப் பட்டுக்கொண்டார்.

இலங்கை நாட்டுக்குள்
இந்தியப் படைகளின்
பிரசன்னமானது தம்
இறைமையை மீறும் செயலென்ற
அவமானத்தை விட
ஜே.ஆர் அரசுக்கு
தமது படை வீரர்களுக்குப் பதிலாக
இந்திய வீரர்களைப்
பலி கொடுப்பதில் கிடைக்கின்ற
இலாபமே பெரிதாய்த் தெரிந்தது.

அதேவேளை
இலங்கை அரசுக்கு
இன்னோர் தலையிடியாக
அச்சுறுத்தி வந்த
ஜே.வி.பி.யினரின்
ஆயுதக் கிளர்ச்சியை
அடக்கும் பக்கத்தில்
தனது படைகளை
அதிக கவனம் செலுத்தவைக்கும்
அவகாசமாகவும்
இதனைப் பயன்படுத்தியது.
இத்தகைய தாக்கமிக்க
பாரிய முடிவொன்றை
மிகச் சாதாரணமாகவே
தீர்மானிக்க முடிந்த
புலிகளின் துணிவை
முட்டாள் தனமாகப்
பலர் வர்ணித்தார்கள்.

ஆனால் அவர்களெல்லாம்
மூக்கில் விரல் வைக்கும்படி
விடுதலைப்புலிகளே
இறுதியில் வென்றார்கள்.

இந்த முடிவால்
எத்தனையோ இழப்பகள்
ஏற்பட்டிருக்கலாம்.
எவ்வளவு பெரிய
அரசியல் பின்னடைவும்
எதிர்வு கூறப் பட்டிருக்கலாம்.
உதவிக்கிருந்த
ஒரே கதவும்
அடைபட்டுப் போயிருக்கலாம்

ஆனால்
இந்தப் போராட்டமானது
எமக்குச் சொந்தமானது
அதை,
எத்தனை விலைகொடுத்தும்
நாம் நிலைநாட்டத் தயாரென்ற
உறுதியான செய்தியை
இதன் மூலம்
உலகுக்கு வெளிப்படுத்தினர்
புலிகள்.

இந்தச் செய்தி
இந்தியாவுக்கு மட்டுமல்ல,
இனிவரும் காலத்தில்
தலையீடு செய்யவோ,
மத்தியஸ்துவம் என்ற பெயரில்
நிர்ப்பந்தம் செலுத்தவோ
விளையக் கூடிய
எந்த நாட்டுக்கும்
முன்னோடியான ஒரு செய்தி.

இதனைச் சரியாக
இனங் கண்டு கொள்ளாமல்
இந்தப் பிரச்சனைக்குள்
அளவுக்கதிகமான
உரிமைகளோடு
தலைகாட்ட முற்பட்டு
அதிகாரம் செலுத்தும்
எந்த நாடும்
இந்தியாவின் அனுபவத்தைச்
சந்தித்தே தீரும்.

இதேவேளை
இந்தியப் படைகளுக்கெதிரான
இந்த யுத்தம்
வெறும் இராணுவ யுத்தமாக
நிகழவில்லை.

மிகப்பெரும் இராஜதந்திரங்கள்
இந்த யுத்தத்தில்
பிரயோகிக்கப்பட்டன.

இதில்
இந்திய அரசு
இலங்கை அரசு,
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஆகியோர் வகுத்த
இராஜதந்திர வியூகங்களை
புலிகளின் இராஜதந்திரம்
சமாளித்த விதம்
போராட்டத்தில் மட்டுமன்றி
அரசியல் ராணுக்கியத்திலும்
புலிகளுக்கிருந்த
சாமர்த்தியத்தை
வெளிப்படுத்துவதாய் அமைந்தது.

புலிகளை மிகவும்
முரட்டுத்தனமான
அரசியல் விவேகமற்ற
பழமை வாத
ஆயுதக் குழுவாக மட்டுமே
எண்ணியிருந்தோருக்கு
அவர்கள் மிகவும்
வளைந்து கொடுத்து
பக்குவமான முறையில்
நவீனமான போராட்ட உத்திகளைக்
கையாண்ட விதம்
ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

போராட்டத்தை மட்டுமன்றி
அரசியலையும் அவர்கள்
கையாண்டார்கள்.

இலங்கை அரசியலை மட்டுமல்ல
இந்திய அரசியலைக்கூட.
அதுதான் இங்கு
பாரிய தர்மசங்கடங்களை
விளைவித்த வித்தை.

யுத்தத்தோடு அரசியலை
அவர்கள் எப்படி இங்கு
பின்னிப் பிணைந்து
விளையாடினர் என்பதை
எடுத்து நோக்கினால்
உண்மை புரியும்.

'வீரம் இருந்தால் போதாது
விவேகமும் வேண்டு'மெனத்
தமிழர் விடுதலைக்
கூட்டணித் தலைவர்கள்
மட்டம் தட்டியதுபோல்
இவர்கள் இருக்கவில்லை.

அரசியலுக்காக யுத்தத்தைப்
பாவிக்க
முனைந்தவர்களை முறியடித்து,
தங்கள் யுத்தத்துக்காக
அரசியலையே பயன்படுத்த
அவர்களால் முடிந்தது.

இங்கே நடந்தவற்றை
எடுத்துப் பார்த்தால்
இந்த உண்மை
தெளிவாய்ப் புரியும்.

இந்தியாவைப் பயன்படுத்தி
புலிகளை முறியடிக்க
இலங்கை முயன்றது.
விடுதலைப் புலிகளையும்
'தமிழ்க் கட்சிகளையும்
பயன்படுத்தி
இலங்கையைத் தனக்கு
அடக்கமான நாடாக்க
இந்தியா முனைந்தது.

புலிகளை இந்நோக்கத்துக்குப்
பயன்படுத்த முடியாது போகவே
ஏனைய தமிழ் இயக்கங்களைப்
பயன்படுத்தி
தனது தலையீட்டுக்கு
நியாயாதிக்கம் தேட
இந்தியா முனைந்தது.

அதற்காக,
மாகாணசபைத் தேர்தலை
நடத்த வைத்து
ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமையிலான
மாகாண அரசை
இந்தியா ஸ்தாபித்தது.

இதனமூலம்,
இனப் பிரச்சனைக்கான
தீர்வு முயற்சியில்
இந்திய -இலங்கை
ஒப்பந்தத்தினை
வலிதான ஒன்றாக்க
இந்தியா முனைந்தது.
அதற்கு எதிரான
விடுதலைப் புலிகளை
ஓரம் கட்டுகின்ற
அரசியல் நகர்வாகவும்
இதனை மேற்கொண்டது.

தமிழீழம் என்ற
புலிகளின் கொள்கைக்கு
மாற்றுத் தீர்வொன்றை
உருவாக்கிக் காட்டிவிட்டால்
மக்களிடமிருந்து அவர்களைத்
தனிமைப் படுத்திவிடலாமென
இந்தியா முயன்றது.

மாகாணசபைத் தேர்தல் மூலம்
தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக்
காண்பிக்கக் கூடிய
தனக்கு இசைவான
மாற்றுத் தலைமையொன்றை
உருவாக்க முனைந்தது.

இந்தத் தருணத்தைச்
சாதகமாகப் பயன்படுத்தி
புலிகளால் ஓரங்கட்டப்பட்டிருந்த
நிலைமையை முறியடித்து
மீண்டும் தம்மை
நிலைநிறுத்திக் கொள்ள
ஈ.பி.ஆர்.எல்.எப் முனைந்தது.

அது இந்தியாவைப் பயன்படுத்தி
புலிகளை அடக்கவும்,
அதேவேளை
இலங்கை அரசாங்கத்தை
அடிபணிய வைக்கவும்
ஒரே நேரத்தில் முயன்றது.

இந்த நிலைமைகளை
உன்னிப்பாகக் கவனித்த
விடுதலைப் புலிகள்
தமது இராஜதந்திர
வழி முறைகளைச்
சாமர்த்தியமாக வகுத்தனர்.

ஒவ்வொரு நிலைமை மாற்றத்தையும்
அரசியல் மாற்றத்தையும்
அனுகூலமாகப் பயன்படுத்துவதற்குத்
தயாராக இருந்தனர்.

இங்கே விளைகின்ற
முரண்பாடுகள் ஒவ்வொன்றின் மீதும்
கவனம் செலுத்தினர்.
அது மட்டுமன்றி
முரண்பாடுகளைத்
தோற்றுவிப்பதிலும்
கவனம் செலுத்தினர்.

இலங்கை அரசாங்கத்தில்
ஜே.ஆர் விலகி, பிரேமதாஸா
வந்ததை
அனுகூலமாக்க விளைந்தனர்.
பிரேமதாஸாவின் இந்திய எதிர்ப்பு
மனோபாவத்தில் அவதானஞ்
செலுத்தினர்.

ராஜீவ்-பிரேமதாஸா
முரண்பாடொன்று
கூர்மையடைவதில்
அக்கறை செலுத்தினர்.

இந்தியாவின் துணையை எண்ணி
இலங்கை அரசைப் பகைக்கத்
துணிந்த
ஈ.பி.ஆர்.எல்.எப். மாகாண
அரசின்
செயற்பாடுகளையும் எடைபோட்டுக்
கொண்டனர்.

புலிகளை அடக்கும் நோக்கத்தோடு
இவர்கள் உருவாக்கிய
தமிழ் தேசிய இராணுவம்
இலங்கை அரசுக்கும் அச்சுறுத்தலாக
உருவெடுத்ததைக்
கணக்கிலெடுத்தனர்.

இதேவேளை தென்னிலங்கையில்
எழுச்சி கண்ட ஜே.வி.பி. இயக்கம்
இந்திய ஆதிக்கத்தை
எதிர்த்துக் கோஷித்ததால்
ஏற்பட்டுவந்த பதட்டத்தையும்
கண்டனர்.

இதில்
சிங்கள உணர்வலைகளைத்
தன் பக்கம் ஈர்க்கும் போட்டியில்
ஜே.வி.பி.யை முந்திக் கொண்டு
இந்திய எதிர்ப்புணர்வை
வெளிக்காட்ட வேண்டியவராக
பிரேமதாஸா இருந்ததையும்
கண்டு கொண்டனர்.

இதனால்
வட-கிழக்கு மாகாண சபைக்கும்
ராஜீவ் காந்திக்கும் எதிராக
பிரேமதாஸாவுக்கு ஏற்பட்ட
முரண்பாட்டில்
புகுந்து விளையாட
இடமிருப்பதைக் கண்டனர்.

அதேவேளை இந்திய அரசியலில்
ஏற்பட்டு வந்த
மாற்றங்களை மதிப்பிட்டனர்.
ராஜீவின் செல்வாக்குச்
சரியக் கூடிய
இந்திய அரசியலைச்
சாதகமாக உணர்ந்தனர்.

இலங்கை இறைமையில்
தலையீட்டையும்
புலிகளுக்கெதிரான
யுத்த நடவடிக்கையில்
இந்தியச் சிப்பாய்கள்
பலியாவதையும்,
இந்தியாவின் மானமும்,
தார்மீக பலமும்
பாழாய்ப் போவதையும்
எதிர்க்கட்சிகள் எதிர்த்தன.

அதற்கு வாய்ப்பாக
இந்தியப் படைகளின்
கொடுமைகளைப்பற்றிய பிரசாரத்தை
விடுதலைப்புலிகள் முடுக்கிவிட்டனர்.

எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச்
சேர்ந்திருந்த
தமிழக முதல்வர் கருணாநிதியும்
தமது அரசியலுக்கு வாய்ப்பான
கோஷமாக
ராஜீவ் அரசை எதிர்க்கும்
முனைப்பில்
இந்தியப்படைகளின்
செயற்பாட்டை எதிர்த்ததுடன்
விடுதலைப் புலிகளுக்கு
ஆதரவாகக் குரல்கொடுத்தார்.

எம்.ஜி.ஆரின் பக்கம் நின்று
கருணாநிதியை நிராகரித்த
புலிகளை
கருணாநிதியே ஆதரிக்க
முன்வந்த
அரசியல் சித்து
விளையாட்டைப்
புலிகள் நன்றாகப்
பயன்படுத்திக் கொண்டனர்

இதேவேளை
இந்தியப் பொதுத்தேர்தல்
சூழ்நிலைகளை
உசிதமாகப்பயன்படுத்திக்கொள்ள
விடுதலைப் புலிகள் திட்டம்
தீட்டினர்.
இந்திய அரசுக்கும்
சமாதானச்
சமிக்ஞையொன்றைச்
சாதுவாகக்
காட்டியபடியேதான்
தம் மோதலையும் நடத்தினர்.

இந்திய அரசாங்கம் மாறும்
போது
தமக்குச் சாதகமாக அதனைக்
கையாளவே
அவர்கள் உத்தேசித்தனர்.

இவையெல்லாம் இருக்க
எவரும் எதிர்பாராத
பாரியதோர் இராஜதந்திரத்தில்
புலிகள் இறங்கினர்.

இலங்கை அரசாங்கத்தோடு
உடன்பாட்டுக்குச் சென்று
இந்தியாவையும், மாகாண அரசையும்
ஒரே சமயத்தில் முறியடிக்கச்
செய்யும்
மதியூகமான திட்டத்தை
அவர்கள் வகுத்தனர்.

இதற்காக,
குமரப்பாவுடனான புலிகள்
குழுவினரை
கொழும்புக்கு கொண்டு செல்வதை
அன்று எதிர்த்துத் தற்கொலைக்கு
உத்தரவிட்ட
விடுதலைப்புலிகள்
அதே அரசிடமிருந்து
ஆயுதங்களையும் பணத்தையும்
இப்போது பெற்றார்கள்.
அதே இராணுவத்தின்
ஒத்துழைப்பைப் பயன்படுத்தி
தாக்குதல்களை நடத்தவும்
முன்னின்றார்கள்.

இந்த இராஜதந்திரத்தைப்
புரிந்துகொள்ள முன்னரே
இந்திய அரசும்
ஈ.பி.ஆர்.எல்.எப் அரசும்
எதிர்பாராத நகர்வுகளை
அவர்கள் செய்து விட்டார்கள்.
இதன் விளைவுகள்
பிரபிக்க வைத்தன
அடுத்த இதழில் அவற்றைத்
தரிசிப்போம்.



சத்தியன்

அலசுவது - இராஜதந்திரி

இனப்பிரச்சனைத் தீர்வு மத்தியஸ்தம்

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஒரு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் இன்றியமையாததாக இருக்கின்றது.

ஏனெனில் இலங்கைப்பிரச்சனை தற்போது மிகவும் மூர்க்கமடைந்துள்ளது. கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்வு முயற்சிகளும் பயனற்றுப் போயுள்ளன. இராணுவ ரீதியான அழுத்தங்கள் நிறைந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசதரப்பினரும் ஆயுதங்களையே ஒன்றுடன் ஒன்று பேச வைத்துள்ளனர். இதனால் அரசியல் பேச்சுக்கள் என்ற விடயம் மழுங்கடிக்கப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனையைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு விரிவான தீர்வுத் திட்டத்தையே எதிர்பார்த்திருக்கின்றனர்.

தமிழ் அரசியல் தலைவர்கள் கடந்த காலங்களில் சமரச முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கிவந்தனர். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ள முன்வந்த அரசியல் தீர்வுகளை வழங்க சிங்களப் பேரினவாதிகள் ஒருபோதும் முன்வந்திருக்கவில்லை. மாறாக அரைவேக்காடான, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத தீர்வுத்திட்டங்களை முன்வைப்பதிலேயே சிங்களத் தலைவர்கள் ஆர்வங் காட்டினர்.

இத்தகைய அரைகுறைத் தீர்வுகளுக்கு தமிழ் அரசியல்வாதிகள்கூட உடன்பட முன் வந்திருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபை முறை, பின்னர் மாகாண சபை நிர்வாக முறை என்பன தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைக் கொச்சைப் படுத்தும் விதத்தில் முன்வைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் பிரதேச ஒருமைப்பாடு, மற்றும் தனித்துவம், சுயாதிக்கம் என்பவற்றை முதன்மைப்படுத்தும் சமஷ்டிமுறையிலான ஒரு தீர்வுத் திட்டமே இலங்கை இனப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்பது பெரிதும் உணரப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட அனைத்து தமிழ் அரசியல் வட்டாரங்களும் இத்தகையதொரு தீர்வையே வலியுறுத்துகின்றன.

ஆனால் தென்னிலங்கையின் அரசியல் தலைமைகளினால் இத்தகையதொரு தீர்வுத் திட்டம் குறித்து உரிய புரிந்துணர்வைத் தமிழ் அரசியல் தரப்புடன் கட்டி எழுப்ப முடியாதிருக்கின்றது.

ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் விடாப்பிடித்தனம் ஒரு புறமிருக்க, பேரினவாதிகளின் அழுத்தங்களும் அரசியல் பேச்சுக்களுக்கு முட்டுக் கட்டைகளாக இருக்கின்றன.

இந்த முட்டுக்கட்டைகளை அகற்றி தெளிவானதொரு பாதையை தீர்வுத் திட்டத்தை நோக்கி அமைக்கவே ஒரு முன்றாந்தரப்பு மத்தியஸ்தம் அவசியமானதாக இருக்கின்றது.

புத்தாயிரமாவது ஆண்டில் ஒரு புதிய தீர்வு முயற்சியாகவே நோர்வே வெளி நாட்டமைச்சர் திரு.நெட் வெல்லபெக்கின் நடவடிக்கைகள் அமைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது..

இருந்தபோதிலும் திரு.வெல்லபெக் இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் வெற்றிபெறுவாரா? என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மத்தியஸ்தம் செய்வதில் நோர்வே ஆர்வங்காட்டுகின்றது. ஆனால் இலங்கை இனப்பிரச்சனைத்தீர்வுக்கு உதவ முன்வந்த முதலாவது நாடு இந்தியாவே என்பது குறிப்பிடத்தக்கது.

1983ம் ஆண்டு இனக்கலவரம் இலங்கைத் தமிழர்களைச் சுட்டெரித்தபோது இந்தியப் பிரதமராக

திருமதி.இந்திராகாந்தி பதவி வகித்தார்.

அச்சமயம் இலங்கை நிலபரத்தை நேரில் கண்டுவர திருமதி.இந்திராகாந்தி தமது வெளிவிவகார அமைச்சராக இருந்த திரு.பி.வி.நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பி வைத்திருந்தார்.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை இனப்பிரச்சனையில் இந்தியத் தலையீடு தவிர்க்க முடியாததாக உருவெடுத்திருந்தது.

ஏனெனில் வடக்கு-கிழக்கில் வாழ்ந்த தமிழர்கள் பாதுகாப்புத் தேடி இந்தியாவுக்கு அகதிகளாகப் படையெடுத்தனர்.

இந்திய மத்திய அரசுமட்டுமல்ல; தமிழக மாநில அரசாங்கமும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அதீத அக்கறை காட்டியதுடன் அகதிகளாகத் தமிழகம் வந்த இலங்கைத் தமிழர்களை தமிழக ஆட்சியாளர்கள் அரவணைத்திருந்தனர்.

சாதாரண இலங்கைப் பிரஜைகள்மட்டுமல்ல. இலங்கையின் மிதவாத, தீவிரவாத அரசியல்வாதிகள்கூட இந்தியாவில் தஞ்சமடைந்து, இந்தியாவின் தலையீட்டுடன் இலங்கை இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்த்தனர்.

இந்தியப் பிரதமராக இருந்த திருமதி.இந்திராகாந்தி இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக வெளிப்படுத்திய அக்கறை அநாதரவாக இருந்த இலங்கைத் தமிழர்களுக்கு தெம்பூட்டுவதாக இருந்தது.

ஆனால் எண்பதுகளின் ஆரம்பத்தில் சீக்கிய தீவிரவாதப் பிரச்சனை இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரு சவாலாக இருந்தது. திருமதி.இந்திராகாந்தி பஞ்சாப்பிரச்சனையைக் கையாண்ட அதேசமயம் இலங்கை இனப்பிரச்சனையின் தாக்கங்கள் குறித்தும் நன்கறிந்து வைத்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் தமது நாட்டின் அரசியல் புள்ளியான பண்ருட்டி இராமச்சந்திரன் என்பவரையும் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக் உரையாற்றவும் இந்திரா காந்தி அனுமதித்திருந்தார்.

ஆனால் இந்திராவின் பங்களிப்பு இலங்கை இனப்பிரச்சனை தீர்வுகுறித்து தொடர்ந்திருக்குமென்று எதிர்பார்த்த வேளையிலேயே சீக்கிய தீவிரவாதம் அவரது உயிரைக் குடித்துவிட்டிருந்தது.

இந்திராகாந்தி இலங்கை இனப்பிரச்சனையை தமது அரசு சார்பில் கையாளும் வகையில் இந்தியாவின் முத்த இராஜதந்திரிகளில் ஒருவராக விளங்கிய ஜி.பார்த்தசாரதி என்பவரையும் நியமித்திருந்தார்.

திரு.ஜி.பார்த்தசாரதியும் நேர்மையான முறையில் இலங்கைப் பிரச்சனையை அணுகமுன்வந்திருந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்திராவின் திடீர் மரணமும் அதனால் இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும், திருப்பங்களும் இலங்கை இனப்பிரச்சனையிலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

இந்திரா காந்தியின் மறைவையடுத்து இந்தியப் பிரதமரான அவரது புதல்வர் திரு.ராஜீவ்காந்தியின் இலங்கை இனப்பிரச்சனை குறித்து அணுகுமுறைகள் வேகமான முடிவுகளை எட்டுவதாக இருந்தனவே தவிர விவேகமாக எதனையும் சாதிப்பதாக இருக்கவில்லை.

இலங்கை இனப்பிரச்சனை குறித்து திரு.ராஜீவ் காந்திக்கு விளக்கமளித்த இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர் ஸ்தானிகர் ஜே.என்.டிக்ஸிற், இந்திய வெளியுறவுத் துறையிலிருந்த ரொமெஷ் பண்டாரி ஆகியோர் தவறான அணுகுமுறைகளை ராஜீவ் காந்தி கையாள இடமளித்திருந்தனர்.

இதன் காரணமாக நாளடைவில் இந்தியாவின் தலையீடுகூட இலங்கை இனப்பிரச்சனையில் ஒரு முடிவுக்கு வந்திருந்தது.

இதனையடுத்து இலங்கையில் தீவிரவாத நடவடிக்கைகளும் உக்கிரமடைந்த நிலையில் இன்றுவரை இனப்பிரச்சனை எவ்வகையிலும் ஒரு முடிவுக்கு வராததாகவே இருக்கின்றது.

இந்நிலையில் இலங்கைப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் ஆர்வங்காட்டுகின்ற ஒரு நாடாக தற்போது நோர்வே தன்னை இனங் காட்டியுள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக அமைதி, மானிட மேம்பாடு என்பவை குறித்த சர்வதேச ரீதியான நடவடிக்கைகளில் நோர்வே நேர்மையாகவே நடந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இரண்டாவது உலக யுத்தத்தையடுத்து உலக சமாதானத்தை ஏற்படுத்தும் விதத்தில் ஸ்தாபிக்கப்பட்டதே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமாகும். இந்நிறுவனத்தை ஸ்தாபிப்பதிலும் நோர்வே பெரும் பங்காற்றியிருந்தது. கூடவே ஐ.நா.ஸ்தாபனத்தின் முதலாவது செயலாளராக இருந்தவரும், அன்றைய நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் திரிக்வே லை என்பவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகில் பல்வேறு சர்ச்சைக்குரிய பிரச்சனைகளையும் நோர்வே கடந்த காலங்களில் வெற்றிகரமாகவே கையாண்டுள்ளது.

இப்பிரச்சனைகளில் இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சனை குறிப்பிடத்தக்கதாகும். இதனை வெற்றிகரமாகக் கையாளுவதில் இன்றைய நோர்வே வெளிவிவகார அமைச்சர் நெட் வெல்லபெக் பெரும் பங்காற்றியிருந்தார்.

வெல்லபெக்கின் இராஜதந்திர அணுகுமுறைகளே இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சனையின் உக்கிரத்தன்மை தணிவடைவதற்கும் வழியமைத்திருந்தது.

எனவே கடந்த நூற்றாண்டின் சிக்கல் நிறைந்த ஒரு பிராந்தியப் பிரச்சனையாக விளங்கிய இஸ்ரேலிய-பாலஸ்தீன விவகாரத்தைக் கையாண்ட நோர்வே அமைச்சர் வெல்லபெக்கின் கவனம் தற்போது இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளது.

இலங்கை வருமுன்னர் ,லண்டனில் இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க முக்கியஸ்தர்களையும் திரு.வெல்லபெக் சந்தித்து உரையாடியிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெல்லபெக் வெல்லுவாரா?

இலங்கையில் திரு.வெல்லபெக் ஆளுங்கட்சி, மற்றும் எதிர்க்கட்சியினரைச் சந்தித்து உரையாடவிருக்கின்றார்.

கடந்த சென்ற இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஜனநாயக ரீதியான அரசியல் சிந்தனைகள் படிப்படியாக விரிவடைய ஆரம்பித்தன.

இருந்தபோதிலும் ஜனநாயக விழுமியங்கள் என்பது முழு உலகிலும் உரியவகையில் வேரூன்றாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஜனநாயக அரசியல் பற்றிப் பேசுகின்ற நாடுகள் பலவற்றிலும் ஏதோ ஒருவகையில் அராஜகமே 'கோலோச்சி' வருகின்றது.

அத்தகைய நாடுகளில் இலங்கையும் ஒன்றென்பதும் குறிப்பிடத்தக்கது.

விடைபெற்றுச் சென்ற இருபதாம் நூற்றாண்டைப் போலன்றி, புதிதாகத் தோன்றியுள்ள இருபத்தியோராம் நூற்றாண்டு அபரிமிதமாக வளர்ச்சி கண்ட ஒரு யுகமாகவே காணப்படுகின்றது.

ஆக்கபூர்வமானவை மட்டுமல்ல; அழிவுபூர்வமானவைகூட உலகில் இன்று அபரிமிதமாகவே வளர்ச்சிகண்டுள்ளன.

இதன்காரணமாக நன்மைக்கும், தீமைக்குமிடையேயுள்ள வேற்றுமைகளைக் கூடப் பிரித்தறிய முடியாத தன்மையே உலகில் காணப்படுகிறது.

இத்தகைய சிக்கல் நிறைந்த நிலையே உலகின் அரசியல், சமூகப் பொருளாதார நடவடிக்கைகளில்கூட நிறைந்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே நேர்மையான அணுகுமுறைகள், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை, பரந்த சிந்தனை என்பவற்றைக் கொண்டிருப்பதன் மூலமே நெருக்கடிமிக்க சூழ்நிலைகளிலிருந்து விடுபட முடியும்.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து ஒரு புதிய முயற்சியாகவே நோர்வே வெளிவிவகார அமைச்சர் நெட் வெல்லபெக்கின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இத்தீர்வு முயற்சியை குறுகிய கண்ணோட்டங்களுடன் பார்ப்பதைவிடுத்து விசாலமான முறையில் நோக்குவதே பயனுள்ளதாக அமையும்.

இலங்கையில் இனப்பிரச்சனையால் தோன்றிய தாக்கங்கள் மிகப்பாரதூரமானவையாகவே இருக்கின்றன. இத்தகைய பாரதூரமான நிலை தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுமானால் இலங்கையில் அனைவருமே அமைதியிழந்து வாழ்வதே நியதியாகிவிடும்.

இலங்கையின் புத்தாயிரமாவது ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமும் வெளியாகியுள்ளது. வாழ்கைச் செலவு என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

வரவுசெலவுத் திட்டத்தில் எப்போதும் போன்றே இராணுவச் செலவுக்காக ஒதுக்கப்படும் தொகைகூட எவ்விதத்திலும் குறைந்துவிடாது கூடிச் சென்றுள்ளதையும் அவதானிக்க முடிந்தது..

இலங்கைக்குக் கிடைக்கின்ற அற்ப, சொற்பமான வருவாய்கள் மட்டுமல்ல வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் பெருமளவிலான உதவிகள்கூட யுத்த அனர்த்தங்கள் காரணமாகப் பிரயோசனமற்ற வகையில் வீணாகிச் செல்வதையும் காண முடிகின்றது.

இந்நிலையில் இனப்பிரச்சனை என்ற கொந்தளிப்பு நிறைந்த கடலில் சிக்கித் தத்தளித்து கரையேறமுடியாத நிலையிலேயே இலங்கை காணப்படுகின்றது.

இத்தகைய ஆபத்தான ஒரு சூழ்நிலையில் கரையேறக் கையில் அகப்பட்ட தெப்பமாகவே நோர்வேயின் சமாதான முயற்சிகளைக் கருதவேண்டியதாகின்றது.

அதேசமயம் கொந்தளிப்பான ஒரு



கடலில் சிக்குண்டவர்களைக் கரைசேர்க்க முன்வந்திருக்கும் ஒரு மாலுமியாகவே திரு.நெட் வெல்லபெக் காணப்படுகின்றார்.

எனவே திரு.வெல்ல பெக் தமது முயற்சியில் வெல்லுவாரா? என்பதே சமாதான விரும்பிகளின் கேள்வியாக இருக்கின்றது.

இடி அமீன்

உண்மைத் தொடர்

அதிர் இடி 97

கடந்தவாரம்

இஸ்ரேலியர்களின் அதிரடி நடவடிக்கையினால் இடி அமீன் கலவரமடைந்திருந்தான். தனக்கு ஏற்பட்ட கோபத்தினால் டோராபுளொச் என்ற மூதாட்டியைத் துடிதுடிக்கக் கொன்றதை உலகெங்கும் பரவி அமீனை ஆட்டிப்படைத்தன. இஸ்ரேலியர்கள், ஏனைய பணயக் கைதிகளுடன் அந்த அம்மையாரையும் கொண்டு சென்று விட்டனர் என்று கூறியதை எவரும் நம்பவில்லை.

தனது விருந்தினர் மாளிகையில் உல்லாசமாக இருந்த கார்லோஸை அழைத்து ஆலோசனை கேட்கிறான். அவனை வழியனுப்பிவிட்டு, ஃபுளோராவை தன்னிடம் அனுப்பிவைக்குமாறு பணிக்கிறான்.

இனி...

ஃபுளோரா மெல்லக் கதவைத் திறந்துகொண்டு அமீனின் அலுவலக அறைக்குள் நுழைந்தபோது, ஏதோ மிக முக்கியமான பணியில் தான் ஈடுபட்டிருப்பது போன்று, மேசையில் கிடந்த கோப்புகளைப் புரட்டிக் கொண்டிருந்தான் அமீன். கதவு திறபடுவதை அறிந்து கீழ்க் கண்ணால் பார்த்தான். ஃபுளோரா தன் எதிரே மேசை ஓரமாக நின்றிருந்தாள். இருக்கையில் அமரும்படி கையால் காட்டினான். அமர்ந்தாள்.

"உன் பெயர் என்ன என்று கூறினாய்?" பல வேலைகளின் அழுத்தத்தினால் பெயரை மறந்து விட்டதாகக் காட்டிக் கொள்ளவே இந்த நடிப்பு.

"ஃபுளோரா.... ஃபுளோரா ஹமில்டன்...!"

"உனக்குத்தரப்பட்ட பணி பிடித்திருக்கா?"

"இதுவரை எனக்கு எதுவித பணியும் தரப்படவில்லை. காலையில் அலுவலகம் வருவேன். சாயங்காலம் வீடு திரும்புவேன் இடையில்...."

"இடையில்... அந்த இடையில் என்ன செய்வாய்?"

"சீ.ஃபின் அனுமதியுடன் அலுவலர்களின் கோப்புக்களைப் புரட்டிப்பார்ப்பேன்!"

"ஓஹோ.... எஞ்சிய நேரங்களில்....?"

"நாவல்கள் படிப்பேன்!"

"நாவல்களா....? அந்த பெரிய அலுவலகத்தில் நாவல்களா படிக்கிறாய்?" இதைக் கூறும் போது அமீனின் முகத்தில் சினம் கொப்பளிப்பதை அவள் கண்டாள்.

'ஏன் தான் இப்படி ஒரு பதிலைச் சொன்னோம்?' என்று சங்கடப்பட்டாள்.

"ஜனாதிபதியின் பிரதான அலுவலகத்தில் இருந்து கொண்டு நாவல் படிப்பது ஏற்கக் கூடியதல்ல. ஆகவே நீ இன்று முதல் எனது இந்தப் பணியகத்திலே பணி புரிகிறாய் என்ன....? சம்மதமா...?" என்று கேட்டுக் கொண்டே இறுக்கமாகவே என்னேரமும் இருண்டு கிடக்கும் தன்னுடைய முகத்தில் பளிச்சென்று ஒரு புன்முறுவலை அமீன் வீசினான்.

"என்ன யோசிக்கிறாய்? இங்கு பணிபுரிய உனக்கு இஷ்டம் தானே?"

"எதுவும் இஷ்டம் தான்!"

"சரி.... இதோ இந்தக் கதவைத் திற....!" அமீனின் இடது புறமிருந்த அறையைக் காட்டினான்.

ஃபுளோரா எழுந்து மெதுவாக அக் கதவண்டை சென்று பூட்டின் மீது கையை வைத்துத் திருகுவதற்கு முன்னர் அமீனை ஒரு தடவை திரும்பிப்பார்த்தாள். அமீன் தனது தலையை அசைத்துக் காட்டிய வண்ணம் **"இம்.... திற!..."** குமிழைத் திருகினாள். கதவு திறந்து கொண்டது மீண்டும் திரும்பி அமீனைப் பார்த்தாள்.

"உள்ளே போய்ப்பார்!" தயங்கியபடியே கதவைத் திறந்து பார்த்த அவளுக்கு தூக்கிவாரிப்போட்டது. உள்ளே மேசையோ நாற்காலியோ இருக்கவில்லை. மாறாக பிரமாண்டமான ஒரு கட்டில் அவ்வறையின் முக்கால் பாகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

அந்த அறையின் சுவர்களில் காணப்பட்ட படங்களை ஒரு முறை நோட்டமிட்ட ஃபுளோரா திகைத்தாள். அத்தனையும் அழகழகான பல நாட்டுப் பெண்களின் பிறந்த மேனிப் படங்கள். அவளால் அதிக நேரம் அங்கு நிற்பது என்னவோ போலிருந்தது. வந்த வழியே திரும்பிவிடலாம்! என்ற எண்ணத்தில் கதவை நெருங்கி, குமிழைத் திருகினாள். கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது.

ஃபுளோராவுக்கு அப்போது அச்சம் எதுவும் தோன்றவில்லை. அவள் உள்ளத்தில் இனந்தெரியாத ஒருணர்வுதான் தோன்றியது. மீண்டும் சுவர்களில் தொங்கிய படங்கள் மீது தன் கண்களைச் சுழற்றினாள்.

கட்டிலின் தலைமாட்டில் மாட்டப்பட்டிருந்த படம் அவளைக் கவர்ந்தது. ஓர் அழகிய வெள்ளைக்காரப் பெண்ணை இடி அமீன் அணைத்தபடி காதல் லீலை புரிவது போன்ற தத்ரூபமான படம் அது. இப்படம் மிகப்பெரிய அளவில் பெரிதாக்கப்பட்டிருந்தது. இதே போன்று வேறு படங்களும் ஃபுளோராவின் கண்களுக்குக் காட்சி தந்தன.

இதே வேளை துள்ளிசையுடன் கூடிய ஒலி அந்த அறையில் மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த இசையும் கேட்போரைக்கிறங்க வைப்பதற்காகவே பதிவான இசைபோல் இருந்தது.

இந்தச் சூழலை ஒரு சில நிமிடங்கள் மட்டும் அனுபவித்த ஃபுளோராவுக்கு அமீனின் நோக்கம் அப்போது புரிந்து விட்டது. அமீன் தன்னையும் தன் ஆசை நாயகிகளில் ஒருத்தியாக்கிக் கொள்ளத் தீர்மானித்து விட்டான் என்று உறுதியாக நம்பினாள்.

அமீனின் திருவிளையாடல்கள் பற்றி ஏற்கனவே ஃபுளோரா அறிந்து வைத்திருந்தாள். இத்தகவல்களை வைத்தே தன் மகளை, அமீனின் அலுவலகத்துக்கு வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று அவளுடைய தாய் எச்சரித்திருந்தாள். ஆனால் புதிய புதிய வாழ்க்கை அனுபவங்களைக் காண வேண்டும் என்று இன்பக் கனவுகளைக் கண்டுவந்த ஃபுளோரா, இதனையும் ஒரு சவாலாக ஏற்கத்துணிந்தவளாகவே விளங்கினாள்.

ஏறத்தாழ முக்கால் மணி நேரமான பின்னர், அமீன் மெல்லக் கதவைத்திறந்து கொண்டு உள் நுழைந்தான். அவன் எதிர்பார்த்ததைப் போல் ஃபுளோரா அந்தப் பெரிய கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய காலணிகள் கூடக் கழற்றப்படவில்லை.

ஓசை படாமல் அவளருகில் வந்த அமீன், அவளுடைய கள்ளங்கபடமற்ற முகத்தைப் பார்த்ததும் அவனுக்கு இனந்தெரியாத பாச உணர்வு அவள் மீது ஏற்பட்டது. அவனுடைய கருங்கல்லைப் போன்ற இதயம் கூட சற்று நெகிழ்ந்தது. தலைமாட்டில் அமர்ந்து ஃபுளோராவின் தலையைத் தூக்கித் தன் மடிமீது கிடத்தியவாறு மெதுவாக அவள் தலையைத் தடவினான்.

ஃபுளோராவுக்கு விழிப்பு ஏற்பட்டு விட்டது. இருப்பினும் அமீனுடைய அரவணைப்பிலிருந்து அவள் விடுபட விரும்பவில்லை. ஏனெனில் ஒருவகைப் பரிவோடு அரவணைத்துத் தலையைத் தடவிய சம்பவம் அவளுடைய குழந்தைப் பருவத்தில் தான் நிகழ்ந்தது.

அமீன் போதுமான படிப்பு வாசனை இல்லாதிருந்த போதும், கைதேர்ந்த உளவள ஆற்றல் படைத்தவன் போல் சில காரியங்களைச் செய்வான். எந்தப் பெண்ணையும் வசீகரித்து, தன்பால் ஈர்த்தெடுக்கத்தக்க காரியங்களைச் செய்வதில் வல்லவனாகவே இருந்தான். இத்தகைய நோக்குடன் தான் தன் மாளிகையோடு அமைந்த அலுவலகத்தை ஒட்டியே தனது அந்தரங்க ஓய்வறையையும் அமைத்திருந்தான். இந்த அறையுள் பல அழகிகளை அமீன் சந்தித்திருக்கிறான். இத்தகையோரில் ஒருத்தியாக ஃபுளோராவையும் கணித்துக் கொள்ள அமீனால் முடியாதிருந்தது. ஃபுளோராவின் முகத்தில் குடி கொண்டிருந்த அமைதியை அவன் விரும்பினான். கல்லான அவன் இதயத்தையும் கசிந்துருக வைக்கும் எழில் அவள் முகத்தில் குடி கொண்டிருந்தது. இதனால் தான் ஃபுளோரா முதன் முதலில் தன் முன்வந்து நின்ற போதே அவளைக் தட்டிக்கனிய வைக்காமல், தானாகவே கனிய வைத்துச் சுவைக்கத் திட்டமிட்டான்.

இஸ்ரேலியர்கள் உகண்டா நடவடிக்கை பற்றி வெளியான செய்திகளின் கத்தரிப்புகள், ஆங்காங்கே உள்ள தூதரகங்களால் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றை உகண்டா மொழியில் மொழி பெயர்த்து வைத்திருந்தார்கள். இவற்றையெல்லாம் படித்து கொதிப்படைந்திருத்தான அமீன். அந்தக் கொதிப்பை அடக்குவதற்கு அவனுக்கு வேண்டியது இளமங்கை ஒருத்தியின் அரவணைப்புத்தான். இதற்காகவே ஃபுளோராவை வரவழைத்தான்.

இதோ, அவனுடைய அந்தரங்க ஓய்வு அறையில் அந்த அழகிய இளமங்கை கிடக்கிறாள். வேறு சந்தர்ப்பமாக இருந்திருந்தால், அத்தருணத்தில் அமீனுக்கு ஆறுதலளிக்கக் காத்திருக்கும் பெண் நரக வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆனால் அமீனுடைய எண்ணங்களுக்கும் அங்கங்களின் அகோரத் துடிப்புக்கும் கடிவாளமிட்டு அடக்கி ஆளும் ஆற்றல் படைத்தவளாக ஃபுளோரா காணப்பட்டாள். அறைச் சுவரின் ஒரு புறத்தே சுவருள்ளேயே பொருத்தப்பட்டிருந்த ஒரு அலமாரியைத் திறந்தான். அங்கே வகை வகையான குடி வகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பெண்களுக்கென போதை குறைந்த பானம் கொண்ட ஒரு போத்தலை எடுத்து ஒரு கிளாசில் ஊற்றினான்.

ஃபுளோரா படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்தாள். அவளருகே இருந்த வண்ணம் கிளாசை அவளுடைய வாயில் வைத்து ஊட்டினான். ஒரு மிடறு மட்டும் குடித்து விட்டு அந்த கிளாசைக் தன் கையில் எடுத்து மெதுவாகப் பருகினாள். அவள் அப்பானம் அருந்துவதையே வைத்த கண்வாங்காமல் அமீன் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான்.

(இடி தொடரும்)

தருவது அழகன்

பரபரப்பு பமீலா

'பேவோட்ச்' தொலைக்காட்சித் தொடர் மூலம் பரபரப்பாகப் பேசப்பட்டவர் பமீலா அண்டர்சன் லீ. பரபரப்பை ஏற்படுத்துவது பமீலாவுக்கு பழகிப்போன ஒன்று.

முதலில் தனது மார்பகங்களைச் செயற்கை முறையில் பெரிதாக்கினார். அதன் பின் கணவர் லீ, தமது தேனிலவுக் கொண்டாட்டத்தை வீடியோ மூலம் படமாக்கி விற்று விட்டார் என்றார்.

சமீபத்தில் தனது மார்பகங்களை சிறிதாக்கினார். இப்படிப் பல பரபரப்புக்களை ஏற்படுத்தி வரும் பமீலா மிக அண்மையில் என்ன செய்தார் தெரியுமா?

தனது மூன்று வயது மகனுடன் 'ஜேன்' என்ற பத்திரிகைக்கு போஸ் கொடுத்தார். "போஸ் கொடுப்பதில் என்ன தவறு?" என்று கேட்கலாம். அம்மணி கொடுத்தது நிர்வாண போஸ்.

"முழுநிர்வாணமாக இருந்தாலும் இதில் எவ்வித விரசமும் இல்லை என்கிறார்கள் வாசகர்கள்" என்று கூறியுள்ளார் பத்திரிகையின் ஆசிரியர்.

"முன்னர் நடிகை டெமிமூர் கொடுத்த நிர்வாண போஸைவிட இது சாதாரணம்!" என நியாயப்படுத்தியுள்ளார் பமீலா அண்டர்சன் லீ.

இப்படியும் ஒருவர்

மரணதண்டனை நிறைவேற்ற பல வருடங்களுக்கு முன் 'கில்லட்டின்' என்ற கத்தி போன்ற கருவி பயன்படுத்தப்பட்டது. 'கில்லட்டின்' கருவிகள் உள்ளே கழுத்தை வீட்டுக் கருவியை இயக்க உருளைக் கிழங்கை நறுக்குவது போல நறுக்கும்.

இப்போது இக்கருவியினால் மரண தண்டனை வழங்குவது பழக்கத்தில் இல்லை. அருங்காட்சியகங்களில் மட்டுமே இவை உள்ளன.

இங்கிலாந்தில் உள்ள ஹார்லி ஃபேக்ஸ் நகரத்தைச் சேர்ந்த கொலின் வின்சென்ட் என்பவரின் மனைவி திடீரென்று இறந்துவிட்டார். மனைவியின் பிரிவைத்தாங்காது கவலையில் மூழ்கினார் வின்சென்ட்.

அவருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. இரும்புக்கடை ஒன்றுக்குச் சென்றார். இரும்புச் சட்டங்களையும், நீண்ட கத்தி ஒன்றையும் வாங்கி வந்தார்.

தான் ஒருவராகவே உழைத்து நவீன முறையில் ஒரு 'கில்லட்டின்' கருவியைத் தயாரித்தார். தானே இயங்கும்படி அதை வடிவமைத்தார்.

எல்லோரும் பார்க்கும்படி அதை வீட்டிற்கு வெளியே கொண்டு வந்து வைத்தார். தலையை நுழைத்துக் கருவியை இயக்க, தலை துண்டாகிக் கீழே விழுந்தது.

இப்படியும் ஒரு தற்கொலை.

உள்ளாடை மூலம் உதவி

படத்தைப் பார்த்ததும் ஏதோ கிளுகிளுப்பான விஷயம் என்று எண்ணத் தோன்றும். அதை முதலில் மூட்டை கட்டி வையுங்கள்.

ஆபிரிக்கநாட்டு ஏழைக் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவ இத்தாலி நாட்டு ஆடை நிறுவனமான 'லோர்னஸ் ரிவா' ஓர் ஏற்பாடு செய்தது.

அதன்படி நூற்றுக்கணக்கான வைரங்கள், முத்துக்கள் கோர்த்து உள்ளாடை தயாரிக்கப்பட்டது. அதை பெண் ஒருவருக்கு அணிவித்து ஏலத்திற்கு விட்டனர்.

இந்த உள்ளாடை சுமார் ஏழரைக் கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. ஏலத்தின்போது அந்த ஆடையை அணிந்திருந்தவர் முக்கிய நபர் ஒருவரின் உறவினர்.

அவர் வேறு யாருமல்ல, முன்னாள் தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் சகோதரி மகள்.

ஆச்சரியமான அதிசயம்

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வொய்ட்புல் என்ற பெண்மணி கோமா நிலையில் இருந்து நினைவு திரும்பியிருக்கிறார்.

இது ஒன்றும் அவ்வளவு பெரிய ஆச்சரியமான விஷயம் இல்லையே? என நினைக்கலாம். ஆனால் இவர் கோமா நிலையடைந்தது 16 வருடங்களுக்கு முன்பு. இது பெரிய ஆச்சரியம் தானே.

16 வருடங்களாக படுத்த படுக்கையில் இருந்த இவருக்கு குழாய் வழியாகத்தான் உணவு கொடுத்து வந்தார்கள். இனியும் அதிக காலம் தாக்குப் பிடிக்க மாட்டார் என டாக்டர்கள் நினைத்தார்களாம்.

ஆனால் திடீரென அந்த மாது பழைய நினைவுக்குத் திரும்பிவிட்டார். அது மட்டுமன்றி நன்றாக நடமாடியும் வருகிறார்.

கிறிஸ்துமஸ் தினத்திற்கு சில தினங்களுக்கு முன்தான் இவருக்கு நினைவு திரும்பியது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்காக பொருட்களை வாங்க இவர் கடைகளுக்கும் ஏறி இறங்கினார்.

ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது இந்த அதிசயம்.

மகாராணியின் கோபம்

எவ்வளவு பெரிய ஆட்களாக இருந்தால் என்ன? கோபம் உள்ளிட்ட உணர்ச்சிகள் அனைவருக்கும் ஒன்றுதான்.

இங்கிலாந்தின் மறைந்த இளவரசியான டயானாவும் அவரது காதலர் டோடி ஃபயட்டும் விபத்தில் மரணமானது அனைவரும் அறிந்ததே.

டயானாவைக் கொல்ல எலிசபெத் மகாராணியின் கணவர் ஃபிலிப்தான் சதித்திட்டம் தீட்டினார் என டோடியின் தந்தை முகமட் அல்ஃபயட் குற்றஞ்சாட்டினார்.

இதை எதிர்த்து மகாராணி மான நஷ்ட வழக்குத் தொடரவுள்ளார்.

இதற்கிடையில் இலண்டனில் ஹாரோட்ஸ் என்ற இடத்தில் முகமட் அல்ஃபயட்டுக்குச் சொந்தமான கடை ஒன்று உள்ளது. அந்தக் கடையில் இங்கிலாந்து அரண்மனைக்கென அண்மையில் சுமார் 10 இலட்ச ரூபாய்க்கு கிறிஸ்துமஸ் கேக் வாங்க ஓடர் கொடுக்கப்பட்டது.

முகமட் அல்ஃபயட்டின் குற்றச் சாட்டில் கோபமடைந்த மகாராணி, ஓடர் செய்த கேக்கை இரத்துச் செய்து விட்டு வேறு கடையில் வாங்கியுள்ளார்.

நெட்டையரும் குட்டையரும்

உலகின் அதி உயரமான மனிதர் என்று சாதனைப் பதிவு-கின்னஸ் புத்தகத்தில் பொறிக்கப்பட்டவர் நசீர் அஹமட் சும்ரோ. பாகிஸ்தானைச் சேர்ந்த சும்ரோவின் உயரம் 236.2 சென்டிமீட்டர். இவர் அண்மையில் தைவான் சென்றிருந்தார். தலைநகர் தைப்பேயில் வைத்து அந்தநாட்டின் மிகவும் குள்ளமான மனிதரைக் கண்டார் சும்ரோ. அவரும் ஒரு சிறந்த எழுத்தாளர். லிஞ்சி-இவருடைய உயரம் ஆக 67.5 சென்டிமீட்டர் தான்.



காரிகைகள் கொடுத்த காலண்டர் போஸ்

பிரபலங்களின் படங்களை காலண்டர்களில் போட்டு வருவது வழக்கமான விடயம்.

அவுஸ்திரேலியா நாட்டில் கால் பந்து வீரர்களின் ஃபோட்டோக்களை காலண்டர்களில் போடுவது வழக்கம்.

இம்முறை அவுஸ்திரேலிய கால்பந்தாட்ட வீராங்கனைகள் குழுவாக நின்று குளிப்பது போன்று ஃபோட்டோவுக்கு போஸ் கொடுத்தார்கள். உடனே இப்படத்தை காலண்டராகப் போட்டு விட்டார்கள்.

பிறந்த மேனியுடன் கால்பந்தாட்ட காரிகைகள் கொடுத்த இந்த கலக்கல் போஸ் காலண்டர்களுக்கு அங்கு சரியான கிராக்கியாம்.

திருவாளர் பாம்பு

'திருவாளர் பாம்பர்' என்ற (லாபல் அபுஹையா) என்ற சிறப்புப் பெயர் பெற்ற இவர் டமஸ்கஸ் நாட்டைச் சேர்ந்தவர். ஃபாயக் ஹௌராணி என்பது இவருடைய சொந்தப் பெயர். இவர் கடந்த 3 வருடங்களாக விளையாடுவது நச்சுப் பாம்புகளுடன்தான். நச்சுப்பாம்புகள் இவரைத் தீண்டினாலும் இவருக்கு விஷம் ஏறுவதில்லை.

ஹௌராணிக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் கொடியவிஷப் பாம்பு ஒன்று தீண்டிவிட்டது. இதனைத் தொடர்ந்து 6 மணி நேரம் இவர் பேச்சு முச்சற்றுக் கிடந்தார். இவர் இறந்து விட்டார் என்று கருதிய இவரின் கிராமத்தில் உறவினர், நல்லடக்கத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர். ஆனால் இவர் திடீரெனக் கண்விழித்து, சாதாரணமாக நடமாடத் தொடங்கி விட்டார். அன்றிலிருந்து விஷப்பாம்புகளைக் கைகளாலேயே பிடித்து விளையாடுவதையே பொழுது போக்காகக் கொண்டுள்ளார்.

'ஃபிலிம்' இல்லாத கமரா

படப்பிடிப்புக்குப் பயன் படுத்தப்படும் 'ஃபிலிம்' இல்லாமலேயே கணினிச் சாதனங்களில் பயன் படுத்தப்படும் டிஸ்க்குகளைப் பயன் படுத்தும் நவீன கமராதான் படத்தில் காட்சி தருகிறது. ஜனவரி மாதம் 19ம் திகதி ஜப்பான் தலை நகரான டோக்கியோவில் மிற்கஷிட்டா மின் பொருள் உற்பத்தி நிறுவனம் இந்த டிஜிட்டல் கமராவை அறிமுகம் செய்தது.

LK-RQ132S என்ற பெயர் சூட்டப்பட்ட இக் கமரா சாதாரணமாக 1500 உருவப்படங்களையும் 450 அதிவிசேட படங்களையும் பதிவு செய்து பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளும் சக்தி படைத்வாயந்தது.

இக்கமராவை சாதாரண கணினியில் பொருத்திவிட்டால், அதில் பதிவு செய்யப்பட்ட படங்களைப் பிரதிபண்ணி எடுக்கலாம். இக் கமரா பெப்ரவரி முதல் திகதியன்று ஜப்பான் சந்தையில் விற்பனைக்கு வந்து விட்டது. இதன் விலை 1095 அமெரிக்க டொலர் மட்டுமே.

அதிசய அன்னப் பறவை

அன்னப்பறவையைப் பார்ப்பதே அதிசயம். அதிலும் கறுப்பு அன்னம் என்றால் அதைவிட அபூர்வம். சீனாவில் உள்ள உகான் விலங்கியல் பூங்காவில் உள்ள கறுப்பு அன்னப் பறவைகள் வெள்ளை நிறக் குஞ்சுகள் பொரித்துள்ளன. அவை பெற்றோருடன் ஆனந்தமாக நீந்தும் அற்புதக் காட்சிதான் இது.

திரையுலக மறுபக்கம் 136

சுசீந்தர் டிசைனும் மயன்

நகைச்சுவை நடிகரின் புத்தாண்டுக் கொண்டாட்டம்

புத்தாண்டுக் கொண்டாட்டங்களை திரையுலகப் புள்ளிகள் பலர் குதூகலமாகக் கொண்டாடியிருந்தார்கள். அவர்களில் நகைச்சுவை நடிகர் ஒருவரையும் சொல்லத் வேண்டும்.

புத்தாண்டு தினத்திற்கு முதல் நாள் மாலையே இவர் கொண்டாட்டத்தைத் தொடக்கிவிட்டார்.

சென்னையில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் எந்நேரமும் கூட்டம் மொய்த்துக் கொண்டிருக்கும். அந்த ஹோட்டல் வளாகத்தில் ஒங்கி உயர்ந்த மரத்தின் கீழ் பெண் ஒருவர் காத்திருந்தார்.

சடிதார் அணைந்திருந்த அந்த சந்தரிக்கு வயது முப்பதிற்குள்தான் இருக்கும்.

சிறிது நேரத்தில் வேக வேகமாய் வந்து கிறீச்சிட்டு பிரேக் அடித்து நின்றது ஒரு புத்தம் புது கார்.

காரின் கதவு திறந்து கொண்டு, உள்ளே இருந்தவர் யார் என தெரிவதற்குத் தெரிந்தது ரஜினி, கமல் என முன்னணி நடிகர்களுடன் நகைச்சுவை வேடங்களில் நடித்தவர் அவர்.

அடுத்த விநாடி புன்னகை பூத்த முகத்துடன் முன் இருக்கையில் தாவி ஏறினார் அந்த சடிதார் சந்தரி.

வந்த வேகத்திலேயே, புயலாய்ப் புறப்பட்டது கார்.

இந்த நகைச்சுவை நடிகருக்கு குடும்பம் இருக்க, இவருக்கு ஏன், அதுவும் பட்டப்பகலில் பப்ளிக்கான ஹோட்டலில் என நடிகரைக் கண்டு கொண்ட சிலர் குழம்பினர்.

பெயரில் 5 எழுத்துக் கொண்ட இவரது முதல் எழுத்து தமிழ் எழுத்து அல்ல. இவர் பெயரில் இராமாயணத்தில் ஒர் அரசன் இருக்கிறார்.

தாமதம்

கடந்த தீபாவளி தினத்தன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட படங்கள் கமலின் 'ஹேராம்', மணிரத்னத்தின் 'அலைபாயுதே', ராஜீவ் மேனனின் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்'.

பின் இவை மூன்றும் பொங்கலுக்கு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. பொங்கலுக்கும் வெளியாகவில்லை. இவற்றின் வெளியீடு தாமதமாகிக் கொண்டே போகிறது.

முகப்பில் சத்யன்-கௌரவ்யா
ஸ்டில்ஸ்: இளையவன்



விஜயகாந்த் படம்: வானத்தைப்போல

சொர்க்கம் பக்கத்தில்

'தலைமுறை' படத்தைத் தயாரித்து நடித்த இயக்குநர் கேஎஸ்.அதியமான் இப்போது 'வீரநடை' படத்தைத் தயாரித்து வருகிறார். இதையடுத்து இவர் தயாரிக்கும் படம் 'சொர்க்கம் பக்கத்தில்'.

இப்படத்தில் கதாநாயகனாக அதியமான் நடிக்க அவருக்கு ஜோடியாக பிரபல முன்னணி நடிகை ஒருவர் நடிக்கவுள்ளார்.

கேஎஸ்.அதியமான் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதி இயக்க, ஸ்வரராஜ் இசையமைக்கிறார்.

இரண்டாம்

'சின்னத்தம்பி' படத்தின் இரண்டாம் பாகம் என்று சொல்லக்கூடிய வகையில் பிரபாகர், பிரபு தயாரிப்பாளர் கேபாலு கூட்டணியில் ஒரு படம் தயாராகவுள்ளது.

இதில் 'சின்னத்தம்பி' நாயகி குஷ்புவையும் நடிக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரஜினி-சரண்யா படம்: சிங்கநடை

அக்காவின் உதவி

'நன்றாக நடிக்கிறார்' என்பேர் வந்த உடனே ஜோதிகாவுக்கு வாய்ப்பும் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

அலாதி மனங்கவர் சூர்யாவுடன் 'உயிரிலே கலந்து' அறிந்துடன் 'முகவரி'யாகிவிட்ட ஜோதிகா விஜய்யுடன் 'குஷி'யாக நடிக்கிறார்.

அதற்கென்ன இப்பொழுது என்று கேட்கிறீர்களா? படங்களில் நடிக்கத் தேதி விவரம் சரிவர கிடைக்காமல் போக, இப்போது அக்கா நக்மாவே ஜோதிகாவின் தேதி விவரங்களைக் கவனித்து வருகிறார்.

ஜோதிகாவிடம் என்ன கேட்டாலும் 'அக்காவைக் கேளுங்கள்' என ஒரே பதில் தான் கிடைக்கிறது.

சரத்குமாருடன் ஏற்பட்ட பிணக்கின் பின் பட வாய்ப்பினைத் இழந்த நக்மா இப்பொழுதுதான் கோடம்பாக்கம் பக்கம் தலைகாட்டுகிறார்.



கஜோலா படம்: மானசீகக் காதல்

மினி சினி

★ 'அமர்க்களம்' படத்தில் ஷாலினியைச் சொந்தக் குரலில் பாட வைத்த அப்படத்தின் இயக்குநர் சரண், தற்போது இயக்கி வரும் 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தில் பிரசாந்தைப் பாட வைக்கப் போகிறார்.

★ 'வானத்தைப் போல' வெற்றிகரமாக ஓடுவதால் இதைத் தெலுங்கிலும் தயாரிக்க முடிவு செய்துள்ளனர். தமிழில் விஜயகாந்த் நடித்த வேடங்களில் தெலுங்கில் வெங்கடேஷ் நடிக்கவுள்ளார்.

★ ஷாஜி கைலாஷ் இயக்கத்தில் மோகன்லால் கதாநாயகனாக நடித்து வரும் மலையாளப்படம் 'நரசிம்மம்' இதில் இராணுவ வீரர் வேடத்தில் நடிக்கும் மோகன்லாலுக்கு ஜோடியாக ஐஸ்வர்யா நடிக்கிறார்.

★ சத்யராஜ்-தேவயானி நடிக்கும் 'என்னம்மா கண்ணு' படத்தை இயக்குபவர் ஷக்தி சிதம்பரம். இவர் 'வெட்டு ஒன்னு துண்டு ரெண்டு', 'சாம்ராட்' போன்ற படங்களை தினகர் என்ற பெயரில் இயக்கியவர்.

★ விஜய்-ஜோதிகா ஜோடியாக நடிக்கும் 'குஷி' படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்க மானவிகாவை அணுகினார்கள். மானவிகா அதில் நடிக்க மறுத்து விட்டார்.

★ 'காதலர் தினம்' படத்தின் நாயகன் குணாலை வைத்துப் படம் தயாரிக்கப் போகிறார் 'அன்பாலயா' பிரபாகரன். இந்தப் படத்தை அகத்தியன் இயக்கவுள்ளார்.

★ அசோக சாம்ராஜ் தயாரிக்க முரளி கதாநாயகனாக நடிக்கும் படம் 'கல் வெட்டு'. இப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் திவ்யா உன்னி மலையாளத்தில் முன்னணியில் உள்ளவர்.

விக்ரமனும் விஜய்யும்

'பூவே உனக்காக' விக்ரமன் இயக்க, விஜய் நடித்து வெற்றி பெற்ற படம். இப்படம் பின் விஜய்யின் மார்க்கெட் உச்சத்துப் சென்றது.

'பூவே உனக்காக' படத்திற்குப் பின் நாயகனாக வைத்துப் படமெடுக்க முடிவு செய்திருந்தார் விக்ரமன். அ

சுந்தர் சி.யின் 'உ

'மலபார் போலீஸ்' வெற்றிக்குப் பி இப்போது கமர் 5 படங்களில் ஜோடி அவற்றில் ஒன்று 'உன்னைக் கண் கல்யாண மண்டபம் ஒன்றில் ஒரே மான சம்பவங்களை அடிப்படையாக முழுக்க முழுக்க நகைச்சுவை கப்பட்டு எடுக்கும் சந்

சினி விசிட்

புதிய வாய்ப்புக்கள்

'சேது' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அப்படத்தின் நாயகன் விக்ரமிற்குப் பல புதிய பட வாய்ப்புக்கள் வந்துள்ளன. அவற்றில் ரோஜா கம்பைன்ஸ், லட்சுமி மூவி மேக்கர்ஸ், பி.ஏ.ஆர்ட்ஸ் ஆகிய 3 நிறுவனங்கள் தயாரிக்கும் படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

பிரகாஷ்ராஜின் 'குருபிரம்மா'

தனது தாய்க்கு இழைக்கப்படும் கொடுமையை அந்தப் பிஞ்சு உள்ளம் நேரில் காண்கிறது. அன்றிலிருந்து அவன் கொஞ்சம் கொஞ்சமாக மிருகமாகிறான். நல்லவனாக நடித்துப் பல கொடூரக் கொலைகளைச் செய்கிறான்.

இவனது முடிவு என்ன என்பதே கதை. இந்தப் படம் 'கன்ஷாட்' என்ற பெயரில் 100 நாட்களுக்கு மேல் தெலுங்கில் ஓடி இப்போது 'குரு பிரம்மா' என்ற பெயரில் தமிழுக்கு மொழி மாற்றப்படுகிறது.

குரு பிரம்மா வேடத்தில் பிரகாஷ்ராஜ் நடித்திருக்கிறார். இவருடன் கீர்த்தி ரெட்டி உட்பட பலர் நடித்துள்ளனர்.

நல்ல மனம்

புதிய இயக்குநர் இயக்கும் முதல் படத்திற்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிக மிகக் குறைவு. அதிகபட்சம் 75 ஆயிரம் ரூபாய் தான். அதைக் கூடப் பலர் கொடுக்க மாட்டார்கள்.

ஆனால் 'வல்லரசு' படத்தை இயக்கும் புதிய இயக்குநர் மகாராஜனுக்கு 3 இலட்சம் ரூபாய் கொடுத்துள்ளார் நல்ல மனம் உள்ள விஜய காந்த்.

ஸ்ரீவித்யாவுக்கு கமல் எழுதிய கடிதம்

அப்படத்தில் நடிக்க முடியாமல் போய்விட்டது. அதில் நடிக்கத் நடித்தார் படம் 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' இப்போது விக்ரமனும் இணைந்து மொன்றை இயக்குகிறார்கள்.

ஸ்ரீவித்யா போற்றிப் பாதுகாத்து வரும் பொருட்களில் கமல் அவருக்கு எழுதிய கடிதமும் ஒன்று.

'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் ஸ்ரீவித்யா சிறப்பாக நடித்ததற்காக கமல் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினார். அதைத்தான் போற்றிப் பாதுகாத்து வருவதாக அண்மையில் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார் ஸ்ரீவித்யா.

காதோடு சொல்லுகிறோம்

தொடை அழகு காட்டி போ பெற்ற அந்த முன்னெழுத்து நடிகைக்கு தற்போது தமிழில் இறங்குமுகம். இதனால் அன்னப் போது தெலுங்குப் பட உலகிற்குச் சென்று வாய்ப்புக் கேட்டு வருகிறாராம்.

காதல் சின்னத்தின் பெயரில் படமெடுத்து மணனைக் கவ்விய 'மன்னாசனை' இயக்குநர், வெற்றிபெறும் இளம் இயக்குநர்களைத் தேடி மகனுக்கு மறுவாழ்வு கிடைக்க படம் பண்ணுமாறு கேட்கிறாராம்.

நடனப்புயல் நடிகர் உடன் நடிக்கும் நடிகைகளை ரொம்பவும் இம்சித்து வருகிறாராம். அதிலும் வெளியூர்களில் படப்பிடிப்பு என்றால் நடிகரின் தொல்லை எல்லை மீறிப் போய் விடுகிறதாம்.

கண்ணழகியான இரண்டெழுத்து நடிகைக்கு அண்மைக் காலமாக முகத்தில் அன்னக்கனைப் போல மீசை முளைக்க ஆரம்பித்திருக்கிறதாம். அம்மணி அடித்துப் பிடித்துக் கொண்டு அக்கரைச் சீமைக்குச் சென்று சிகிச்சை செய்து விட்டாராம்.

'காதலுக்கு மரியாதை' செய்த நாயகியின் சகோதரன் கவர்ச்சி நடிகை ஒருவருடன் நெருக்கமாக இருக்கிறாராம். இந்த நடிகையும் இவரது சகோதரியும் தமிழிலும் நடித்திருக்கிறார்கள்.

உதயா-விந்தியா
படம்: திருநெல்வேலி

சுற்றுலா

நடிகர் நெப்போலியன், தன் மனைவி, மகன் தனுஷ் ஆகியோருடன் ஒரு மாத காலம் சுற்றுலா மேற்கொண்டுள்ளார். துபாய், துவைத் மற்றும் அரபு நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார்.

தெலுங்கில் 'குஷி'

இந்தியன், 'காதலர் தினம்' போன்ற படங்களைத் தயாரித்த எஸ்.ரத்னம் தற்போது விஜய்-ஜோதிகா நடிக்கும் 'குஷி' படத்தை தயாரித்து வருகிறார்.

'லாலி' பட இயக்குநர் எஸ்.ஜே. சூர்யா இயக்கும் இப்படத்தில் படப்பிடிப்புக்கள் முடிவடைந்து விட்டன. படம் திருப்திகரமாக இருப்பதால் ரத்னம் இதை தெலுங்கிலும் தயாரிக்க முடிவு செய்து விட்டார்.

தெலுங்கு 'குஷி' யில் சிரஞ்சீவியின் தம்பி பவன் கல்யாண் நாயகனாக நடிக்கிறார். சூர்யாவே தெலுங்குப் படத்தையும் இயக்குகிறார்.

ஜோதிகா
படம்: குஷி

...னைக் கண் தேடுதே'

...ரத்யராஜ்-குஷ்பு ஜோடி ...க நடித்து வருகின்றனர். ...தே' ...னில் நடக்கும் சுவாரசிய ...ண்ட கதைதான் இது. ...முக்கியத்துவம் கொடுக்...ப்படத்தை இயக்குகிறார்

இரட்டை வேடத்தில் சங்கீதா

'யுனைட்டட் அன்ட் சோ' என்ற புதிய நிறுவனம் தயாரிக்கும் படம் 'கன்கிறந்து பாரம்மா'. இப்படத்தில் ரஞ்சித் கதா நாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக சங்கீதா நடிக்கிறார். இதில் இவர் முதன் முதலாக இரட்டை வேடங்களில் நடிக்கிறார்.

அம்மனின் அருமை பெருமைகளைக் கூறும் இந்தப் பக்திப் படத்தை செல்வா எல்.சி என்ற புதியவர் இயக்குகிறார்.

கைவிட்டார்

அரவிந்தசாமி-மாதுரி டீக்ஷித் நடிக்கும் 'என் ஜீனியர்' படத்தின் படப் பிடிப்புக்கள் பண தெருக்கடியால் நிறுத்தப்பட்டிருந்தது. மாதுரி இப்போது திருமணம் செய்து கொண்டு அமெரிக்கா போய் விட்டதால், அப்படத்தைக் கை விட்டு விட்டு அடுத்த படத்தில் இறங்கி விட்டார் அதன் இயக்குநர் காந்தி கிருஷ்ணா.

அறியானை!!

உன்
முகம் காணாத
இந்த நாட்களில்
நான் சந்தோஷமாயிருக்கிறேன்...!

✍

முன்போல்
உன் ஞாபகங்கள்
என்னை
வாட்டி வதக்குவதில்லை....
மாறாக
உன் வஞ்சகம் தான்
என்னை வதைக்கிறது...!

✍

எத்தனை அழகாய்
நான்
ஏமாற்றப்பட்டேன்....!

✍

நீ
புன்னகை என்ற
ஆயுதத்தால் – என்னை
சிறிது சிறிதாய்
கொள்ளையிட்டது....?

✍

காதல் என்ற
பெயரில் – என்
கல்லூரிக் கல்வியை
காயப்படுத்தியது.....?
உன்
அன்பான வார்த்தைகளால்
என் ஆயுளின்
கால் பாகத்தை
களவாடியது..!
என்று
எல்லாம் இழந்தபின்னும்....!

✍

உனக்காக
என்னிடம்
எஞ்சியிருந்த
காதலையும்
கலைத்துச் சென்றாய்....!

✍

கண்ணீர் விட்டு
கதறினேன்...
நீ
காது கொடாமல்
போய் விட்டாய்....

✍

'காதல்' என்ற சொல்லுக்கு
பொருள்
ஏமாற்றுதல்
என்று நீ
நினைத்திருந்தால்
இனியாவது
திருத்திக்கொள்!
'புனிதம்' என்று....!

ராம். யுவராஜ், கண்டி.

"உங்கள் வரவால் உவகைகொள்கிறோம்!"

எதிர்பாராமல் சந்தித்தேன்;
உனக்காக உள்ளம் துடித்தேன்;
உயிரிலே பாசம் வளர்த்து–
நிச்சயித்த நாளில் பிரிந்தேன்;
நினைவுகளில் தேங்கிய அன்பை
நான் இன்று சொல்கிறேன்!

❦

அன்பின் உணர்வுகள்
எனைத் தாண்டிப் போகையில்
அவற்றை மறந்து விடுகிறேன்!
இழந்தது இளவேனிலா?
வருவது வசந்த காலமா?
வானமே–இங்கு
பறிபோன பின்னர்
வரும் காலம் பற்றி
நானெப்படித் தீர்மானிப்பது?

❦

திரும்பும் திசையெல்லாம்
உனது சிரித்த முகமே
விம்பமாகத்
தோன்றி மறையும் போது,
உனை நான்
பிரிந்து வரவில்லையென்றே
எண்ணத் தோன்றுகின்ற தண்ணா!

❦

உன்னிடம்,
நண்பர்களோடு நான்
விடைபெற்று வந்த நாளில்
நூலக முற்றத்திலும்
பின்னர்...
கல்லூரி வாயிலிலும்
இறுகக் கரம் குலுக்கி–நீ
எனக்கு விடை தந்த போது
உனது அன்பின் உறுதியை
இதயத்தில் உணர்த்தினாய்!

❦

அன்று,
ஜமையாய் நின்றிருந்து
பிரிவுத் துயரில்
கலங்கியதே உயிர்களைப்
பார்த்திருந்த
கல்லூரிக் கட்டடங்கள்...
அழுது வழிந்த ஆகாயம்....
ஆடாமல், அசையாமல்
குளிரிலே உறைந்து போயிருந்த
அடர்ந்த மரங்கள்...
துளித் துளியாய்
தேங்கிய நீரில் வீழ்ந்து தெறித்த
நீர்த்திவலைகள்...

❦

மார்கழிக் குளிர் குழ்ந்திருந்த
அதிகாலையில்–நாம்
விடைபெற்று வாகனமேறியபோது,
வானில் உதித்திருந்த
தேய் பிறையும் ஏற்றை நட்சத்திரமும்
இவையெல்லாம்...
எனது நினைவில் நிலைத்தவை;
உனது நினைவுகளைப் பற்றியும்
எனக்குச் சொல்லண்ணா!

❦

பரந்த வயல் வெளிகளையும்
பனை மரங்களையும்
"உங்கள் வருகைக்கு நன்றி!",
"மீண்டும் உங்கள் வரவை
எதிர்பார்க்கிறோம்!"
(வீதியோர வாசகங்) களையும் கடந்து
உனதினிய தேசம் விட்டு
நான் வந்து விட்டேன்.

❦

என்றாலும், எனதண்ணா!
வாழ்க்கை நீளவும்
நிலைத்திருக்கும்
சகோதரத்துவத்தை
உனது தேசத்தில் வைத்து
எனக்களித்தாய்;
நன்றி.

பஹீமா ஜஹான்,
மெல்சிரிபுர.

பே(சு!)சிவிடு!

பெண்ணே பேசு!–நீ
வசிக்கும் தெருவழியேதான் நான்
அடிக்கடி பயணம் செய்கிறேன்.

➵ ♡

நீ செல்லும் தேவாலயம்,
தண்ணீர் பிடிக்கும் குழாயடி என்று
கூடவே தொடர்கிறேன்...
ஏன் தெரியுமா?
என்னில் வசிக்கும்
உன்னை–நீ
உணரவேண்டுமென்றுதான்!

➵ ♡

ஆனால் நீயோ...
ஆண்கள் என்றதும்
ஆதுங்கிவிடுகிறாய்!–அந்த
ஆதுக்கமும், கூச்சமும்
உன்னில்
என்னை மென்மேலும்
பிணைக்கிறது என்று
சொல்லிவிடவே நினைக்கிறேன்....

➵ ♡

இன்றல்ல....
என்றாவது ஒரு நாளில்–இந்த
ஊமையின் காதல்
உன்னை சந்திக்கவே போகிறது!
அப்போது–நீ
இழந்துபோன காலங்களுக்காக
ஏங்கலாம்!

➵ ♡

இந்நிலை உனக்கு
வேண்டாமென்றுதான்–பேசு
என்கிறேன்!
இல்லையென்றால்....
உறவுகள்
என்னை ஒருத்திக்கும்
உன்னை ஒருவனுக்கும்
பலியாக்கிவிடலாம்...

➵ ♡

இந்நிலை இருவருக்கும்
வேண்டாமென்றுதான் –பேசு
என்கிறேன்!

➵ ♡

அன்பே பேசு!
உந்தன் வாய்மொழியை... நான்
கேட்கவில்லை...
வேல்விழிகள் இரண்டினதும்
பார்வைமொழி வேண்டுமென்றுதான்
உன்னிடம் யாசிக்கிறேன்!

➵ ♡

உன்னால்–நான்
பைத்தியமாகுமுன்
என்னோடு நீ பேசு!
தயவுசெய்து எந்தன்
கண்ணோடு–நீ
பேசிவிடு!!!

என். எல். சி, உடப்பு.

ஏ(ன்)மாற்றம்

மனமுள்ளவன் என்றுன்னை காதலித்து
மணமுடிக்குமளவு ஸ்பரிசம் செய்தேன்!
ஆழத்திலிருந்து தந்தேனே என் காதலை!
ஏன் நடித்தாய் காதலிப்பதுபோல்?
ஏன் உடைத்தாய் இந்த இதயத்தை?
அன்று நீ மறக்க நினைத்த போது!
தூக்கியெறிந்தது என்னையல்ல;
உன்காதலைத்தான்.
நீயொருவள்ளல்; ஏனென்றால்!
எனக்காக நரகமொன்றை தந்தவன்
அல்லவா?

கோ. கிஷ்ஜனா, ஆரையம்பதி–02.

தேன் கிண்ணம்

விலாசமற்றகடுதாசி

லயத்து வீட்டுக்குள்ளே குப்பி
லாம்பு வெளிச்சத்திலே
வெட்டி வெட்டி எழுதினேனே
மாமனுக்கு கடுதாசி....!

•••

விலாசந்தான் தெரியலையே!
விவரம் தான் புரியலையே!
எங்கே இருக்கிற மச்சானே?
எத்தன நாள் காத்திருக்கேன்?

•••ஏ

பொழுது விடிஞ்சாக்கா
பொட்டுள்ள எங்களுக்கு
கூடை சுமக்க இருக்கு!
கூட ஒ நெனப்பிருக்கு!

•••

பச்ச மலைய கேளு
ஏம் மனச சொல்லும்!
தேயிலை மரத்த பாரு
ஏ வயச சொல்லும்!

•••

பாவி கைகளுக்கு
வளையலு கேட்டேனா? அத
வாங்கி வரப் போய் தானே
காணாம நீ போன!

•••

போலீச கேட்டாக்கா
போமன்னு வெரட்ராக!
ஊர கேட்டாக்கா
உளவாளின்னு சொல்றாக!

•••

யாரோ யாரோ வந்தாக
கால கால பிடிச்சேனே!
கால் கடுக்க அலைஞ்சேனே!
காத்திருந்து களைச்சேனே!

•••

காசிருந்தா வீசியிருப்பேன்!
நகையிருந்தா வித்திருப்பேன்!
இடம்பு பன்னிருக்கு–அது
ஒனக்கு மட்டும் தானே?

•••

ஜெயிலுக்குள்ள நீயிருக்க
லயத்துக்குள்ளே நானிருக்க...
எங்க இருந்தா என்ன–மச்சானே
மனசால பண்ணு தானே..?

சுபத்ரா, கண்டி.

பேனா நண்பர்கள்



பெயர்: பி. நீலவண்ணன்
வயது: 20
முகவரி:
15ம் கட்டை,
உடுப்பிட்டி
பொழுது போக்கு:
வழமையானவை.

பெயர்: எம். குமுதா,
வயது: --
முகவரி: கோவில் வீதி,
வீரமுனை–02,
சம்மாந்துறை.
பொழுது போக்கு:
வழமையானவை.

இந்தவாரம் உங்கள் பலன்

20.02.2000 முதல் 26.02.2000வரை

ஜோதிடர் 'கானா'

மேடம்:
நீண்ட நாள் உடல் உபாதைகள், மெல்ல நீங்கும். வீட்டில் மங்கள கரமான நிகழ்வுகள் நடைபெறும். வெளிநாட்டுத் தொடர்புகள் சாதகமாக அமையும். அவசரத் தேவைகளுக்கு கடன் பட நேரிடும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 04, 07.

இடபம்:
குடும்பத்தில் சிறு சச்சரவுகள் ஏற்படும். வார இறுதியில் பிரச்சனைகள் நீங்கும். தூரத்து உறவினரின் நெருக்கமும் உதவியும் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 14, 17.

மிதுனம்:
எதிரிகள் சிக்கல்களை தோற்றுவிப்பார்கள். அரச பயமுண்டு. அயலவர்கள் தொல்லைத் தருவார்கள். ஓரளவு நிம்மதி குறையும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 01, 03.

கடகம்:
அனுகூலமான வாரம். பணம் வந்து சேரும். கடன் பழு நீங்கும். பிற இட பயணமுண்டு. பிள்ளைகளுக்கு சில நோய்கள் ஏற்பட்டு மனக்கிலேசம் தரும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 16, 18.

சிம்மம்:
மாணவர்களுக்கு நன்மை கிட்டும். வீட்டில் கொண்டாட்டங்கள், இனசன சேர்க்கை, ஆலய தரிசனம். மக நட்சத்திர பெண்களுக்கு திருமண ஏற்பாடுகளுக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : மெரூன்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 07, 09.

கன்னி:
மனக்கவலை விலகும். வயோதிபரான உறவினர் பற்றிய கவலை நீங்கும். சகோதர வழி உதவிகள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 17, 19.

துலாம்:
தொழிலில் புதிய முயற்சிகள். பணச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்காது. பயணங்களில் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, திங்கள்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 01, 04.

விருட்சிகம்:
கவலை தரும் வாரம். பயணம் அதிகரிக்கும் பலன் கிட்டாது. நண்பர்களும் விரோதியாவர். கேட்டை நட்சத்திரக்காரருக்கு ஓரளவு நன்மை கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : கருமை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 11, 12.

தனுசு:
உடல் உபாதைகள் தொல்லை தரும். ஆலய தரிசனம் உண்டு. வெளிநாட்டுத் தொடர்புகள் நன்மை தரும். பெரியோர் சேர்க்கை நிம்மதி அளிக்கும்
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 30, 31.

மகரம்:
தெய்வ பக்தி அதிகரிக்கும். பிரிந்தவர் கூடுவர். உறவினர் உதவி கிட்டும். பணவருவாய் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 09, 14.

கும்பம்:
செய் தொழில் நன்மை தரும். குடும்பத்தில் நல்லுறவு பாதிப்படையும். பிள்ளைகள் பிரச்சனை தருவார்கள். நிதானமுடன் பழகவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 18, 21.

மீனம்:
அனுகூலமான வாரம். பெண்களுக்கு திருமணம் கைகூடும். உறவினர் சேர்க்கை தூர இடப் பயணம் பணச் செலவு. உத்திரட்டாதிக்காரர் உயர்வடைவர்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 03, 05.

நில்-கவனி-முன்னேறு

ஒருவரது உள்ளத்திலே ஒரு கருத்து பதிவு ஏற்பட்டுவிட்டால் அது உறுதியாக நடந்தேறியே தீரும்.

ஒருவர் நண்பர்களுடன் காட்டுப்பக்கம் சென்றிருந்தார். அங்கு ஒரு மரத்தின் வேரின்மேல் அமர்ந்து சற்று ஓய்வு எடுத்தார்கள். அப்போது அவர்களுள் ஒருவர் கையிலிருந்த பேனா கத்தியினால் சும்மாயில்லாமல் அந்த வேரை சிறிது செதுக்கினார்.

உடனே ரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்ததைக் கண்டு ஆச்சரியமுற்று அனைவரும் எழுந்து விட்டார்கள். கடைசியில் அது மரத்தின் வேர் இல்லை அது ஒரு மலைப்பாம்பு என்று அறிந்து பயந்தோடினார்கள்.

அதே பயம் முதலில் ஏன் அவர்களுக்கு ஏற்படவில்லை? அதை மரவேர் என்று எண்ணிய தால் பயம் இல்லை. இதனால் மனநம்பிக்கை ஒருவனது மனோபாவத்தை அடியோடு மாற்றி விடுகிறது என்பதை உணரமுடிகிறது.

முதலிலேயே அது மலைப்பாம்பு என்று தெரிந்திருந்தால், அதன் அருகில் வந்திருப்பார்களா? அது அம்மரத்தின் வேர் என்று எண்ணியதால், அதன்மீது அமர்ந்து வெகு நேரம் உல்லாசமாகப் பேசி கொண்டிருந்தார்கள். உண்மை தெரிந்ததும் மனோநிலை மாறிவிட்டது. அதனால் மனத்தின் உண்மை நிலையை உங்களால் ஒருவாறு உணர முடிகிறதல்லவா?

ஒருவன் நன்றாகத்தான் இருக்கிறான். ஆனால் அவன் நண்பன் அவனைப் பார்த்து விட்டு, "என்னடா இது, ஏன் உன்முகம் இப்படி இருக்கிறது? உடல் நலம் சரியில்லையா?" என்கிறான். "அப்படியொன்றும் இல்லையே" என்று பேச்சை இழுத்தான்.

அடுத்து வந்த நண்பனும் "என்னடா இது? உன்னைப் பார்த்தால் என்னவோ போல் இருக்கிறதே. ஏன் இன்று அலுவலகத்திற்கு வந்தாய்?" என்றான். அதைக் கேட்டதும், அவனுக்கு' உடம்புக்கு வந்து விட்டது. நன்றாக இருந்த அவன் ஏன் இப்படி ஆனான்?

எல்லாம் அவனது மனோநிலை செய்த வேலைதான். நமக்கு உண்மையாக ஏதோ வந்துவிட்டது என்று எண்ணினால் அவ்வளவுதான். இதே எண்ணம் ஒருவனுக்கு நன்மையும் செய்யலாம். மனத்தால் தியானம் செய்கிறோம். அப்பொழுது மனம் ஒரு கட்டுப்பாட்டில் இயங்குவதை நீங்கள் உணரலாமே?

அதன் விளைவாக நாம் செய்யும், ஈடுபடும் காரியங்களில் ஒருவிதத் தெளிவு ஏற்படுவதைக் காணலாம். நமது வேலைகளில் ஒருவித ஆக்க சக்தி ஏற்படுவதை உணரலாம். அப்பொழுது நம்மிடம் எங்கிருந்தோ ஒரு வித நிதானம் நிலவத்

தொடங்குகிறது. அக்காரிய முடிவு நமது கைக்குள் இருப்பதாகவே உணருகிறோம். நாள்தோறும் இப்படி சில நிமிட நேரம் பயிற்சி செய்வது மீதி நேரத்தையும் சிறப்பாகப் பயனுடையதாக ஆக்கிவிடுகிறது. இந்த ஏற்பாட்டில் நாம்மனதளவில் பிறருக்கும் உதவியாக இருக்கலாம். என்னே இயற்கையின் ஏற்பாடு. மனநிலை மூலம் உடல் மாற்றங்களைக் கட்டுப்படுத்தலாம் என்பதும், அதை அறிவுப் பூர்வமான நினைவு நிலையிலிருந்து சாதிக்கலாம் என்பதும், நெருக்கடியில் வாழும் மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மன உதவியை நாடி, மண்ணில் மக்களுக்குள் மகிழ்ச்சிப் பூக்களை மலர வைக்க முடியும் என்பது மனோதத்துவ மருத்துவர்களின் அனுபவபூர்வ உண்மையாகும்.

மகிழ்ச்சிப் பூக்களை மலரவைப்பது நமது மனத்தில்தான் இருக்கிறது.

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

மனமகிழ்ச்சியோடு வாழ வழிகள்

இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. ஆனால் எத்தனை பேர் இன்பத்தையும் துன்பத்தையும் சரி சமமாக எடுத்துக் கொள்கிறார்கள்?

இன்று சோகம் என்றால் நாளை சந்தோஷம் வரும் என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

எல்லோரும் மனமகிழ்ச்சியோடு வாழ பின்வரும் யோசனைகள் அந்த ஆய்வின் மூலம் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதை நீங்களும் படித்துப் பயன் பெறுங்கள்.

* வாழ்க்கையில் பிடிப்பு இருக்க வேண்டும் 'வெறுப்பு' சந்தேகம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்று மனதிற்குள் நுழைந்து விட்டால், மனதில் நிம்மதி அடியோடு அழிந்து விடும். எதிலும் அன்பும், இரசிப்பும் இருந்தால் தான் மனதிற்கு மகிழ்ச்சி வரும்.

* தாழ்வு மனப்பான்மை என்ற நோய் உள்ளவர்களுக்கு எதிலும் சந்தோஷமிருக்காது. தன்னிடம் உள்ள குறையை மட்டுமே மனதிற்குள் நினைத்துக் கொள்வார்கள். இவர்களுடைய நடவடிக்கை மற்றவர்களின் பார்வைக்கு ஏளனமாகிவிடும். குறையை நினைக்காமல் நிறைகளை நினைத்துக் கொள்ளும் போது, வீணான குழப்பமும், சந்தேகமும் வராது. நிகழ் காலத்தை மட்டும் நம்புகிறவர்களுக்கு மகிழ்ச்சி தானாகவே வந்துவிடும். கடந்த காலத் தோல்வி, எதிர்கால பயம் இவையெல்லாம் மகிழ்ச்சியை அழிக்கும் கரையான்கள்.

* நமக்கு பிடிக்காத ஒன்று நடந்துவிட்டால், அதை மாற்ற முயற்சிக்கலாம். முடியவில்லையென்றால் சகித்துப் போகவும் தெரியவேண்டும். நாய் வாலை நிமிர்த்திப் பார்க்கும் வீணான முயற்சி பண்ணி நேரத்தையும், சக்தியையும் வீணாக்கினால், மகிழ்ச்சி உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும்.

* பிரச்சனை இல்லாத வாழ்க்கையே இருக்க முடியாது. ஒரு சிலர் அதையே பெரிதாக நினைத்துக் கொண்டிருப்பார்கள். அதை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் வீண் குழப்பங்களுக்குள் மூழ்கி சந்தோஷத்தை தொலைத்து விடுகிறார்கள்.

* தோல்வியை சந்திக்க முடியாதவர்கள், நிதர்சனமான உண்மையை பார்த்து மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்பார்ப்பது எல்லாமே நடந்து விடுகிறதா? இல்லையே! அப்படியிருக்கும் போது, தோல்வி பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லையே! சிலர் நினைத்த கார்யம் நடக்கவில்லையென்றால், உணர்ச்சி வசப்பட்ட நிலையில். மனதிற்குள் குமிறிக் கொண்டு தனியாக இருப்பார்கள். அப்படியிருக்காமல் நம்பகமான நண்பர்கள், உறவினர்கள் இவர்களைத் தேடிக்கொண்டு போகவேண்டும்.

* தற்பெருமை பேசுவது சுற்றியுள்ள நண்பர்களை இழப்பதற்குச் சமம். இதனால் மற்றவர்களின் வெறுப்புக்களைத்தான் நீங்கள் சந்திப்பீர்கள். தான் சொல்றது தான் சரின்னு நியாயப்படுத்தற குணத்தை கைவிட்டால் பலரிடம் சகஜமாக பழக முடியும். சந்தோஷமும் கூடவே வரும்.

* மனிதப் பண்புகள் யாருக்கு நிறைய இருக்கிறதோ அவர்களிடம் மகிழ்ச்சி அருவியாகக் கொட்டும். ஈவு, இரக்கம், தன்மானம், நன்றி, விசுவாசம் இதையெல்லாம் கடைப்பிடிக்கும் பட்சத்தில், மகிழ்ச்சி என்பது தானாகவே வந்துவிடும். நிம்மதி வர வேண்டுமென்றால் ஆத்ம திருப்தி இருந்தால் தான் அது சாத்தியமாகும்.

* அவரவரால் என்ன முடியுமோ? அதற்கு மட்டுமே முயற்சி செய்தால் போதும். எவ்வளவு தூரம் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகி விடமுடியும்? புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாக, முடியாத ஒரு விஷயத்திற்கு முயற்சி பண்ணுவது முட்டாள்தனம். இதனால் மனவிரக்திதான் ஏற்படும். இலட்சியத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு அதற்குரிய தகுதியும், சூழ்நிலையும் இருக்கிறதா? என்று ஆராய்ந்து முடிவெடுக்கும்போது மகிழ்ச்சி உங்களை விட்டுப் போகாது.

* கடைசியாக ஒன்றை நினைவுபடுத்தி கொள்ளுங்கள் சுயநலத்தை விட பொதுநலம் தான் உண்மையான மகிழ்ச்சியைக் கொடுக்கமுடியும். உங்களுக்காகச் செய்யும் காரியங்கள் மற்றவர்களுக்காகவும் செய்தால், வாழ்க்கை வசந்தமாகும். நல்ல பழக்க வழக்கங்கள், பொது நல நோக்கம் இருக்கிறவர்கள் எப்போதும் சந்தோஷமாகவே இருப்பார்கள். இது அனுபவப்பூர்வமான உண்மை! இதில் பலருடைய அனுபவக் கருத்தும் கூட.

வழங்குவது 26 புவனா

மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்காவின் தம்பி மைக்கேல், வெள்ளை மாளிகையில் அவளை இறக்கிவிட்டு வண்டியைத் திருப்பி வீடு செல்லத் திரும்பினான். மோனிக்கா ஓரளவு பதற்ற நிலையிலிருந்தமையினால், தனது கைப்பையை காரின் பின் இருக்கையில் வைத்து விட்டு இறங்கிவிட்டாள். அதனை உணர்ந்த அவள், அவசரமாகத் தன் தம்பியின் வண்டியைப் பார்த்து, நிறுத்தும்படி சைகை செய்தாள். மைக்கேல் தற்செயலாகத் திரும்பியவன் மோனிக்காவின் சைகையைக் கண்டதும், வண்டியைப்பின் எடுத்துத் திருப்பிக்கொண்டு மோனிக்காவிடம் வந்தான். பின் கதவைத்திறந்து தன் டம்பைப் பையை எடுத்துக் கொண்டு மன்னிக்கும்படி கூறி மீண்டும் டாட்டா காட்டி வழி அனுப்பினாள்.

வேகமாக நடந்து தனது அலுவலக மேசையை அணுகினாள். அந்தப் பிரிவில் எவருமே இருக்கவில்லை. தனது மேசையினிருந்த வெளிச்சத்தை மட்டும் ஏற்றிக் கொண்டு இருக்கையில் அமர்ந்தாள். அவளுடைய பார்வை மேசையிலிருந்த உள்ளகத் தொலைபேசி இணைப்பையே பார்த்துக் கொண்டிருந்தது. அத்தொலைபேசியில் எவர் தொடர்பு கொண்டாலும், யார் தொடர்பு கொள்கிறார் என்பதை அறிந்து கொள்ள ஏதுவாக, அதே தொலைபேசி சாதனத்துடன் பொருத்தப்பட்டிருந்த சிறு பெட்டி காட்டி விடும்.

உள்ளகத் தொலைபேசி அமைப்புடன், தன்னுடன் தொடர்பு கொள்வதற்கான இலக்கத்தை ஏற்கனவே கிளின்ரனிடம் தொலைபேசியில் கொடுத்திருந்தமையினால் எப்போது அழைப்பு வரும் என்று காத்துக் கொண்டிருந்தாள். நேரம் உருண்டோடியதே தவிர தொலைபேசி சிணுங்கவில்லை. 'அவருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கும்; இதற்குள் எங்கே என்னைப் பற்றி நினைக்க அவருக்கு நேரம் இருக்கப்போகிறது?' என்று சலிப்படையத் தொடங்கிவிட்டாள். ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக அவளுக்குத் தென்பட்டது.

மறக்கவில்லை...

இருப்புக் கொள்ளவில்லை. இருப்பினும் எழுந்து சற்று அங்குமிங்கும் உலாவலாம் என்று நினைத்தாள். எழுந்து நடமாடினால் தொலைபேசி கிணுகிணுக்குமோ என்றொரு ஆதங்கமும் இருந்தது. இருக்கையை விட்டு எழுந்தாள். 'பீப்... பீப்...." என்று ஒலி எழுப்பியதுடன் தொலைபேசி கண்சிமிட்டியது. 'POTUS' என்ற எழுத்துக்களும் நீல ஒளியை உமிழ்ந்து கொண்டு காணப்பட்டன. அவள் உள்ளம் துள்ளிக் குதித்தது. 'நேரம் போனாலும் மறக்காமல் அவர் அழைத்து விட்டார்.'

POTUS என்றால், அமெரிக்க ஜனாதிபதி என்ற ஆங்கில வார்த்தைக்கான சுருக்கெழுத்துக்கள். கையில் சில கோப்புக்களையும் பத்திரங்களையும் எடுத்துக் கொண்டு கிளின்ரனின் ஓவல் அலுவலகத்து வாயிற் புறமாக, வேறு எங்கோ செல்லுவதுபோல் நடந்தாள்.

ஏற்கெனவே அவர்கள் அந்தரங்கமாகத் திட்டமிட்டபடி சற்றுக் கவனமாக நடந்து கொள்ள வேண்டுமென்று உடன்பட்டிருந்தனர். இதனபடி முக்கியமான பத்திரங்களுடன் ஓவல் அலுவலகத்தைக் கடந்து வேறு எங்கோ ஒரு பிரிவுக்கு போவதுபோல் பாசாங்கு செய்ய வேண்டியது மோனிக்காவுக்குரிய பணி. 'தற்செயலாக அவளைக் கண்டு, ஏதோ ஓர் அலுவலுக்காக அவளை அழைப்பதுபோல் அவர் காட்டிக் கொள்ள வேண்டும்.' அவர்கள் இருவருக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை இது.

வதந்தியைத் தவிர்க்க....

ஏற்கனவே கிளின்ரனே மோனிக்காவிடம் சொல்லி இருந்தார். 'ஜனாதிபதி, பயிற்சிக்காக சேர்ந்துள்ள ஓர் இளம் பெண்ணுடன் நெருக்கமான உறவு வைத்திருக்கிறார்' என்றொரு வதந்தி பரவுவதாக.

ஆகவே, அவர்கள் இருவரும் மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டிய பொறுப்புடையவர்களாக இருந்தார்கள்.

மோனிக்கா ஓவல் அலுவலக வாயிலைக் கடந்து போகும்போது அதன் கதவு பூட்டித் தாளிடப்பட்டிருந்தது. பிரத்தியேகப் பாதுகாப்பு அதிகாரியான லீயும், பொக்ஸ் வாயிலில் கம்பீரமாக நின்றிருந்தார். இதனால் ஏமாற்றமடைந்த அவள், அந்த காவலதிகாரியுடன் சில நிமிடங்கள் உரையாடினாள். அவர் அவளுக்கு ஓரளவு பழக்கமானவர்.

அந்தரங்க உடன்படிக்கை

இந்த வேளையில் மோனிக்காவின் வேண்டுதல் பலித்தது. ஓவல் அலுவலகக் கதவு மெல்லத் திறந்தது. தற்செயலாக மோனிக்காவை அங்கே கண்டதுபோல் சிரித்தவண்ணம், பொக்ஸிடம் மன்னிப்புக் கோரிவிட்டு "உள்ளே கொஞ்ச நேரம் வந்து போக முடியுமா?" என்று கேட்டார். பொக்ஸின் பக்கம் திரும்பி "இந்தப் பெண் சிறிது நேரம் உள்ளேவர அனுமதிப்பீரா?" என்று கேட்டார். பொக்ஸ் மரியாதையாக குனிந்தபடி தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தார்.

மோனிக்கா ஓவல் அலுவலகத்துள் சர்வ சுதந்திரத்துடன் பிரவேசித்தாள்.

தான் தனக்கு மிக நெருக்கமான ஓரிளம் ஆடவனுடன் தனித்து விடப்பட்டு விட்டதாக அவள் உணர்ந்தாள். வழக்கமாக அந்த அலுவலகத்தில் அவள் அமரும் சோபாவில் போய் அமர்ந்தாள். அவளருகிலேயே கிளின்ரனும் போய் அமர்ந்து கொண்டார். "ஏதாவது பானம் அருந்த வேண்டுமா?" என்று மோனிக்காவிடம் அவர் கேட்டார். அதாவது கிளின்ரனுடைய அந்தரங்க ஒய்வறைக்குள் செல்லலாம், என்பதற்கான குழூஉக் குறி அது. அவள் எழுந்தாள். அவரும் எழுந்தார். இருவரும் கை கோர்த்தவண்ணம் உள் அறைக்குள் சென்றனர்.

அங்கு சென்றதும், இருவரும் ஒருவராகி கிட்டத்தட்ட அரைமணி நேரம்வரை பலதரப்பட்ட காதல் லீலைகளைப் புரிந்த வண்ணம் மெய்மறந்திருந்தனர்.

ஜனாதிபதி கிளின்ரன், மோனிக்கா அவருக்கு அன்பளிப்பாக கொடுத்த ரையை அணிந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தில் தனது கையொப்பத்தைப் போட்டுக் கொடுத்தார் அல்லவா? அப்போது தன்னுடைய முழுப் பெயரையும் அவர் மறக்கவில்லை, என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டிருந்தாள். அதற்கு முன்னர் அவளை கிளின்ரன் 'கிடோ' என்று செல்லப் பெயரால் அழைத்து வந்தார். தன்னுடைய உண்மையான பெயரை மறந்து விட்டதனால்தான் இவ்வாறு ஒரு புனை பெயரால் தன்னை அழைக்கிறார் என்று மோனிக்கா கருதினாள். தன்னுடைய பெயரையே நினைவில் வைக்காதவர் என்று அவர்மீது பொய்க் கோபம் காட்டியதுமுண்டு.

புகைப்படத்தில் கையெழுத்துப் போட்ட சம்பவத்தின் பின் 1995 புதுவருடத் தினத்தன்று ஓவல் அலுவலகத்தின் உள்ளறையில் கிளின்ரனும், மோனிக்காவும் சென்றனர். அப்போது பயாணி நெல்விஸ் என்ற பெண் அந்த அறையினுள் நின்றிருந்தாள்.

புதுவருட வாழ்த்துக்கள்

ஜனாதிபதியின் தனிப்பட்ட உதவிகளைப் புரிவதற்காக நியமிக்கப்பட்ட நடுத்தர வயதுடைய அந்தப் பெண், அப்போது கிளின்ரன் பாவிக்கும் சுருட்டுக்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

இருவரும் உள் நுழைந்ததும், அந்தப் பெண்ணை அழைத்து, வேறு ஓர் இடத்துக்குச் சென்று தனக்காக ஏதோ ஒரு பொருளை எடுத்து வருமாறு பணித்தார்.

இத்தகையதொரு போலிச் சாக்கைச் சொல்லி அந்தப் பெண்ணை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, புதுவருட வாழ்த்துக்களுடன் கூடிய முத்தங்களை மோனிக்காவுக்குப் பொழிந்தார்.

மோனிக்காவும் தன்னுடைய புதுவருட வாழ்த்துக்களை அதே முறையில் கிளின்ரனுக்கு வழங்கினாள்.

இத்தகைய சந்தர்ப்பம் வாய்த்தமையினால் மோனிக்காவுக்கு புதுவருட விழா மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

(வரு வாள்)

பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை HC

பெயர்:.....

முகவரி:.....

.....

தொழில்:.....

கையொப்பம்:.....

உண்மை -- நேர்மை -- வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-02-2000

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், பெட்டி இல-1175, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

பதுளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஆயிஷா வாஹிட்,

26/2, பள்ளிவாசல் வீதி, பதுளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

பாப்பா முரசு சிறுகதை

மீன்களின் அறிவுரை

முன்னொரு காலத்தில், சீனாவில் 'குவா-குவா-பெங்' என்ற இளைஞன் ஒருவன் இருந்தான்.

விறகு வெட்டி பிழைப்பது அவனது தொழில், அதைத் தவிர வேறு எந்த வேலையும் அவனுக்குத் தெரியாது.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெங், படிப்பு வாசனையே அறியாதவன். சிறு வயதிலேயே அவன் விறகுகளை வெட்டி விற்கும் தொழிலை மேற்கொண்டு விட்டான்.

அவனுக்கு தந்தை இல்லை. வயதான தாய் மட்டுமே இருந்தாள்.

தினமும் விறகுகளை வெட்டி விற்கும் பணத்தைக் கொண்டு தாயும், மகனும் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

சிறு வயதிலிருந்தே வெளி உலகத் தொடர்பு இல்லாமல் காட்டிலேயே அவன் இருந்தாலும், கோழைத்தனமாக இருந்தான். அடிக்கடி பயப்படுவான் திடமான மனது கிடையாது.

அப்படி ஒரு கோழைத்தனம் இருப்பது அவனது தாய்க்கு தெரியும்.

அதைப் போக்கி, அவனை ஒரு வீரனாக்க அவள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொண்டாள்.

ஆனால், பெங்கின் கோழைத் தனத்தை அவளால் மாற்ற முடியவில்லை.

உழைப்பு இருந்தாலும், பிரச்சனைகளையும், துன்பங்களையும் எதிர்கொள்ளும் மனோதிடம் இல்லாவிட்டால் எந்த ஒரு மனிதனாலும் முன்னேற முடியாது. என்பது அவளது கருத்து.

அந்தக் கருத்து பெங்கின் வாழ்க்கையில் உண்மையாகி விடக்கூடாதே என்று நினைத்துத்தான், அவனை மாற்றப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டாள்.

கருத்துச் சொல்லுகின்ற நேரத்தில் மிகவும் கவனத்துடன் கேட்பான். இனி அப்படியே நடந்து கொள்வதாக உறுதியளிப்பான். "காட்டில் பேயே வந்தாலும் ஒரே குத்து...!" என்று சொல்லி புஜத்தை உயர்த்திக் காட்டுவான்.

ஆனால்-

காட்டில் 'உய்ய்ய்...' என்று ஒரு சத்தம் கேட்டாலே "ஆ... ஊ..." என்று அலறிவிடுவான். விறகு கட்டையை அங்கேயே போட்டு விட்டு, வீட்டிற்கு ஓடி வந்து விடுவான்.

• 'ஹூம்! நல்ல பிள்ளையைப் பெற்றேன்? இவன் எப்படித்தான் முன்னேறப் போகிறானோ? கடவுள் விட்ட வழி?' என்று அவன் தாய் தன் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

ஒருநாள்-

காலையில் காட்டிற்கு சென்ற பெங், பெரிய விறகுக் கட்டு ஒன்றை கட்டிச் சுமந்து கொண்டு மாலையில் வீட்டிற்கு புறப்பட்டான்.

வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதில் மனிதனின் கழுத்தளவிற்கு நீர் ஓடிக் கொண்டிருந்தது.

பெங் தினமும் அந்த ஆற்றைக் கடந்து தான் போவான், வருவான்.

வழக்கம் போல் விறகுச் சுமையோடு ஆற்றில் இறங்கினான். மெல்ல நீரில் நடந்து அடுத்த கரையை நோக்கிச் சென்றான்.

நடு ஆற்றிற்கு வந்தபோது, சற்றும்

எதிர்பாராத விதமாக ஓர் உருட்டுக் கல்லின் மீது அவன் காலை வைத்துவிட,

கல் நகர-

நிலை தடுமாறிய பெங், அப்படியே நீரினுள் விழுந்து மூழ்கினான்.

விறகுக் கட்டு வேறு பக்கம் போய் விழுந்தது.

அதுபோன்ற ஒரு துன்பம் அவன் வாழ்க்கையில் ஏற்பட்டதே இல்லை. அன்று புதிதாக ஏற்பட்டதும் மிகவும் பயந்து போனான்.

ஏற்கனவே பயந்தாங்கொள்ளி வேறு. அதனால் தண்ணீருக்குள் புரண்டு "ஆ... ஊ..." என்று கத்தினான்.

ஆனால், அவனது சத்தம் வெளியே வரவில்லை. நீருக்குள்ளேயே அமிழ்ந்தது.

அவனது அலறலைக் கேட்டு, சில மீன்கள் அவனருகே ஓடி வந்தன.

"என்ன ஆயிற்று உனக்கு?" என்று ஒரு மீன் கேட்டது.

"ஆற்றில் தவறி விழுந்து விட்டேன். செத்து விடுவேனோ என்று பயமாக இருக்கிறது!" என்றான் பெங்.

"கழுத்தளவு தண்ணீர் தானே ஓடுகிறது. உன்னால் தப்பி கரை கரைசேர முடியுமே!" என்றது ஒரு மீன்.

"ஓஹோ! அப்படியானால் நான் சாக இங்கு வாய்ப்பில்லை?" என்றான் பெங்.

"முயன்றால் வாய்ப்பில்லை. எங்களைப் பார்... சிறிய சிறிய உருவங்கள் எங்களுக்கும்- பெரிய பெரிய மீன்களாலும், கடற் பறவைகளாலும், மீனவர்களாலும் எண்ணற்ற ஆபத்துக்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. அதற்குப் பயந்து நாங்கள் செத்து விட்டோமா என்ன? அப்படி இப்படி தப்பியோடி வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறோம். எதற்கும் முயற்சி தான் தேவை!" என்றது இன்னொரு மீன்.

அந்த மீன்கள் கூறிய அறிவுரை, பெங் இதுவரை கேட்காததாக இருந்தது.

என்றுமில்லாதவாறு அவன் மனது மாற்றமடைந்தது. அதில் ஒரு புது உற்சாகம் புகுந்தது. 'தப்பி விடலாம்' என்ற எண்ணம் அவனுள் வேரூன்ற, அப்படியே புரண்டு எழுந்தான்.

நீரின் வேகம் அவனைப் புரட்டியது. இருந்தாலும் சமாளித்து தன்னை நிலைப் படுத்திக் கொள்ள முயன்றான். சில நிமிடப் போராட்டத்திற்கு பின் கால்களை மணலில் ஊன்றி நின்றான்.

தலை மட்டும் நீருக்கு வெளியே இருந்தது. விறகுக் கட்டு விழுந்த இடத்தைப் பார்த்தான். அது நீரின் ஓட்டத்தோடு மிதந்தபடி வெகு தூரம் போய்விட்டது.

'விறகுதானே! போகட்டும். நாம் உயிரோடு இருந்தால் நாளை வெட்டிக் கொள்ளலாமே!' என்று நினைத்தபடி, மேல்ல நடந்து கரைசேர்ந்தான்.

அவனது திடமான செயலைக் கேட்டறிந்த அவனது தாய் மிகவும் சந்தோஷமடைந்தாள். அவனை அந்த நிலைக்கு ஆளாக்கிய மீன்களுக்கும் அவள் நன்றி கூறினாள்.

வீதி அமைத்து விட்டு வீடு திரும்ப வேண்டும் இந்த 'ரோட் ரோலர்' அதற்கு நீங்களே வழிகாட்டுங்கள்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.02.2000.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 332
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 330

பரிசுக்குரியவர்:
தனஞ்ஜெயன்,
52/5, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

ரொஸான் ஜிப்ரி, ஆமினா தேசிய பாடசாலை, மாத்தளை.	செல்வி ரா.அனுஷிகா, சென்றிமேரிஸ் கல்லூரி, அவிசாவளை.
பா.அனுஜன், தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை.	எஸ்.பி.ராஜ், பரி.தோமா கனிஷ்ட பாடசாலை, கொழும்பு-03.
ப.பிருந்தாபன், 28ஏ, றம்யா வீதி, கொழும்பு-04.	யோ.சிசிலி, நல்லாயன் த.மகளிர் அரசினர் வித்தியாலயம், கொழும்பு-13.
ஏ.எவ்.றமீசா, பிஎல்/பொலன்னறுவ முஸ்லிம் பாடசாலை, கதுறுவெல.	செல்வன் எம்.ஷாஜாத் முகம்மத், மட்/மெத்தைப்பள்ளி வித்தியாலயம், காத்தான்குடி
எம்.என்.தஸ்னா, மீராவோடை-04, ஒட்டமாவடி.	த.நித்தியகுமார், காளிகோயில் வீதி, மட்டக்களப்பு.

செய்து பாருங்கள்

பூதக் கண்ணாடி

தேவையான பொருட்கள்:

கடதாசி அட்டை, கத்தரிக்கோல், பொலித்தீன் பேப்பர், செலோ டேப்.

செய்முறை:

1) கடதாசி அட்டையில் பூதக்கண்ணாடி போல் வரைந்து கொள்ளுங்கள். (படத்தில் உள்ளது போன்று).
2) இதை அப்படியே கத்தரிக் கோலால் வெட்டிக் கொள்ளுங்கள். பின் அதற்குள் வட்டம் ஒன்று வரைந்து, அதையும் வெட்டிக் கொள்ளுங்கள்.
3) நீங்கள் வெட்டிய வட்டத்தை விடச் சற்றுப் பெரியதாக பொலித்தீன் பேப்பரில் வட்டம் ஒன்றை வெட்டுங்கள். இப்போது வெட்டிய பொலித்தீன் வட்டத்தை, கடதாசி அட்டை நடுவில் வெட்டிய வட்டத்திற்கு மேலாக செலோ டேப் போட்டு ஒட்டுங்கள்.
4) இப்போது பூதக் கண்ணாடி தயார். பூதக்கண்ணாடியைக் கையில் எடுத்து, பொலித்தீன் பேப்பர்மீது ஒரு துளி தண்ணீர் விட்டு, அச்சடித்த எழுத்துக்கள் மேல் வைத்துப் பாருங்கள். எழுத்துக்கள் பெரிது பெரிதாகத் தெரிகிறதல்லவா?



சிறைப்பறவை



சிறைக்குள் அடைக்கப்பட்டு வாழும் பறவை இனம் ஒன்று உள்ளது. இதன் பெயர் ஹார்ன் பில்.

ஹார்ன்பில் பறவை இனத்தில் பெண் பறவை முட்டை இட்டு அடைகாக்கும் போது, அதைப் பாதுகாக்க ஆண்பறவை பொந்தை அப்படியே மூடிவிடும்.

உள்ளிருக்கும் பெண்பறவையின் அலகு மூலம் இரையை வாங்குவதற்குச் சின்னத் துவாரம் இருக்கும். பெண் பறவைக்கு ஆண் பறவைதான் இரை கொடுக்கும்.

முட்டை குஞ்சு பொரித்த பிறகு தான் அது சிறையை உடைத்துக் கொண்டு வெளியே வரும்.

குரங்குகளின் அட்டகாசத்தில் இருந்து தாயையும் குஞ்சுகளையும் பாதுகாப்பதற்காகவே பெண்பறவையை ஆண் பறவை இப்படிச் சிறை வைக்கிறது.

திக் திக் தொடர்

'திகில் உணர்ச்சி'

14

அவன் தோளில் போட்டிருந்த அழுக்குத் துண்டால் நீர் பளபளப்பு தெரிந்த கண்களை ஒற்றிக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

"பங்கஜ் அய்யா ஏர்போர்ட்டிலிருந்து வரும்போதே ரொம்பவும் சோர்வா இருந்தார். அவரை வரவேற்க வீட்ல காத்துட்டிருந்த எல்லார்கிட்டயும் பேசி அனுப்பிட்டு குளிக்கப் போனார். அப்புறம் சாப்புட்டுட்டு அவரோட அம்மாகிட்டே பேசிட்டிருந்தார். அந்த சமயத்துலதான் கிரிக்கெட் போர்டு சேர்மன் இறந்துட்டதாக தகவல் வந்தது.

பங்கஜ் அய்யா ரொம்பவும் கலங்கிப் போய், உடனே கிளம்ப ஆயத்தப் பட்டார். ஆனா போலீஸிலிருந்து ஃபோன் பண்ணி, 'கிரிக்கெட் வீரர்களுக்கு தீவிரவாதிகளால ஆபத்து இருக்கு'ன்னு சொன்னதும், பங்கஜ் அய்யா அப்படியே இடிஞ்சு போய் உட்கார்ந்துட்டார்.

கண்ணெல்லாம் கலங்கிப் போயிருந்தது. ரொம்ப நேரமா அப்படியே உட்கார்ந்திட்டிருந்தவர் ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டுகிட்டு, தூங்கப் போறதா சொல்லி அவரோட அறைக்குள்ளே போயிட்டார். ரெண்டு மணி நேரம் கழிச்சு, நான் ஏதோ ஒரு வேலையா இந்தப் பக்கம் வந்தபோது, அறைக்குள்ளே ஏதோ விழற மாதிரி சத்தம்கேட்டது. நான் உடனே அம்மாக்கிட்ட போய் விஷயத்தைச் சொன்னதும், அவங்க பதட்டமா எழுந்து வந்து, அறைக் கதவைத் தட்டி 'பங்கஜ்' 'பங்கஜ்'ன்னு குரல் கொடுத்துப் பார்த்தாங்க.

உள்ளாரயிருந்து சத்தம் எதுவும் வராமே போகவே, அம்மா என்னை ஸ்டூல் மேல ஏறிப் பார்க்கச் சொன்னாங்க. நான் ஸ்டூலைக் கொண்டாந்து போட்டு உள்ளே ஏறிப் பார்த்தேன். பங்கஜ் அய்யா ரத்த வெள்ளத்துல விழுந்து கிடந்தாரு..."

வேலைக்காரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கதவு பெயர்ந்து கொண்டு ஒரு பக்கமாய் சாய்ந்தது.

சார்லஸ் முதல் ஆளாய் உள்ளே போனார். அவரைத் தொடர்ந்து நரேஷ். இரண்டு ஃபாரென்ஸிக் அதிகாரிகள் உள்ளே போனார்கள். டாக்டர் குழு ஒன்றும் பின் தொடர்ந்து போயிற்று.

பங்கஜ் உடனடியாய் பரிசோதிக்கப் பட்டார். உயிர் இருப்பதற்கு அடையாளமாய், நாசித் துவாரங்களில் நூலிழையாய் முச்சுக் காற்று வந்து கொண்டிருந்தது.

சார்லஸ் கேட்டார்.

"என்னாயிற்று டாக்டர்?"

"உடனடியாக எதுவும் பிடிபடவில்லை. தலையிலோ உடம்பின் மற்ற பாகங்களிலோ ஒரு சின்ன ரத்தக் காயம் கூட இல்லை...."

இன்னொரு டாக்டர் சொன்னார்:

"அளவுக்கு மீறிய டென்ஷன் காரணமாக, மூளைக்குப் போகிற ப்ளட் வெஸல் பர்ஸ்ட் ஆகியிருக்கலாம். உடனடியாக ஹாஸ்பிடலைஸ் பண்ணி ட்ரீட்மெண்ட் கொடுத்தா, பங்கஜ் லைஃப்பை ஸேவ் பண்ணிடலாம்...."

"டாக்டர்! ப்ளீஸ்... ஜென்ட்லி டேக் ஸ்டேப்ஸ். அட் எனி காஸ்ட் பங்கஜ் உயிர் பிழைக்கணும். அவர் இந்தியாவுக்காக மறுபடியும் விளையாடணும்..."

டாக்டர்கள் செயல்பட்டனர். வெளியே காத்திருந்த ஸ்ட்ரெச்சர் உள்ளே வந்தது. பங்கஜ் ஸ்ட்ரெச்சரில் கிடத்தப் பட்டுக் கொண்டிருக்கும்போதே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மெதுவாய் நடந்து வந்து சார்லஸுக்குப் பக்கத்தில் வந்து நின்றார். ஹஸ்கி வாய்ஸில் குரல் கொடுத்தார்.

"ஸார்..."

திரும்பி "ம்!" என்றார்.

"ஒரு நிமிஷம் இப்படி வர்றீங்களா ஸார்..."

போனார்.

அறையின் மூலையைத் தொட்டதும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தன் கையில் வைத்திருந்த ஒரு கடிதக் கவரை அவரிடம் நீட்டிக் கொண்டே சொன்னார்.

"ஸார்... இதைக் கொஞ்சம் பாருங்க..."

வாங்கிப் பார்த்தார்.

கவரின் மேல், எலக்ட்ரானிக் டைப்ரைட்டிங் மெஷினில் டைப் அடிக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள்.

போலீஸ் துறைக்கு....

கவரின் திறந்த வாய்க்குள் இரண்டு விரல்களை நுழைத்து, கடிதம் ஒன்றை உருவி எடுத்ததார். பிரித்தார்.

தமிழில் டைப் எழுத்துக்கள் வரி வரியாய் ஓடியிருந்தன.

போலீஸ் துறைக்கு,

சிவப்பு வணக்கம். இந்தக் கடிதம் உங்கள் கைக்குக் கிடைக்கும் போது இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் பங்கஜ், ரத்த வெள்ளத்தில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கலாம். அல்லது உயிர்போயிருக்கலாம்.

கிரிக்கெட் விளையாட்டு சம்பந்தமாக எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை, இப்படிப்பட்ட ரத்த அசம்பாவிதங்கள் தவிர்க்க முடியாத ஒன்று. கிரிக்கெட் விளையாட்டைப் பெரிதாக நினைத்துக் கொண்டு எங்கள் கோரிக்கைகளை நீங்கள் உதாசீனப் படுத்தினால் மற்ற கிரிக்கெட் வீரர்களும் சவக்குழிக்கு அனுப்பப் படுவார்கள்.

இந்தக் கடிதம் உங்கள் பார்வை பட்ட நிமிஷத்திலிருந்து 24 மணி நேரம் வரைக்கும் உங்களுக்கு அவகாசம். இந்த அவகாசத்துக்குள் எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இது மாதிரியான ரத்தக்களறிகளைப் பார்க்க எங்களுக்கும் சம்மதம் கிடையாது. நாங்கள் உங்களுக்கு கொடுத்திருக்கும் 24 மணிநேர கருணை நேரத்தை புத்திசாலித்தனமாக உபயோகப் படுத்திக் கொள்ளுங்கள். இந்தியாவை உழைப்பாளிகள் நாடாக்க உதவி செய்யுங்கள்.

இப்படிக்கு,

கடிதத்தைப் படித்து முடித்த சார்லஸ், வியர்வைச் சரம் கட்டிக் கொண்ட நெற்றியோடு நிமிர்ந்ததர்.

"இந்த லெட்டர் உங்களுக்கு எங்கேயிருந்து கிடைச்சுது?"

"அந்த மேஜைக்குக் கீழே விழுந்து கிடந்தது ஸார். ஏதோ முக்கிய லெட்டராக இருக்கும்ன்னு நினைச்சு எடுத்து, மறுபடியும் மேஜை மேல வெக்கப் போனேன். கவருக்கு மேல 'போலீஸ்துறைக்கு'ன்னு எழுதப் பட்டிருந்ததைப் பார்த்தும் கடிதத்தைப் பிரிச்சுப் பார்த்தேன்...."

சார்லஸ் தோள்களைக் குலுக்கிக் கொண்டு, உஷ்ணமாய் பெருமூச்சு விட்டார்.

"உட்பக்கமா பூட்டின அறைக்குள்ளே பங்கஜ் ரத்த வெள்ளத்துல விழுந்து கிடக்கார். கொலையாளியும் அறைக்குள் வந்திருக்கிறான். வந்தவன் கடிதத்தை உள்ளே வைத்து விட்டு எப்படி வெளியே போனான்? இந்த அறைக்குள் வேறு வழி இருக்கிற மாதிரி தெரியவில்லையே?"

"அந்த அட்டாச் பாத்ரூம் வழியாக கொலையாளி வெளியே போயிருக்கலாம் ஸார்...."

"வாங்க.... பார்க்கலாம்..."

போனார்கள்.

வெறுமனே சாத்தப்பட்டிருந்த பாத்ரூம் கதவைத் தள்ளினார்கள்.

திகைத்தார்கள்.

சார்லஸின் இருதயம் அதிர்ச்சிக் கடலாய் மாறி கொந்தளிக்கத் துவங்கியது.

சார்லஸ்ஸின் இருதயம் அதிர்ச்சியிலும் கோபத்திலும் கொந்தளித்துக் கொண்டிருக்க, குளியலறைக்குள் தெரிந்த அந்தக் காட்சி கண்களைக் நிலைக்குத்த வைத்தது.

குளியலறையின் பக்கவாட்டுச் சுவரிலிருந்து நீட்டிக்கொண்டிருந்த ஷவர் பைப்பின் ஒரு முனையில், அந்த அழகான ஃபொமரேனியன் நாய் கழுத்தில் மாட்டிய கயிறோடு இரத்தக்களறியாய்த் தொங்கிக்கொண்டிருந்தது. அதன் பின் இடது பக்கக் காலிலிருந்து ஒரு துண்டுச் சீட்டு ஊசலாடியது.

அந்த துண்டுச் சீட்டில் ஸ்கெட்ச் பேனாவால் எழுதப்பட்ட எழுத்துக்கள் தெரியவே, சார்லஸ் அருகே போய்க் குனிந்து பார்த்தார்.

இது போனஸ்

தமிழில் கோணல் மாணலான எழுத்துக்கள். சார்லஸ் அந்தத் துண்டுச் சீட்டை கயிறோடு கழற்றி, கர்ச்சீப்பில் மடித்து பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கலவரமுகத்தோடு திரும்பினார்.

உட்பக்கம் தாழ் போட்ட அறைக்குள்ளே இவ்வளவு கொடூரமான சம்பவங்கள் நடந்திருக்கு. வீட்ல இருந்த பங்கஜோட அம்மாவுக்கும் சரி; வேலைக்காரனுக்கும் சரி எந்த சத்தமும் கேட்காமே எப்படி இருந்திருக்க முடியும்?"

"ஸார்... அதைவிட பெரிய குழப்பம், கொலையாளி எப்படி வெளியே போயிருக்க முடியும்ங்கிறதுதான். ரூம் உள்பக்கமா சாத்தப்பட்டிருக்கு. கொலையாளி வெளியே போக வழியே கிடையாது...."

"பங்கஜோட மதரை கொஞ்சம் இங்கே கூட்டிட்டு வாங்க. அவங்களை விசாரிச்சுப் பார்த்தா இந்த விவகாரத்துல ஏதாவது தகவல் கிடைக்கலாம்...."

"எஸ்.... ஸார்.." சொன்ன சர்க்கிள் இன்ஸ்பேக்டர், வேக வேகமாய் வெளியேறிப் போய், அழுது அழுது களைத்துப்போயிருந்த பங்கஜின் அம்மாவைக் கூட்டிக் கொண்டு வந்தார். சார்லஸ்ஸைப் பார்த்தும் அந்த அம்மாள் இரண்டு கைகளையும் விரித்தபடி அரற்றினாள்.

"அய்யா...! எம் பையனுக்கு ஒண்ணும் ஆயிடாதே..?"

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

"தைரியமா இருங்கம்மா. பங்கஜை ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போயிருக்காங்கா. அவருக்கு உடனடியா ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சு, டாக்டர்ஸ் அவரோட உயிரைக் காப்பாத்திடுவாங்க. பங்கஜ்க்கு மறுபடியும் ஒரு ஆபத்து வர்றதுக்குள்ளே கொலையாளியார்ங்கிறதைக் கண்டுபிடிச்சாகணும். இதுக்கு நீங்க உதவணும்..."

அந்த அம்மாள் கண்களில் வழிந்த நீரைக் கூட துடைக்க, தோள்மேல் சார்லஸ்ஸை வியப்பாய் ஏறிட்டாள்.

"நான் எப்படி இதுக்கு உதவப் போறேன்?"

"இப்ப நான் கேக்கப் போற கேள்விகளுக்கு நீங்க யோசிச்சு உண்மையான பதில்களைச் சொன்னா போது...."

"கேளுங்கய்யா சொல்றேன்...." கண்ணீரைத்துடைத்து விட்டுக் கொண்டு சார்லஸ் கேட்கப் போகிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல தயாரானாள் அந்த அம்மாள்.

"உங்க மகன் பங்கஜ் உட்பக்கமா தாழ் போட்டுகிட்டு தூங்கப் போயிட்டார் இல்லையா?"

"ஆமாங்கய்யா....!"

"அதுக்கப்புறம் அவரைப் பார்க்கிறதுக்காக யாராவது வந்தாங்களா.....?"

"வரலை...."

"நல்லா யோசனை செஞ்சு பதில் சொல்லுங்கம்மா...."

அந்த அம்மாள் மறுபடியும் சில விநாடிகளில் யோசனையில் கரைத்துவிட்டு, தீர்க்கமாய் தலையாட்டினாள்.

"அதுக்கப்புறம் யாரும் வரலை. ரெண்டு போலிஸ்காரங்க மட்டும் பாதுகாப்புக்காக வந்தாங்க... அவங்களும் வாசலிலேயே நின்னுட்டாங்க... உள்ளேகூட வரலை...."

"உங்க மகன் பங்கஜ், அரோட ரூம்ல படுத்துத் தூங்கிட்டிருக்கும்போது நீங்க எங்கே இருந்தீங்க?"

"ஹால் சோபாவில் உட்கார்ந்துட்டிருந்தேன். கிரிக்கெட் போர்டு சேர்மன் அச்சார்யா கொலை செய்யப்பட்டது எனக்குப் பெரிய அதிர்ச்சியாயிருந்தது. அதைப் பத்தியே நினைச்சுகிட்டு கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன். வேலைக்காரன் வந்து பங்கஜ் அய்யா ரூம்ல, ஏதோ ஒரு பொருள் கீழே விழுந்த மாதிரி சத்தம் கேட்டதுன்னு சொன்னான்."

(தொடர்ந்து வரும்)

ஆத்தா

24

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி. சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

இவைகளுக்கு மத்தியில் விடாப்பிடியாக இருந்தனர் அந்த இரு அதிகாரிகளும். வேறு வழியின்றி வெளியில் சென்று வந்த கிருபா அண்ணன், அவர்களிடம் பேசினார்.

"சார், எங்க வாழ்க்கையினுடைய முதல்படி இந்த முயற்சி. இளைஞர்களாகச் சேர்ந்து ஏதோ கூட்டாஞ்சோறு ஆக்குற மாதிரி இந்த முயற்சியிலே இறங்கியிருக்கோம். டைரக்ட் கனெக்ஷன் கொடுத்தது பெரிய தவறுதான்.

ஆனா, அது எங்களுக்குத் தெரியாமலே நடந்திருக்கு. இனிமே எதிர்காலத்துல இந்த மாதிரி தவறு நடக்காதபடி நிச்சயமா ஜாக்கிரதையா இருப்போம். அதனால இந்தப் பணத்தை வாங்கிக்குங்க.

இல்ல, நிச்சயமா நீங்க நடவடிக்கைகள் எடுத்து, எங்களுக்கு கஷ்டத்தை உண்டாக்கி, இந்த முயற்சியை தடை பண்றதுக்கு காரணமா இருக்கத்தான் போறீங்கன்னா, நீங்க ரெண்டு பேரும் இந்த ரூமை விட்டு வெளியே போக முடியாது. இங்கேயே உங்க கதை முடிஞ்சிடும்" என்றார்.

"என்ன சார், இப்படியெல்லாம் பேசறீங்க?" என்றார் ஓர் அதிகாரி அச்சத்துடன்.

"பின்ன என்ன சார் பண்றது? எங்க வாழ்க்கையையே கெடுக்கணும்னு நீங்க முடிவு பண்ணிட்டா, நாங்களும் பதிலுக்கு அப்படித்தானே இறங்க வேண்டியிருக்கும்?" என்றதும் அவர்கள் இருவருக்கும் பயம் ஏற்பட்டது.

அவர்களில் ஒருவர், "ஒரு சிகரெட் இருந்தா கொடுங்க சார்!" என்றார். சிகரெட் வரவழைக்கப்பட்டது.

"ரெண்டு இலை எடுத்துட்டு வாங்கப்பா!" என்று சொல்லி அந்த அறையிலேயே அவர்களுக்குச் சாப்பாடும் பரிமாறப்பட்டது.

சாப்பிட்டு முடித்ததும் அவர்கள் கையில் கொஞ்சம் பணம் கொடுத்து, "இனிமே இந்த மாதிரி நடக்காம பார்த்துக்கறோம்!" என்றோம்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட அவர்கள் "ஒண்ணும் இல்ல சார், நாளையிலிருந்து கேட்டை லாக் பண்ணியிருங்க சார், யாரும் உள்ளே வராம. அப்படியே நாளைப் பின்ன ஏதாவது பிரச்சினைன்னா, இந்த நம்பருக்குப் போன் பண்ணுங்க. நாங்க இருப்போம்!" என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

இந்தப் போராட்டத்திலேயே மாலை மணி நான்காகிவிட்டது. மறுபடியும் படப்பிடிப்பைத் தொடராமலேயே அன்றைய படப்பிடிப்பு முடிந்தது.

மறுநாள் முதல் படப்பிடிப்பு நடக்கும் இடத்தில் வந்து இறங்கிய உடனே எலெக்ட்ரீஷியனைக் கூப்பிட்டு, "ஐயா, டைரக்ட் கனெக்ஷன் எல்லாம் கொடுத்து எங்களை வம்பில மாட்டி விட்றாதீங்க" என்று சொல்வதிலேயே கவனமாக இருந்தோம்.

பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு, படம் கிட்டத்தட்ட ஐந்தாயிரம் அடி வளர்ந்து விட்டது.

தயாரிப்பாளர் மாறிவிட்டார்

ஏற்கெனவே நடித்திருந்த சில புது முகங்கள் மாற்றப்பட்டு ஓரளவு புகழ்பெற்ற நடிக, நடிகையர்கள் இடம் பெற்றனர். அவர்களில் ஒருவர் ஸ்ரீவித்யா.

ஸ்ரீவித்யாவுக்கு அந்தப் படத்தில் ஒரு விலைமாது வேடம். கதையைக் கேட்டதும் அந்த வேடத்தில் நடிக்க ஆர்வமுடன் ஒப்புக்கொண்டார் ஸ்ரீவித்யா.

ஆனால், அவரது தாயார் பிரபல பாடகி, மறைந்த திருமதி எம்.எல். வசந்தகுமாரி அவர்களுக்கு ஸ்ரீவித்யா இந்த வேடம் ஏற்று நடிப்பதில் கொஞ்சம் கூட இஷ்டம் இல்லை. ஸ்ரீவித்யாவிடம் "இந்த வேடம் உனக்கு வேண்டாம். அது வளர்ந்து வரும் உன் இமேஜை பெரிதும் பாதிக்கும்!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

வித்தியாசமான சிந்தனைகளைக் கொண்ட ஸ்ரீவித்யா, "அது ஒரு அருமையான வேடம். நான் அந்த வேடத்தில் நடிக்கத்தான் போகிறேன்" என்று பிடிவாதமாகச் சொல்லி நடிக்கவும் செய்தார். படம் வெளி வந்தபோது பலரது பாராட்டையும் பெற்றார்.



ஒரு மாதிரியாக 'உணர்ச்சிகள்' வேகமாக வளர்ந்து வந்த நேரத்தில், மறுபடியும் ஒரு சிறிய தேக்கம். போராட்டங்கள் ஓய்வதாக இல்லை. போராட்டங்களைக் கண்டு நாங்களும் பயப்படுவதாக இல்லை.

இந்த நிலையில் ஒருநாள் கமல் என்னிடம் வந்து "மலையாள டைரக்டர் சங்கரன்நாயர் தன்னுடைய அடுத்த படத்திற்கு கதை தேடிக் கொண்டிருக்கிறார். எத்தனையோ கதைகள் விவாதிக்கப்பட்டு, அது எதுவுமே அவருக்குத் திருப்தியாக அமையவில்லை. ஒரு நாள் நான் தற்செயலாக நம்முடைய 'உணர்ச்சிகள்' படக் கதையை சொன்னேன். அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. எப்படியாவது மலையாள உரிமை வாங்கித் தரும்படி என்னிடம் கேட்டார். நான் 'கேட்டுச் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

நான் முதலில் மறுத்தேன். "ஒரு வேளை மலையாளப்படம் வேகமாக முடிந்து வெளியிடப்பட்டால், அது நம்முடைய தமிழ்ப் படத்தை பாதிக்கும்!" என்றேன்.

அதற்கு கமல் "நம்முடைய படம் தான் முக்கால்வாசி வளர்ந்துவிட்டதே! அவர்கள் இனிமேல்தானே ஆரம்பிப்பார்கள். அவர்கள் வெளியிடும்வரை நம்முடைய படம் வெளியாகாமலா இருக்கும்? மேலும், இப்போது இருக்கிற கஷ்ட நிலையில் அதில் வரும் பணம் உங்களுக்கு உதவியாக இருக்கும்" என்றெல்லாம் பேசி, நிறைய விவாதங்களுக்குப் பிறகு, 'மலையாள உரிமை கொடுக்கலாம்' என்று முடிவெடுத்தோம்.

'ராச லீலா' என்று பெயரிடப்பட்டு, 'உணர்ச்சிகள்' கதை மலையாளத்தில் வேகமாக வளர ஆரம்பித்தது. சீக்கிரமாக முடிந்தும் விட்டது. இங்கு நாங்கள் தமிழ்ப் படத்தை வெளியிட போராடிக் கொண்டிருந்த நேரத்தில், கேரளாவில் கமல், ஜெயசுதா நடித்த 'ராச லீலா' மிகப் பெரிய வெற்றி பெற்றது.

சில மாதங்கள் கடந்த பிறகு 'ராச லீலா' மலையாளப்படத்தை தமிழ்நாட்டில் வெளியிட உரிமை வாங்கியிருந்த ஒருவர், "சார், நான் தமிழ்நாட்டில் 'ராச லீலா' படத்தை வெளியிட உரிமை வாங்கியிருக்கேன். இதை நாங்க இங்கு வெளியிட்டால் உங்க தமிழ்ப் படம் பாதிக்கப்படும். உங்களுடைய முதல் படத்தின் முயற்சிகள் என்னால் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. என்ன சொல்கிறீங்க?" என்று கேட்டார்.

எனக்கு என்ன சொல்வதென்று புரியல்லை. ஒரு மாதம் டைம் கேட்டேன். "அதற்குள் 'உணர்ச்சிகள்' வெளிவந்து விடும். அதன் பிறகு உங்கள் மலையாளப் படத்தை வெளியிட்டுக் கொள்ளலாம். எனக்காகக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று கேட்டார்.

அந்த நல்ல மனிதரும் ஒப்புக் கொண்டார். ஒரு மாதமும் ஆனது. எங்கள் படம் ரிலீஸ் ஆகவில்லை. அதன் பிறகு கூட அந்த நல்ல மனிதர், சென்னையில் 'ராச லீலா'வை வெளியிடாமல் மதுரையிலும், கோவையிலும் வெளியிட்டார்.

(அனுபவங்கள் தொடரும்)

உணர்ச்சிகள்

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில் 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

விரீன் தான் பிரீன்

20

தாரா மலையிலுள்ள பசுந் தோட்டத்தில்தான் பழைய ஐரிஷ் அரசர்கள் வசந்த காலத்தில் தங்குவது வழக்கம்.

தான் பிரீன் அங்கு சென்ற முதல் நாளே குன்றின் மேல் ஏறி அதன் உச்சியில் ஒரு மணி நேரம் நின்று சுற்றிலுமிருந்த இயற்கையின் வனப்பைக் கண்ணாரப் பருகிக்கொண்டிருந்தான்.

அந்நேரத்தில் பழைய ஐரீஷ் வீரர்களைப் பற்றியும், சுதந்திரத்துடன் கொலு வீற்றிருந்த வணங்காமுடி மன்னர்களைப் பற்றியும், அயர்லாந்தின் தேசியகொடி பகைவர்களை வெற்றி கொண்டு ஆகாயத்தில் துலங்கிக் கொண்டிருப்பதைப் பற்றியும், பின்னால் அயர்லாந்தின் மக்கள் அடிமை விலங்குகளால் பிணிப்புண்டு கிடந்ததைப் பற்றியும், ஆகாயத்தில் வீசிய காற்றிலும் அடிமைத்தனத்தின் தூர் நாற்றம் நாறியதைப் பற்றியும் அவன் உள்ளத்தில் அலை அலையாக பல எண்ணங்கள் எழுந்தன.

அக் குன்றின் மேல் பழம்பெருமையைக் காட்டக்கூடிய ஒரு பொருளும் காணப்படவில்லை. மன்னர்கள் வசித்த அரண்மனைகள் மணல் மேடுகளாகிவிட்டன. எல்லாம் மறைந்தொழிந்து விட்டன. ஆனால் அயர்லாந்தை எதிர்த்து வெற்றி கொண்ட ஆங்கிலப் பகைவர்களின் சிப்பாய்கள் அவ்விடத்தில் போராடி இறந்ததற்கு அறிகுறியாக ஒரு சிலுவை மட்டும் நடப்பட்டிருந்தது.

அவ் விடத்தில் 1898-ஆம் ஆண்டு அயர் லாந்தின் சுதந்திரத்தைக் காப்பதற்காக எத்தனையோ ஐரிஷ் வீரர்கள் பகைவர்களை எதிர்த்துப் போராடி உயிர் நீத்தனர்.

அவர்களுக்கும் அச்சிலுவையே ஞாபகக் குறியாக விளங்கியது. தான் பிரீன் அவ்விடத்தில் முழங்காற்பணியிட்டுக் கொண்டு பழைய ஐரிஷ் வீரர்களுடைய கனவு நிறைவேற வேண்டும் என்றும், அதை விரைவில் நிறைவேற்றுவதற்கு தனக்கு வலிமையும் வீரமும் பெருகவேண்டும் என்றும் இறைவனைத் துதித்தான்.

மலையடிவாரத்தில் பழைய சிங்காரமான மாளிகைக்குப் பதிலாக நாட்டைப் பிடித்துக் கொண்ட அந்நியருடைய கோட்டைகளே காணப்பட்டன. அங்கு குடியானவர்களேயில்லை. இடையிடையே தொழிலாளர்களுடைய குடிசைகள் சில மைதானங்களின் மத்தியில் இருந்தன. வீதிகளில் மக்களுடைய நடமாட்டமேயில்லை. அரசர்களுக்கும் குடியானவர்களுக்கும் பதிலாகக் கொழுத்த மாடுகளே அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தன. அந்த மாடுகளும் ஆங்கிலேயரின் உணவுக்காக வளர்க்கப்பட்டவை!

கோடைகாலம் நெருங்கிக்கொண்டிருந்தது. தான் பிரீன் உடம்பு முற்றிலும் குணமாகி மீண்டும் வேலைக்குத் தயாராய் விட்டான். தேசத்தில் நெருக்கடி அதிகமாகி விட்டது பத்திரிகைகளில் மனம் பதறக்கூடிய பல செய்திகளை வெளிவந்தன அச்சமயத்தில் அவன் போராட்டத்தின் மத்தியில் நில்லாது மலையடிவாரத்தில் பொழுது போக்க விரும்பவில்லை. ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் டப்ளினில் லோர்ட் பிரெஞ்சைச் சுடுவதற்கு

ஆகப் பல சமயம் தான் பிரீனுடன காத்துக் கொண்டிருந்த கார்க் நகர மேயரான டாம் மக்கர் டெயின் என்பவர் அவருடைய வீட்டிலேயே அவரது மனைவியின் முன்னால் பிரிட்டிஷாரால் கொலை செய்யப்பட்டார். தர்லஸ் நகரிலும் இதுபோல இரண்டு மூன்று கொலைகள் செய்யப்பட்டன. இவற்றை கேட்டபொழுது தான்பிரீனுடைய இரத்தம் கொதித்தது. போர்! போர்! என்று அவனுடைய உள்ளம் துடித்தது.

உடனே டப்ளினுக்குச் சென்று, பல நண்பர் களையும் கண்டு மீண்டும் கெரில்லாச் சண்டையை ஆரம்பிக்க வேண் டும் என்று வற்புறுத்தினான். டிக் மக்கீ, பீடர் கிளான்ஸி முதலியோர் அவனை ஆதரித்தனர். ஆனால் டெயில் ஐரானோ, தொண்டர் படையின் தலைமை அதிகாரிகளோ தான் பிரீனை ஆதரிக்கவில்லை. மைக்கேல் கொலின்ஸ் மட்டும் கொஞ்சம் ஆதரவு காட்டினான்.

உண்மை என்னவென்றால் தலைவர்களுக்குத் தீவிரமான எந்த வேலையும் பிடிக்கவில்லை. தொண்டர்கள் தங்களுக்கும் அவர்களுக்கும் இருந்த வேற்றுமைகளைப் பகைவர்களுக்குத் தெரியும்படியாக வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

பொது மக்களும் யுத்தத்தை விரும்பவில்லை. 1918ஆம் ஆண்டு கடந்த பொதுத் தேர்தலில் அவர்கள் கொடுத்த வாக்கினாலேயே குடியரசை ஏற்படுத்துவதற்கு முடிந்தது என்பதை அவர்கள் மறந்துவிட்டனர்.

பொலிஸாரைத் தாக்குவதால் சட்ட விரோத உத்தரவுகளும், கைது செய்வதும் மேலும் அதிகரிப்பதைக் கண்டு அவர்கள் அஞ்சினார்கள்.

தான் பிரீன் டப்ளினில் அதிக நாள் தங்க விரும்பவில்லை. விரைவாகத் திப்பெரரிக்குச் செல்லவேண்டும் என்று தீர்மானித்தான். அங்கு தொண்டர்கள் எதற்கும் தயாராயிருந்தபோதிலும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு ஒரு தலைவன் வழிகாட்ட வேண்டிய அவசியம் இருந்தது. ஆதலால் தான் பிரீனும் டிரீஸியும் நூறுமைல்கள் சைக்கிளில் பிரயாணம் செய்து திப்பெரரியை யடைந்தனர். பன்னிரண்டு மாதங்களுக்குப் பிறகு தான் பிரீன் அப்பொழுதுதான் திப்பெரரியை மீண்டும் கண்ணுற்றான்.

1920ஆம் வருஷம் ஆரம்பத்தில், அயர்லாந்து பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் நிச்சயமான போர் தொடுத்துவிட்டது என்பதை உலகத்திற்கு அறிவிப்பதற்காகத் தொண்டர்கள் புதிய போர் முறையைக் கைக்கொண்டனர்.

அவர்கள் பொலிஸ்காரர்கள் தங்கியிருந்த படைவீடுகளைத் தாக்கித் தேசம் முழுவதும் குழப்பத்தை உண்டாக்கி வந்தனர். அக்காலத்தில் பீலர்கள் ஊர்க்காவலுக்காக சுற்றுவதை அடியோடு நிறுத்தி விட்டனர்.

அவர்கள் வெளியே சென்றால் உயிருடன் திரும்புவது நிச்சயமில்லாமல் இருந்தது. அவர்கள் தங்கள் படைவீடுகளை விட்டு வெளியேற முடியாமல் உள்ளே அடங்கிக்கிடந்தனர். தொண்டர்கள் பீலர்களைச் சந்தித்துப் போராட வழியில்லாமையால் அவர்களுடைய படைவீடுகளிலேயே போய்ச் சண்டைக்கு இழுக்க வேண்டும் என்று தீர்மானித்தனர்.

பட்டிகளிலும் சாலைப்புறங்களிலும் இருந்த படைவீடுகளையெல்லாம் காலி செய்து பெரிய படைவீடுகளில் கூட்டங்கூட்டமாக வசித்து வந்தனர். தொண்டர்கள் தங்களை எளிதில் வெல்ல முடியாதபடி ஏராளமான ஆயுதங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டனர். வீடுகளுக்கு இரும்புக் கதவுகள் போட்டுக் கொண்டதுடன் சுற்றிலும் முட்கம்பி வேலிகளும் அமைத்துக்கொண்டனர்.

அந்தச் சமயத்தில் தொண்டர்களின் தீவிரமான போராட்டம் தேசம் முழுவதிலும் பரவியது. பீலர்கள் காலிசெய்த ஆயிரம் படைவீடுகள் ஒரே நாள் இரவில் அக்கினிக்கு இரையாக்கப் பட்டன. அவற்றைத் தொண்டர்கள் ஏன் எரித்தனர் என்றால் பின்னால் பட்டாளத்தாரும் பீலர்களும் அவற்றில் வந்து தங்க இடமில்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காகவே.

அந்தச் சமயத்தில் பீலர்கள் தங்கள் பொலிஸார் என்பதை அறவே மறந்து விட்டனர். பொலிஸார் பொது மக்களைத் துன்புறுத்தாமல் அவர்களைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் ஆவர்.

ஆனால் அடிமை நாடுகளில் பொலிஸார் கடமைகளை கைவிட்டுத் தேசபக்தர்களை அந்நிய அரசாங்கத்திடம் காட்டிக் கொடுத்து உளவு சொல்வதையும். சுதந்திரக் கிளர்ச்சியை அடக்க ஆயுதந் தாங்கிய பட்டாளத்தாரைப் போல் சண்டை செய்வதையுமே கடமையாகக் கொண்டிருப்பார்கள். சுருங்கச் சொன்னால் ஐரீஷ் பீலர்கள் ஒற்றர்களாயிருந்தனர். அல்லது பட்டாளத்தாரைப் போல் யுத்தம் செய்துவந்தனர்.

எனவே மக்கள் அந்நிய அதிகாரிகளின் இராணுவத்தாரைப் பகைத்ததைக் காட்டிலும் தங்கள் கூடவேயிருந்து கொள்ளி வைக்கும் பீலர்களை மிக அதிகமாய்ப் பகைத்தனர் தொண்டர்களும் பீலர்களுடைய



வம்சத்தைக் கருவறுத்துவிட வேண்டும் என்று முற்பட்டனர். பீலர்கள் எந்தெந்தக் கிராமத்தை விட்டு வெளியேறினார்களோ அங்கெல்லாம் தொண்டர்கள் தங்களுடைய பொலிஸை நியமித்துக் கொண்டு திருடர்களையும் கொள்ளைக்காரர்களையும் அடக்கி வந்தனர். எந்தப் பீலருக்கும் பயப்படாத கொள்ளைக்காரர்கள் தொண்டர்களுடைய பொலிஸ் படைக்கு அடங்கி ஒடுங்கிக் கிடந்தனர்.

ஐரீஷ் பொலிஸார் மக்களைத் திருடாமிருந்து பாதுகாக்கும் கடமையை கைவிட்டதோடு நிற்கவில்லை. தொண்டர் படையினர் களவு முதலான குற்றங்களைச் செய்தவர்களைக் கைது செய்தால் பொலிஸார் அக்

தமிழில் ப.ராமஸ்வாமி

குற்றவாளிகளை விடுதலை செய்து விட்டு, அவர்களைப் பிடித்த தொண்டர்களையே தண்டித்துச் சிறைகளில் போட்டு வந்தனர்.

அக்காலத்துப் பத்திரிகைகளில் இது சம்பந்தமான செய்திகள் அடிக்கடி வெளிவந்து கொண்டிருந்தன. மீத்தலுகாவில் ஒரு முன்னால் பிரிட்டிஷ் சிப்பாய் பயங்கரமான ஒரு கொலையைச் செய்துவிட்டான். பொலீஸார் அவனைக் கைது செய்து விசாரணையில்லாமலேயே விடுதலை செய்து விட்டனர். தொண்டர்கள் கையில் சிக்கிவிடாமல் தேசத்தை விட்டு வெளியேறி விடும்படியும் அவர்கள் புத்தி சொல்லியும் அனுப்பினராம்! ஆனால் அந்த ஆங்கில சிப்பாய் பொலிஸாரிடமிருந்து விடுதலையடைந்த ஐந்து நிமிஷத்திற்குள் தொண்டர்களால் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டான்.

அதே சமயத்தில்தான் இங்கிலாந்திலிருந்து அயர்லாந்தை அடக்குவதற்காகப் [illegible] ஐரிஷ் அரசாங்கத்தில் ஏதோ களைச் செய்து அடக்கி விட வேண்டும் என்பதே. புதிய பட்டாளத்தில் சேர அயர்லாந்தில் ஆள் கிடைக்கவில்லை. இங்கிலாந்திலும் யோக்கியமானவர்கள் அதில் சேரவிரும்பவில்லை. ஆதலால் பிழைப்பில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த பல பழைய ஆங்கில சிப்பாய்களையும், தாழ்ந்த வகுப்பினரையும் கிரீன்வுட் பட்டாளமாகச் சேர்த்தார். அந்தப் பட்டாளத்தில் பெரும்பாலும் குற்றவாளிகளும்,கேடிகளும் பலமுறை சிறை சென்றவர்களுமே நிறைந்திருந்தனர். அவர்கள் அயர்லாந்துக்கு வந்தபோது அரசாங்கத்தாரால் அவர்கள் எல்லோருக்கும் ஒரே விதமான உடைகள் கொடுக்கமுடியவில்லை.

பொலிஸாருக் குக் கறுப்பு உடைகள் கொடுப்பது வழக்கம். புதிதாய் வந்தவர்களுக்குக் கறுப்பு உடைகள் கொடுக்க வழியில்லாமையால் சர்க்கார் கைவசமிருந்த சில கறுப்பு உடைகளையும், சுபில நிறமான உடைகளையும் கலந்து கொடுத்துவந் தனர். இதனால் புதிதாக வந்தவர்களிற் பலர் பலவிதமான உடை அணிய நேர்ந்தது. சிலர் கறுப்புத் தொப்பிகளையும் கறுப்புக் காற்சட்டைகளையும் கபில சட்டைகளையும் அணிந்திருந்தனர். சட்டை ஒரு நிறம், குல்லா ஒரு நிறம், காற்சட்டை வேறு நிறம்!

இவ்வாறு கறுப்பும் கபிலமும் கலந்த ஆபாசமான பழைய உடைகளை சட்டைகளையும் அணிந்திருந்த பட்டாளத்தாரைக் கண்டவுடன். ஐரீஷ் மக்கள் நகைத்து ஏளனம் செய்தார்கள்.

'பிளாக் அன்டு டான்ஸ்' பட்டாளத்தார் அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு இந்த விசித்திரமான பெயர் எப்படி வந்தது என்பதே ஒரு விசித்திரந்தான்!

'பிளாக் அன்டு டான்ஸ்' பட்டாளத்தார் எமதூதர்களுக்கு நிகரானவர்கள். 1920 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பல ஐரிஷ்காரர்கள் பொலிஸ் படையிலிருந்து விலகிவிட்டதால் அவர்களுக்குப் பதிலாக ஆங்கிலேயரைச் சேர்த்து அனுப்பும்படி ஸர் சுமார் கிரீனவுட் என்பவர் ஆங்கில அரசாங்கத்திற்கு யோசனை சொன்னார் கிரீன்வுட்டின் சோக்கம் ஆயிரக்கணக்கான புதியபட்டாளங்களைக் கொண்டு அயர்லாந்தில் சகிக்கமுடியாத கொடுமை

(பயணம் ...தொடரும்)

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

45

அரங்கம் அந்தரங்கம்

நினைவு பழையபடியும் பின் நோக்கிச் சென்றது.

'சந்திக்கின்ற கண்கள் குருடாக இருந்திருந்தால், சம்பவிக்கின்ற நிகழ்ச்சிகளும் இல்லாமல் போயிருக்கும்.'

உதய காலத்தின் சுகத்தை அஸ்த மனத்தில் சிந்தித்துப் பார்க்கிறது நெஞ்சு.

சங்கமிக்க முடியாத இடமே உண்மையாகவும், சங்கமமான இடம் துயரமாகவும் காட்சி அளிக்கின்றன.

கோடையிலே வசந்தத்தைப் பற்றிய சிந்தனை.

அந்த சிந்தனையிலேயே உள்ளம் குளிர்கிறது.

நான் சொல்ல நினைப்பதை முழுமையாகச் சொல்ல முடியவில்லை.

இதுவரைச் சொன்னதும் ஊமையின் நயன பாஷைதான்.

இரகசியத்தின் கனம் நெஞ்சை அழுத்துகிறது.

பேர் சொல்ல முடியாத இந்தப் பிரிவு பல ஆண்டுகளுக்குப் பின்னரும், சமீபத்தில் நிகழ்ந்தது போலிருக்கிறது.

இராட்சசத் தனமான உடல் விளையாட்டுகள் சிறிது நேரத்தில் முடிந்து விடுகின்றன.

சோர்வுற்றுப் படுத்திருக்கும்போது 'முதல் காதல்' பற்றிய சிந்தனை தலைதூக்குகிறது.

அறியாமையால் இறைவனைச் சில காலம் நான் தூற்றியது உண்டு.

அதற்காக என் ஆயுள் காலம் முழுவதையும் அவன் பழி வாங்குகிறான்.

'இவையே நிரந்தரம்; இவையே உறுதியானவை' என்று நான் எண்ணியவற்றையெல்லாம் என்னிடம் இருந்து பிரித்து விட்டான்.

அந்த வரலாற்றின் ஆரம்பம் அவள் பிரிவிலே தொடங்கிற்று.

நீரிலே தவழ்ந்து பழகிய வாத்து, நீர் வற்றிய பின் சேற்றிலே சிக்கிக் கொண்டு தடுமாறுகிறது.

என் காதலியை நான் நினைக்கின்ற அளவு, அவள் என்னை நினைத்திருப்பாளா?

நினைத்திருந்தால், அது, முதல் காதலுக்கு அவள் தருகிற பரிசாகும்!

மறந்திருந்தால் அது வெறும் பண் பாட்டையே குறிக்கும்.

அவளைக் கவிதையாக்குவதன் மூலம், என் ஆத்மாவின் பசி அடங்குகிறது.

அவளை நினைத்துக் கொண்டிருப்பதன் மூலம் நிகழ்காலத்தின் துயரங்கள் மறைந்து விடுகின்றன.

அவளை மறக்க முடியாதபோது, என் மதுக்கிண்ணம் நிரம்பி வழிகிறது.

அவள் காட்டாத சொர்க்கத்தை அது எனக்குக் காட்டுகிறது!

சிருஷ்டிதேவன் அவளையும், என் மதுக் கிண்ணத்தையும் ஒரே நேரத்தில் படைத்திருக்கிறான்.

இரண்டிலே ஒன்றைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டு இருக்கிறான்.

அவள் தன்னை எடுத்துக் கொண்டு விட்டாள்.

நான் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு விட்டேன்."

கமலா சொல்லி முடித்தாள்.

கண்ணை முடிக்கொண்டு கேட்ட நான் திடீரென்று கண் விழித்தேன். மணப்பெண்ணாக அலங்காரம் செய்திருந்த கமலா என் கால்களிலே வீழ்ந்திருந்தாள்.

★★★

வழுக்கி விழுகிறவனை படிக்கட்டுதான் வழுக்குகிறது. ஆனால் நதியல்லவா இழுத்துக் கொண்டு போகிறது?

சொருகுகிறவன் எரிந்து கொண்டிருக்கும் சுண்டு விரல் அளவு பீடியைத்தான் கூரையிலே சொருகுகிறான்; ஆனால் மொத்த வீடுமல்லவா எரிந்து போகிறது?

போடுகிறவன் ஒரு துளி விஷயத்தைத் தான் பாலிலே போடுகிறான். ஆனால், அந்தக்

குடத்துப் பாலைக் குடித்த எல்லோருமல்லவா மாண்டு போகிறார்கள்!

ஒரு நாள் வேடிக்கை என்று தவறு செய்தால், மறு நாள் வாடிக்கையாகிறது; பிறகு கேளிக்கையே சுகம் என்றாகிறது. தவறுக்கு முன்னாலிருந்த தெய்வீக உணர்ச்சிகள் தரை மட்டமாகி விடுகின்றன.

லலிதா தேவதையாகத்தான் பிறந்தாள்; கற்புள்ள பெண்ணாகத்தான் வளர்ந்தாள். காதல் என்னும் படிக்கட்டிலேதான் இறங்கினாள். கல்யாணம் ஆகாத உடலுறவில் வழுக்கி விழுந்தாள்; ஒழுக்கக்கேடு என்னும் நதி அவளை அடித்துக் கொண்டு போய் விட்டது.

இந்திரகுமாருக்காகக் கதவைத் திறந்த லலிதா கமலையும், யசோதாவையும் கண்டு திகைத்தாள். ஆனால் பயப்படவில்லை.

அவரது பதவி போனது அவளுக்குத் தெரியும்.

அதோடு அவரும் நடத்தைக் கெட்டவர் தான் என்பதை அவள் நன்றாக அறிவாள்.

மேலும் அவள் முழுக்க நனைந்த நிலையில் உள்ளவள்.

"வாருங்கள்! வாருங்கள்! உங்களை எதிர்பார்க்கவே இல்லை!" என்று கூறி அவர்களை உட்கார வைத்தாள்.

கவியரசு கண்ணதாசன்

சென்னையில் இப்படி ஒரு சமூகம் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

அந்தச் சமூகம் ஒரு ஜாதியைச் சேர்ந்ததல்ல!

அதிகாரிகள், டாக்டர்கள், வக்கீல்கள், அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள், சமூக சேவகிகள், ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்–

(அந்தரங்கம் வரும்)

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கண்ணதாசன்~

தப்பு!

நவசக்திராஜன்

"நீங்க இப்படி செய்வீங்கன்னு நான் நினைக்கவேயில்லை. அத்தனை பேருக்கும் முன்னால சீச்சீ.... நினைக்கவே வெட்கமாயிருக்கு!"

கனகத்திற்கு கோபம் பொத்துக்கொண்டு வந்ததில், என்ன பேசுவதென்று தெரியாமலே ராமநாதனை திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன கனகம்...? நான் அப்படி என்ன பெரிய தவறு செய்துட்டேன்னு கோபிக்கிற? ஏன்னா எனக்கு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த தெரியாது. சீக்கிரம் வெளிக் காட்டிடுவேன். அது என் வீக் பொயிண்ட். அது உனக்கு தெரியும் தானே? அதனால தான் அன்னைக்கு....?"

ராமநாதன் கனகத்தை சமாதானப் படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு எப்படிங்க இப்படி பேச முடியுது? எவ்வளவு பெரிய தப்புப்பண்ணிட்டு பச்சக் குழந்தை மாதிரி இப்படி பேசுறீங்க....?"

கனகத்திற்கு ஆத்திரம் குறைந்த பாடில்லை.

"சரி.. சரி கனகம் மன்னிச்சுக்கோவன். நான் அன்னைக்கு என் பிரண்டோட நியூஇயர் பார்ட்டியில அப்படி நடந்துகிட்டது தப்பு தான், தப்புதான், தப்புதான்...!"

ராமநாதன் முடிப்பதற்குள் கனகம்,

"தப்புதான்! அதுதான் பார்ட்டியிலேயே எல்லோரும் பார்த்துட்டாங்களே! கல்யாணம் ஆகிற வயசில ரெண்டு பொண்ணுகளுக்கு அப்பாவா இருந்தும் இவர் இப்படி நடந்து கிட்டாரேன்னு எல்லாரும் விரல்ல மூக்க வைச்சாங்கலே!"

"கனகம்! விரல்ல மூக்க வைக்க முடியாதில்ல, மூக்கில விரல வைச்சாங்கன்னு சொல்லு!"

"ஆமா இப்ப ஜோக்கு ஒண்ணுதான் குறைவா இருக்கு..., ஐயோ இந்த மனுசனுக்கு தான் செய்தது தப்புன்னு இன்னும் தோணலையே? எல்லாம் நான் செய்த பாவங்க. உங்களக் கட்டிக்கிட்டு இத்தனை வயசுக்குப் புறமும் இப்படி அவதிப்படுறது அது நான் செய்த பாவம் தான். இஞ்ச... ஏங்க உங்கபுத்தி இத்தனைவயசிலயும் இப்படி தடுமாறுது?"

கனகத்தின் வார்த்தையில் கோபம் மாத்திரமல்ல நியாயமும் தொனித்தது.

"ஏன் கனகம் என்ன புரிஞ்சிக்கவே மாட்டேங்குற. நான் தான் தப்ப ஒத்துக் கிட்டேன்ல. இதுக்கப்புறமும் என்ன திட்டுறது ஒனக்கே நல்லாயிருக்கா...?"

"தப்ப ஒத்துக்கிறதால, அந்த தப்பு மறைஞ்சிடுமாங்க....., அது அந்த பொண்ணு மனசை எப்படி பாதிச்சிருக்கும்; அதயோசித்துப் பார்த்தீங்களா? அவயாரு உங்க குளோஸ் பிரண்டோட பொண்ணு. ஒங்க பொண்ணு மாதிரி தானே?

"ஆமா கனகம்!"

"அப்ப ஏங்க எல்லார் முன்னாடி, அவகைய பிடிச்சி இழுத்துக்கிட்டு வந்து கன்னத்தில் மாறி மாறி வெறிபிடிச்சவன் மாதிரி நடந்துகிட்டீங்க? ச்சீ... சீ... எனக்கே இப்படின்னா மத்தவங்க என்ன நெனச்சிருப்பாங்க... அந்த பொண்ணுட்ட எதிர்கால வாழ்க்கையைப் பற்றி யோசிச்சிப் பார்த்தீங்களா? அவ எப்படி இனி தலை நிமிர்ந்து நடப்பா? ஆ... சொல்லுங்க!"

"இல்ல கனகம்... நா...நான் அப்படி நடந்துகிட்டதுக்கு கா... காரணம்..." ராமநாதன் முடிப்பதற்குள்.

"காரணம் என்னான்னு எனக்கு தெரியுங்க... அது எல்லோருக்கும் தெரியும்."

"அப்ப ஏன் கனகம் என்ன புரிஞ்சிக்க மாட்டேங்குற?"

"இல்லீங்க நீங்க நிதானத்த இழந்திட்டீங்களே அதுதான் எனக்கு கோபம். இப்ப நாம வாழ்ந்த காலம் மாதிரி இல்லங்க. இது கலியுகம், கம்யூட்டர் யுகம். பிள்ளைகள் தவறான பாதைக்குப் போக நிறையவே வழியிருக்கு, அதுகளுக்கு அது தவறாக தெரியாதுங்க. நாகரீக வளர்ச்சின்னு தான் நினைக்கிறாங்க."

"அந்த பொண்ணுக்கும் அதே எண்ணம் தாங்க. அத நாம தவறா பயன் படுத்திடக் கூடாது! சின்னப் பொண்ணு, ஏதோ ஆசையில எல்லாரும் போல தானும் பியர் குடிச்சிப் பார்க்கணும்னு குடிச்சிப் பார்த்திருக்கு. அதுக்குப் போய் இப்படி ஆத்திரப்பட்டு அவ கன்னத்தில் மாறி... மாறி இரக்கமே இல்லாம எப்படிங்க அறைஞ்சீங்க...? இப்ப இருக்க நாகரீக மாற்றங்கள்ல இதெல்லாம் சகஜங்க இதையெல்லாம் ஆத்திரத்தால் திருத்த முயலக் கூடாதுங்க. அன்பால தான் திருத்த வேணும். நாம அதட்டி பணியவைக்க நினைச்சா இள இரத்தங்கள் அடங்காதுங்க. இதைவிட பெரிய பெரிய தப்புகளை செய்ய முனைவாங்க. அன்பா, அமைதியா, அவங்க செய்யும் தவறை, தவறு என்று சுட்டிக் காட்டணும். அப்பதாங்க அதுகளுக்கு புரியும், தான் செய்தது தப்புன்னு தோணும். இதை விடுத்து கோபத்தில் நாம செய்யும் தவறான அணுகு முறைகள் அதுகல இன்னும் தவறான பாதைக்குத் தான் கொண்டு செல்லுங்க...!"

மூச்சு விடாமல் பேசிக்கொண்டு இருக்கும் கனகத்தின் வார்த்தையில் தொனித்த கோபத்தின் அர்த்தம் இப்போதுதான் ராமநாதனுக்குப் புரியத் தொடங்கியது! □

காதலர் தினம்

பெப்ரவரிமாதம் 14ம் திகதி. அந்த சிகப்பு ரோஜா மலரை கையில் எடுத்துக் கொண்டான் அரவிந். "சாந்தி!" அவளின் பெயரைச் சொன்னான். சுகமாக இருந்தது. இது இரண்டாவது காதலர் தினம். சைக்கிளை வேகமாக மிதிக்கத் தொடங்கினான். 'சாந்தி' அவளுக்காக ஏங்கிய நாட்கள். ஒரு முறையாவது பேசமாட்டாளா? பசுமையான நாட்கள் அவை.

இயற்கையாகவே கொஞ்சம் கூச்சசுபாவமும், பயந்த மனமும் கொண்ட அரவிந்தின் மனதுள் எப்படியோ நுளைந்து கொண்டாள் சாந்தி. "மச்சான் இந்த சைட் அடிக்கிறது, வம்பு பண்ணுறது. எல்லாம் இந்த கொஞ்ச நாளைக்குத்தான். இந்த வயதை கடந்திட்டம் என்றால்; பிறகு கணவன் மனைவி; அம்மா அப்பா; இப்படிப் புரமோசன். பிறகு ரோட்டு ரோமியோவா சுத்தவா முடியும்? கொஞ்சம் கலகலப்பாய் இருக்கப்பார்!" என்றான் ஐங்கரன்.

முதலில் நண்பர்கள் மூலமும், பிறகு அவளுக்கு தெரிந்தவர்கள் மூலமும் அணுகிப் பார்த்தான். பலன் இல்லை. "மச்சான் உணர்ச்சிகளை எல்லாம் கடன் கொடுக்கப் பார்க்காதை. உன்ரை மனதில் உள்ளதை உன்னாலை மட்டும்தான் சொல்ல முடியும். பயப்படாமல் போ. கஷ்ரம் என்றால் ஒரு கடிதத்திலையாவது எழுதிக்கொடு!"

ஏதோ ஒரு துணிவு. மந்திரத்தால் கட்டுண்டவன் போல அவளுக்கு முன்னால், "சாந்தி!" அதற்கு மேல் முடியவில்லை. கை கால்கள் தந்தி அடித்தன. வியர்த்தது. கடிதத்தை கூட கொடுக்க முடியவில்லை. ஒரு புன்னகையை சிந்திவிட்டு மறைந்துவிட்டாள். ஆனால் அந்தப் புன்னகையில் ஆயிரம் அர்த்தங்கள் இருப்பதாகப் பட்டது.

அவளுக்காக செலவு செய்தது நீண்ட ஒரு காலப்பகுதியையே. "ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது அவளைப் பார்க்க மாட்டோமா?"என்று ஏங்கியதுண்டு. எத்தனை பிரார்த்தனைகள்! இந்த காதலுக்கும் தாடிக்கும் உள்ள ஒற்றுமை என்னென்றால் இரண்டுமே வெட்டவெட்டத்தான் வளரும். அதே போல அவள் என்னில் இருந்து விலகவிலகத்தான் எனக்கும் அவள்மேல் உள்ள விருப்பம் அதிகரித்தது. எனக்குள் அழுது இருக்கிறேன். கலங்கிய கண்களுடன் அவள் முன் எத்தனை நாட்கள்? இவளுக்கு இரக்கமே இல்லையா?

"துணிவில்லாத ஆட்கள் எல்லாம் ஏன் காதலிக்க வெளிக்கிடுகிறியள்!" எனக்காக அவள் விட்டுச் சென்ற கேள்வியாக இருக்கலாம். இதிலே எங்கே என் தவறு? தன்னைத்தானே சுயமதிப்பீடு செய்யத் தொடங்கினான். சில நிதர்சனங்களின் தாக்கங்களை நாம் சடுதியாகக்கூட உணருவதுண்டு. 'நான் ஒரு மனநோயாளியாகிவிட கூடாது.' தன்னைத்தானே வரையறுத்துக் கொண்டான். அவனுக்கே தெரியாத ஒரு தீர்மானம். ஒரு வேகம். ஒரு துணிவு. அவளிடம் போனான்.

"சாந்தி!" அந்த அழைப்பில் நிறைய வித்தியாசம் இருந்தது. ஆச்சரியமாகப் பார்த்தாள். "நீ ஓர் அழகான பெண். 'உன்னாலை நினைச்சா எதையுமே சாதிச்சிடலாம்' என்கிற ஒரு சுப்பிரியாரிட்டிக் கொம்பளைக்ஸ் உன்கிட்டை நிறைய இருக்கு. அதனாலை தான் என்னுடைய அன்பை நீ உதாசீனம் செய்கிறாய் பரவாயில்லை. ஒருவரை விரும்புறதும், விரும்பாததும் அவரவர் மனதைப் பொறுத்த விசயம். அது உன்னுடைய உரிமையும் கூட. அதில் நான் தலையிடமாட்டன். அதுக்காக நாளைக்கே நான் வேறை ஒரு பெண்ணுக்குப் பின்னாலை "ஐ லவ் யூ!" என்று சொல்லிக் கொண்டு போவன் என்று மட்டும் நினைக்காதை. ஏனென்றால் நான் உன்னை விரும்புறன்.

விரும்பிக்கொண்டே இருப்பன். அது என்ரை உரிமையும் கூட. அதிலை எவருமே தலையிட முடியாது. ஏன் நீயும் கூட! நீயும்கூடத்தான்...!

சாந்தி காதலிக்கிறதுக்கு நல்ல மனம் மட்டும் இருந்தால் போதாது, அழகும் வசதியும் கூட வேணும் எண்டு இப்பதான் தெரிஞ்சு கொண்டன். இனிமேல் உனக்கு எந்த தொந்தரவும் கொடுக்கமாட்டன்." விடைபெற்றுக்கொண்டான்.

அதற்கு இரு தினங்களுக்கு பிறகு அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. பிரித்து படித்தான். "அரவிந்! உன்னுடைய தூய்மையான காதலை நான் எப்போதோ புரிந்து கொண்டேன். அதை உன் கண்களே எனக்கு உணர்த்தியது. உண்மையான காதலை நிறம், மொழி, வயது போன்றவை எல்லாம் பாதிப்பதே இல்லை. இவை இரண்டாம் பட்சம் தான். அதனால்தான் காதலுக்கு கண் இல்லை என்பார்கள். கண் இருந்தால் அதுகாதலும் இல்லை. உனக்கு தெரியுமா அரவிந்! காதலை இன்னும் எங்கடை சமூகம் அங்கீகரிக்கவே இல்லை. காவியம், இலக்கியங்களில் மட்டும் காதலைப் போற்றுவார்கள். நடைமுறையில் சாகடித்துவிடுவார்கள். இவர்களை எல்லாம் சமாளித்து வெற்றிபெற வேண்டுமானால் அதுக்கு தன்னம்பிக்கையும், மன உறுதியும் நிச்சயமாய்த் தேவை. உன் காதலையே முகத்துக்கு நேரே சொல்லத் தயங்கிக் கொண்டு, இருந்த உன்னிடம்; இதையெல்லாம் எப்படி என்னாலை எதிர்பார்க்க முடியும்? அதனாலை தான் இவற்றை நீ வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே சற்று விலகி இருந்தேன். இப்போ எனக்கு அந்த சந்தேகமே இல்லை.

அரவிந் உன்னை அதிகமாகவே நான் சோதித்துவிட்டேன்! என நீ கருதி இருந்தால், என்னை மன்னித்துவிடு. இல்லை நம் காதலுக்கு ஒரு அத்திவாரத்தையே இட்டு இருக்கின்றோம் என்று நினைத்து இருந்தால் நாங்கள் வருகிற 14ம் திகதி சந்திப்போம் காதலர்களாக. காதலுக்கு வேண்டும் நல்ல மனம் மட்டுமல்ல, தன்னம்பிக்கையும் தான்!" அவனது பாஷையிலே பதில் சொல்லியும் இருந்தாள்.

"சாந்தி! என்னை மன்னிச்சிடம்மா. நீ இதயமுள்ளவள். இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீ தான் என்....."

அவனது சைக்கிள் சில்லு ஒரு கல்லில் ஏறிவிழுந்தது. அதன் பிறகுதான் ஏதோ ஏதோ அனர்த்தங்கள் எல்லாம் நடந்து முடிந்தன. அவளைப் பார்க்கவே முடியவில்லை. இன்றோடு சரியாக ஒருவருடம் பூர்த்தியாகிவிட்டது. அவள் கேட்டுக் கொண்டபடி கட்டாயம் அவளோடு பேசியே ஆக வேண்டும். ஏனென்றால்! இன்று காதலர் தினம்.

அந்த அமைதியான சூழலில் சைக்கிளை ஒரு மரத்தின் நிழலில் நிறுத்திவிட்டு, சாந்தியை தேடிக்கொண்டு வந்தான்.

"சாந்தி செபஸ்ரியன்!"

"மறைவு 14.02.1999."

அவள் பாதங்களில் அந்த ரோஜா மலரை வைத்தான். "சாந்தி என்னை மன்னிச்சிடம்மா. போன காதலர் தினத்தில் உன்ரை உடலை மட்டும்தான் பார்க்க முடிஞ்சுது. பேச முடியவில்லை. நான் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்."

இணுவையூர் உத்திரன்

'சாந்தி'.... சாந்தி வாழ்க்கையில் எனக்கு கிடைக்காமல் போனது உனது பெயராக!

"நாளை நிச்சயமில்லாத நாட்டில் நாம்."

நம் காதலர் தினங்கள் தொடரட்டும். இந்த கல்லறைகளில் இருந்தாவது!" என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போது.....

"அரவிந் காதலுக்கு தேவை நல்லமனமும், தன்னம்பிக்கையும் மட்டுமல்ல, அமைதியான தேசமும் தான்"

என்று கல்லறையில் இருந்து சாந்தி கூறுவது அவன் காதுகளில் மட்டும் விழுந்து கொண்டே இருந்தது. ♥

அடுப்படி நளபாகம்

வீரமுனை வானவர்கோன்

பாடசாலைப், படிப்பு என்று படிப்பதிலே கவனம் செலுத்தி வந்தாள் பிரவீணா. வகுப்பில் முதலாம் பிள்ளையாகவும் அவளே தான் வருவாள். அவளது ஸ்தானத்தைத் தாமும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதில் சக மாணவிகளும் ஈடுபட்டு தோல்வி கண்டு வருவதனை நினைத்துக் கர்வம் கொள்வாள் பிரவீணா.

அதிகாலை நான்கு மணிக்கு மணிக்கூட்டின் அலாரம் அவசர அவசரமாக அவளையும் தங்கை அனிதாவையும் தட்டி எழுப்பி படிக்கத் தூண்டும். நேரம் போவது தெரியாமல் படித்துக் கொண்டிருப்பாள் பிரவீணா, அதேபோன்ற பழக்கத்தையே தங்கையும் பின்பற்றலானாள், "படித்தது போதும். தேத்தண்ணியைக் குடிச்சிட்டு பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிடுங்க!" என தாயார் சத்தமிட்ட பின்னரே தேநீர் பருகியவாறு குளியலறைக்கு செல்ல தயாராவார்கள்.

தந்தையாக இருந்து பிள்ளைகளைக் கவனிப்பதுடன், பிள்ளைகள் இருவரினதும் முன்னேற்றமே தனது முக்கிய குறிக்கோளென மனதில் ஒரு பிடிவாதப் போக்கை வரிந்து கொண்டு பிள்ளைகளைப் பராமரிக்கலானாள் தாய். பிள்ளைகள் உயர்கல்வியை முடித்து சமூகம் போற்றும் மனிதர்களாக வர வேண்டுமென கனவு கண்ட தாய், வீட்டு வேலைகளையோ குடும்பப் பொறுப்பையோ எதனையும் பிள்ளைகளுக்குக் காட்டிக் கொள்ளாமல் எக் கஷ்டம் வந்தாலும் இல்லாதது போல் மறைத்து பிள்ளைகளை நல்வழிப்படுத்தினாள்.

'இன்று பாடசாலை விடுமுறை தான். என்றாலும் சமைக்கும் அளவுக்கு எனக்கு எதுவும் தெரியாதே? பாவம் அம்மா, எங்களுக்காக எவ்வளவு கஷ்டத்தையெல்லாம் அனுபவித்து இருப்பாள். இந்த இரண்டு நாளாக காய்ச்சலெண்டு அம்மா படுத்திருப்பதே எமக்கு கஷ்டமாகத் தெரியுது. எப்படியென்றாலும் சமைக்கத்தான் வேண்டும். அம்மாவுக்கு இப்போது, காய்ச்சல் கொஞ்சம் சுகம். இரண்டு நாளாக எதுவும் சாப்பிடவும் இல்லையே'யென சிந்தித்த வண்ணம் இருந்த போது,"அக்கா இன்றைக்கு நான் பாத்திரங்களைக் கழுவுறன். நீங்கள் சமையலைச் செய்யுங்க!" என அனிதா கூறியதும் பதில் கூற முடியாத நிலைக்குள்ளானாள் பிரவீணா.

வழமையாக அம்மா சுகவீனமாக இருந்தால், அனிதா சமையலைக் கவனித்துக் கொள்வாள். இன்று திடீரென என்னை மாட்டி விடுவாளென நினைக்கவே இல்லை. ஸ்கூல் ஹோம் வேர்க் செய்யாமலே அப்படியே கிடக்கு, சமையலை தட்டிக் கழித்து விடவும் முடியாதே முடிந்ததைச் செய்வம். காணாத குறைக்கு இன்றைக்கு அங்கிளும் வீட்டுக்கு வருவேனென்று சொல்லிவிட்டாரே. அவர் எம் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார். அவரது நம்பிக்கையை நாம் தவிடு பொடியாக்கிவிடக் கூடாதே! அம்மா சுகமாக இருந்தால் இந்தப் பிரச்சனை எனக்கு இல்லையே!.

அனிதா பாத்திரங்களைக் கழுவிய பின்னர் பச்சமிளகாய், வெங்காயம் போன்றவற்றைத் துப்பரவு செய்துவிட்டு, தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள். "என்ன அக்கா, இன்னும் யோசித்து முடியவில்லையா? இன்னும் ஒரு மணித்தியாலத்தில அங்கிளும் வந்திடுவார். அடுப்பில சோத்துக்கு வைச்ச தண்ணியும் கொதிச்சு வத்திப் போட்டுது. எழும்பிப் போய் அரிசை அரிச்சுப் போடுங்க. நான் காய் கறியை வெட்டுறன். இன்றைக்கு மரக்கறி தானே. அதனால பிரச்சனையும் இல்ல? அங்கிளுக்கும் மரக்கறியெண்டா நல்ல விருப்பம் தானே?"

பொம்புளப் பிள்ளைகள் படிக்கிறதோடு மட்டும் நிற்காமல், வீட்டு வேலைகளையும் செய்து பழக வேண்டும். தங்களது உடுப்புக்களை தாங்களே தோய்த்து பழக வேண்டும். அது உலர்ந்த பிறகு மடித்து வைக்க வேண்டும். அம்மாவுக்கு சமையலில் உதவி செய்ய வேண்டும். விளையாட்டு நேரத்தில விளையாடணும். படிக்கிற நேரத்துல படிக்கணும். சமைக்கிற நேரத்துல சமைக்கணும். இப்படி எத்தனையோ தரம் அங்கிள் புத்திமதி சொல்லி இருப்பார். இன்றைக்கு அவர் வரும் நேரம் பார்த்து அம்மாவும் காய்ச்சலெண்டு படுத்துறுக்கிறாவே!

நான் சமைக்காமல் இருந்தால் அங்கிள் வந்து பார்த்து விட்டு என்ன நினைப்பார்? இவ்வளவுகாலமும் கதைத்ததெல்லாம் விழலுக்கிறைத்த நீராச்சே? எனக் கவலை கொள்வாரல்லவா என்ன செய்வதென்றே தெரியாமல் இருந்த போது, உள்ளே நுளைந்த அம்மா, "பிரவீணா சாமான்களை எடுத்துத்தா, நேரமும் பதினொன்றரையாகப் போயிற்று, காலையில என்ன சாப்பிட்டீங்க?" எனக் கேட்டவாறு சமைக்க ஆரம்பித்தாள். எனக்கோ சந்தோசம் எல்லையைத் தாண்டி விட்டது, அம்மாவைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்ததுடன், அருகில் இருந்து அடுப்படி நளபாகத்தின் நுணுக்கங்களை அவதானமாகக் கற்கலானேன். எங்களது வீட்டில் இப்போதெல்லாம் எனது சமையலே நல்ல டேஸ்ற். ●

இலக்கிய நயம்

காதல் எனும் கொடு நோய்

எழுதுவது

முழுமதியன்

"வா அஞ்சுகா, காதலர் தினமெல்லாம் எப்படி இருந்தது?"

"வெறுப்பைக் கிளப்பாதே வினோதா! என் உயிர் அங்கே வன்னிக்குள் வாட, வெறும் கூட்டுக்கு இங்கென்ன கொண்டாட்டம்?"

"பிரிவுதானே காதலுக்குப் பெருமை சேர்க்கிறது. பிரிந்திருக்கும் போது மனம் புலம்பியதெல்லாம் சேர்த்துத்தானே தமிழுக்குக் கடல்போலக் கவிதைவளம் பெருகியது. பிரிந்தவர் கூடினால் பேச்சே நின்றுவிடுகிறது. கவிதை மௌனமாகிவிடுகிறது...."

"சும்மா இரு வினோதா, உனக்குக் கவிதை வெறி: எனக்கோ காதல் வலி."

"வலி காணாத சுகப்பிரசவம் உண்டா?

மனதிலே பிறந்து மனதையே தின்று தீர்க்கிற மதனதேவனோடு நடக்கிற மல்யுத்தம்.....வலி இல்லாமல் இருக்குமா? வலிதான்.... மனதில் இன்பம் பாய்ச்சுகிற வலி. கவலைப்படு நன்றாய்.... கவிதைக்கு அதுதான் வேண்டும்."

"நீ இப்படி அரக்கனாக மாறுவாய் என்று நான் நினைக்கவில்லை.... உனக்கு இலக்கியத்தின் மீது இருக்கிற பற்று வெறியாகியிருக்கிறது. அதனால் தான் துன்பப்படுவதில்தான் இலக்கிய விமோசனம் இருக்கிறதென்று துன்பம் திணிப்பதை நியாயமாக்கப் பார்க்கிறாய். விடிவுக்காக என்று வலியுறுத்தப்படுகிற வன்முறை நம்மையே தனக்குள் விழுங்கி விடுவதைப் போல..."

"இல்லை அஞ்சுகன், 'கவிதை வேண்டுமானால் காதலித்துத் தோற்றுப் போ' என்கிறார்களே... அதற்காகச் சொன்னேன். தமிழிலும் சரி, வேறெந்த மொழியிலும் சரி, தோற்ற காதல் கதைகள் தானே இலக்கியமாய் நிலைத்திருக்கின்றன....."

"என்ன சொல்ல வருகிறாய் வினோதன்? இலக்கியத்தில் நிலைபெற வேண்டுமென்பதற்காக நான் வேதனையில் துடிக்க வேண்டுமென்கிறாயா? யாராவது வாதையில் அலறினால்தான், நீங்கள் இன்பமாய் இரசிக்கக் காதை வரும்... அப்படித்தானே?"

"ஐய்யய்யோ! அஞ்சுகா, உனக்கேன் இவ்வளவு கோபம் வருகிறது? 'கவிதைகள் எல்லாம் காதலிலேயே முகிழ்கின்றன' என்று, சொல்லியிருக்கிறான் பெருங் கவிஞனொருவன். அதுவே. பிரிவு நேரும் போது பெருங்காவியங்களாகியிருப்பதைச் சொன்னேன்.

போரிஸ் பாஸ்டர் நாக்கின் ஷிவாகோ-லாரா காதலை படித்திருக்கிறாயா? நாவலின் ஓரிடத்தில்: 'காதல் என்பதற்குப் பல சமயங்களிலும் தவறாகக் கற்பிக்கப்படும் 'தகிக்கும் வேட்கை' என்பதால் தூண்டப்பட்டு அவர்கள் ஒருவரையொருவர் காதலிக்கவில்லை. அவர்கள் காதலிக்க வேண்டுமென்பதுதான். அவர்களைச் சூழ்ந்திருந்த மரங்கள், முகில்கள், அவர்களது தலைக்கு மேலே இருந்த வானம், கால்களுக்கடியில் இருந்த பூமி ஆகிய எல்லாவற்றினதும் சித்தமாக இருந்தது. அவர்களைச் சூழ்ந்திருந்த உலகமும், தெருக்களில் அவர்கள் சந்தித்த அந்நியர்களும், நடந்து செல்லும் போது அவர்கள் கண்ட பரந்த வெளிகளும், அவர்கள் வசித்த, சந்தித்த அறைகளும்....

அவர்கள் தமது காதலில் கண்டடைந்த ஆனந்தத்தைக் காட்டிலும் கூடுதலான ஆனந்தத்தைப் பெற்றிருக்கக் கூடும்' என்று அவர் எழுதுகிறார்.

"காதலர்களை உலகமெல்லாம் காதலிக்கும்" என்று ஷேக்ஸ்பியரும் சொல்லியிருக்கிறார். அந்த உரிமையில் தான் உன்னைச் சீண்டினேன். கோபம் கொள்ளாதே அஞ்சுகா...."

'புன்னகை செய்திடுவாள்- அற்றைப்
போது முழுது மகிழ்ந்திருப்பேன் சற்றென்
முன்னின்று பார்த்திடுவாள் - அந்த
மோகத்திலே தலை சுற்றிடுங் காண் பின்னர்
என்ன பிழைகள் கண்டோ - அவள்
என்னைப் புறக்கணித் தேகிடுவாளங்கு
சின்னமும் பின்னமுமாய் - மனஞ்
சிந்தியுளமிக நொந்திடுவேனடா!'

இன்றைக்கும் எல்லோர் மனங்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறவனாயிருப்பதால் தான் பாரதி மகாகவி...."

"அது மட்டுமில்லை, உன் துன்பத்தை அவன் சொல்லியிருப்பதைப் பார், "கூண்டுக் கிளியினைப் போல் தனிமை கொண்டு மிகவு நொந்தேன். வேண்டும் பொருளையெல்லாம் மனது வெறுத்துவிட்டதடீ...." என்று அதைப் பட்டியலிடுகிறான். 'பால் கசக்கிறது, படுக்கை நோகிறது, கோலக் கிளி மொழியும் செவியில் குத்தலெடுக்கிறது, உணவு செல்லவில்லை, உறக்கம் கொள்ளவில்லை. மணம் விரும்பவில்லை குணம் உறுதியின்றி எதிலும் குழப்பம் வந்துவிடுகிறது...."

இந்த மருத்துவத்திற் சுகப்படா நோய், பிரிவின் போது விஸ்வரூபம் எடுக்கிறது. மேனி கொதித்துத் தலைசுற்றி வேதனை செய்து பிரிவென்பதோர் நரகத்தில் உழல்வதைச் சொல்கிறான் பாரதி... அதுதானே அஞ்சுகா, உன்நிலையும்?"

"ம்...ம்.. இதைத்தான் எளிமையாக கண்ணதாசன் பாடியிருக்கிறான். "பாலிருக்கும் பழமிருக்கும்

பசியிருக்காது... பஞ்சணையில் காற்றுவரும் தூக்கம் வராது....."

"கண்ணதாசன் பாரதியை மட்டுமில்லை பழைய இலக்கியங்களையெல்லாம் கரைத்துக் குடித்ததால்தான் காதல் நோயில் பெண் உழல்வதைச் சொல்லும் போது அத்தனை எளிதாய்ச் சொல்லிவிட முடிந்தது.....பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார், பெண்ணின் இந்தத் துன்பநிலையைத் தாயின் குரலில் சொல்லியிருக்கிறார். எல்லா விளையாட்டுக்களையும் வேடிக்கைகளையும் துறந்து, ஸ்ரீரங்கநாதன் வருவானோ, மாட்டானோ என்பதிலேயே உடல் மெலிந்து நோய் காண்கிறாள்.

பந்தோடு கழல் மருவாள், பைங்கிளியும்
பாலூட்டாள்; பாவை பேணாள்;
வந்தானோ திருவரங்கன் வரானே?
என்றென்றே வளையும் சோர...'

நிற்கின்றாளாம்....

அதுமட்டுமில்லை

சீறாப்புராணத்தில் உமறுப் புலவரும், முகம்மது நபியவர்களை எண்ணிக் கதீஜா நாயகியார்

படும் துயரைப் பாடுகிறார். அலங்காரங்களையெல்லாம் வெறுத்தொதுக்கும் கதீஜா அம்மையார், வாழ்வதற்கு அத்தியாவசியமான தேவைகளையும்

கூட விலக்கி விடுகிறாராம்.

'பஞ்சணைப் பொருந்தார்: இரு விழி துயிலார்;

பழத்தொடு பாலமுது அருந்தார்;

கொஞ்சுமென் குதலைக் கிளியொடு மொழியார்;

கொழுமடல் செவிக்கு இசை கொள்ளார்;

இஞ்சமென் மலர்ந்தாள் பெயர்த்திட உலவார்;

கடிமலர் வாச நீராடார்;

வஞ்சி நுண் இடையார் தம்மிடத்து உறையார்;

முகம்மது மனத்திடத்து உறைந்தார்....'

என்று பெயர்த்தும் நபியவர்களுக்கே பிச்சியாகிவிட்ட கதீஜா நாயகியைப் பாடுகிறார் உமறுப்புலவர்.

"சரி சரி, நிறுத்து வினோதா! எல்லோரும் தான் பாடியிருக்கிறார்கள். ஆனாலும் பெண் நிலையிலிருந்து தன் துன்பத்தைப் பாடியிருக்கும் ஔவையார் பாடல் தான் என் நிலையைச் சிறப்பாய்ச் சொல்லுகிறது.

'மோனத்திருக்குதடீ இந்த வையகம் மூழ்கித் துயிலினிலே.... நான் ஒருவன் மட்டும் நரகத்தில் உழல்கிறேன்.....' என்று வெம்புகிறானே பாரதி! அது போலத்தான் இந்தப் பெண்ணுக்கும். காதல் வயப்பட்டதிலிருந்து இவள் படும் சிரமம் சொல்லுந் தரமன்று. நெஞ்செல்லாம் அவனே முட்ட முட்ட நிறைந்திருப்பதால் மூச்சுத் திணறுகிறது. மண்டையே வெடித்துவிடும் போல் இருக்கிறது... என்ன செய்வது எதைச் செய்யக்கூடாது என்று ஒன்றுமே புரியவில்லை. யாரைப் பார்த்தாலும் எரிச்சல் வருகிறது. ஐயோ! நான் என்ன பண்ணுவேன்? எங்கு போய் முட்டிக் கொள்ள? ஒன்றுகிடக்க ஒன்றுபண்ணி யாருக்காவது அடித்துத் தொலைத்துவிடுவேனோ என்று

பயமாயிருக்கிறது! நடுராத்திரியில் எழுந்திருந்து 'ஓ' வென்று கத்திவிடுவேனோ என்றும் இருக்கிறது... சே! என்ன ஜனங்கள்! சூறாவளியடிக்கிற என் மனக் கஷ்டத்தைக் கொஞ்சங்கூடப் புரிந்துகொள்ளாமல் எல்லோரும் நிம்மதியாய்த் தூங்குகிறார்களே....!'

முட்டுவேன் கொல்! தாக்குவேன் கொல்!

ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு

'ஆ அ ஒல்' லெனக் கூவுவேன் கொல்!

அலமரல் அசைவளி அலைப்ப, என்

உயவுணநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.

(குறுந்தொகை-28)

திரும்பிய காலம் இருந்தது. அந்த நாள் சென்னையை நினைவுகூர்ந்து எழுத்தாளர் அசோகமித்திரன் 'இன்ரர்நெற்' சஞ்சிகையான (மின் சஞ்சிகை என்பதைச் சுருக்கமாக 'மிஞ்சிகை' என்று வேறு அழைக்கிறார்கள்!) 'ஆறாம் தினை'யில் எழுதியிருப்பதையும் பாருங்கள்.

".....இரயில் வண்டிகள் யாழ்ப்பாணத் தமிழர்கள் இன்றும் குறிப்பிடுவதுபோலப் புகை இரதங்களாக இருந்தபோது, ஒரு இரயில் தொடரில் ஒன்பது அல்லது பத்து பெட்டிகளுக்கு மேல் இருக்காது. எழும்பூர் இரயில் நிலையம் முதலில் அந்த அளவுக்குத் தேவையான நீளமுடைய பிளாட்ஃபாரங்களைக் கொண்டதாகத்தான் இருந்தது. சுமார் நூறு ஆண்டுகள் முன்று பிளாட்ஃபாரங்களை மட்டுமே வைத்துச் சமாளித்துவிட்டது.

போட்மெயில் எனும் இன்டோ-சிலோன் எக்ஸ்பிரஸ் முதல் பிளாட் ஃபாரத்தில் கரிப்புகையையும் நீராவியையும் வெளியேற்றிக்கொண்டு மாலை ஆறு மணியளவில் கிளம்பும். அடுத்த நாள் நல்ல உச்சி வேளையில் தனுஷ்கோடி துறைமுகத்தில் போய் நிற்கும்.

அங்கே காத்திருக்கும் ஒரு நீராவிக் கப்பலில், சில பயணிகள் ஏறி இலங்கைத் தலை மன்னார் படகுத்துறையில் இறங்கி யாழ்ப்பாணம் போவார்கள்; அல்லது திருகோணமலை போவார்கள். சிலர் கொழும்பும் போவார்கள். அந்த நாளில் சென்னை எழும்பூர் இரயில் நிலையத்தில் இந்த இடங்களுக்கு பயணச்சீட்டு வாங்கிக் கொள்ளலாம். இன்று இதைப் பலர் நம்பக்கூட மாட்டார்கள்...."

■☆■

✉ **அன்பின் சிந்தியா! 'சிந்தித்தால் சிரிப்பு வரும், மனம் நொந்தால் அழுகை வரும்' என ஒரு பாடலில் உள்ளது. ஆனால் 'அதிகம் சிந்தித்தால் பைத்தியம்தான் வரும்' என்று சிலர் கூறுகிறார்களே... நன்றாய் சிந்தித்து எனக்குப் பதில் கூறுவீர்களா?**

வி.ராசகுமார், குருக்கள்மடம்.

அதிகமாய் சிந்திப்பதில்லை நான். அனேகமான பலரைப் போலவே வாழ்க்கை வெள்ளத்தில் மிதந்து செல்கிறவன். ஆழமாய் சிந்தித்தால் எனக்குத் தூக்கம் வந்துவிடுகிறது.

■☆■

✉ **சிந்தியா, ஈடுசெய்ய முடியாத இழப்பு எது?**

எஸ்.பத்மா, கொழும்பு-10.

கடந்து செல்லும் காலம்.

■☆■

✉ **'அமர்க்களம்' படத்தில் இடம்பெற்ற 'சத்தமில்லாத' என்று தொடங்கும் பாடலை எஸ்பிபி. மூச்சுவிடாமல் பாடியுள்ளாராமே. உண்மையா?**

வி.கோணேஸ், ஹப்புத்தளை.

உண்மையில்லை. அவரே பேட்டியில் சொல்லியுள்ளாரே.. இத்தகைய பாடல்கள்

சிந்தியர்

பதில்கள்

✉ **எனக்குச் சமீபத்தில்தான் திருமணமாகியிருக்கிறது. சந்தோஷமாயிருக்க என்ன வழி சிந்தியா?**

எல்.குமாரவேல், பொத்துவில்.

அடுத்தவர்களிடம் ஆலோசனை கேட்பதில் தப்பில்லைதான். ஆனால் செய்வதையெல்லாம் செய்துவிட்டு இவ்வளவு தாமதமாய்க் கேட்கக்கூடாது... போகட்டும் குமாரவேல்...! எங்கோ படித்த பொன்மொழி ஒன்றைத் தருகிறேன். அதையும் பாருங்கள்: "உலகத்தில் இரண்டு வகையான ஆண்கள் இருக்கிறார்கள். ஒன்று, சந்தோஷமான ஆண்கள், மற்றது, திருமணமானவர்கள்."

■☆■

✉ **கேள்வி கேட்பது சுலபமா? பதில் சொல்வது சுலபமா?**

எம்.எம்.இமாம் ஹஸன், ஹெம்மாதகம.

கேள்வி கேட்பதுதான் கஷ்டமென்று ஒரேவரியில் பதில் சொல்வதென்றால் சுலபம்.

■☆■

✉ **சிந்தியா! கேள்விகளை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?**

ம.தவவரதன், கொழும்பு-06.

தேர்ந்தெடுப்பது இருக்கட்டும். எப்படியெல்லாம் கேள்விகள் வருகின்றன என்று கேளுங்கள்: கடைசியாக என்னதான் கேள்வி என்று தேடிக் கண்டுபிடிப்பதற்குள் களைப்பை உண்டாக்குகிற கட்டுரைகள் ஒருபுறம், பதில்கள் சொல்வதற்கு சிந்தியாவுக்கு என்ன சம்பளம் தருகிறார்கள்? என்று அடிமடியில் கைவைப்பவை ஒருபுறம், இந்தப் பகுதிக்கு கேள்வியோடு கீழே பதிலையும் எழுதி அனுப்பவேண்டும் போலும் என்று எழுதியனுப்பிக் கொண்டிருப்பவர்கள் ஒருபுறம். பதில் சொல்வதற்கெல்லாம் என்ன தகுதி வேண்டும்? என்று மிக மிகச் சங்கடப்படுத்துகிறவர்கள் ஒருபுறம்... இத்தனைக்கும் மேலாக நம்மை வெலவெலக்க வைத்துவிடும் கேள்விகளும் வரும். அடுத்த கேள்வியைப் பாருங்கள்.

■☆■

✉ **சிந்தியா! உங்களுக்கு மிகவும் பிடித்த கொலையாளி யார்?**

எம்.எச்.அஸ்லம், நாச்சியாதீவு.

ஞாயிற்றுக் கிழமைகளில் நான் கோழி இறைச்சி வாங்கும் கடைக்காரர்.

■☆■

✉ **தமிழினத்தின் உரிமைக்காய் தயங்காமல் குரல்கொடுத்த அமரர் குமார் பொன்னம்பலத்தின் படுகொலையானது இலங்கையில் பேச்சுச் சுதந்திரத்திற்கு இடமில்லை என்பதை வெளிப்படுத்துகிறதல்லவா?**

ஜெபநாயகம் சர்வானந்தன், ஏறாவூர்-5.

அவருக்கிருந்த சுதந்திரத்தை அவர் பேசிக்கொண்டிருந்த சில காலமாவது அறிய முடிந்தது. பலர் வாயே திறக்க முடியாதபடி செய்யப்பட்டுப் பல ஆண்டுகளாகின்றன.

■☆■

✉ **'கண்ணுக்குள் நிலவு' படம் பற்றி?**

க.தயாளன், பாரதிபுரம்.

'காதலுக்கு மரியாதை' செய்தவர்கள் நெஞ்சில் இனித்தார்கள். இருவருக்கும் தனித்தனியாக கல்யாணச் சேதி கேட்ட பின்பு, காதலித்தது இரசிக்கவில்லை. 'கண்ணுக்குள் நிலவு' ருசிக்கவில்லை.

■☆■

✉ **பாரதி பாடியதுபோல் பாக்குநீரிணையில் பாலம் அமைத்திடும் காலம் வருமா?**

வே.இரத்தினசிங்கம், பருத்தித்துறை.

எதிர்காலத்தில் என்ன நடக்கிறதோ தெரியாது. கடந்த காலத்தில் இந்தியா நமக்கு இப்போது போல எட்டாத தூரத்தில் இருந்ததில்லை. வடக்குக் கரையோரத்திலிருந்து நம்போன்ற சாதாரணர்களும் அரைமணி நேரத்தில் கோடியாக்கரை போய் செகண்ட் ஷோ பார்த்துவிட்டுத்

இன்றைய நவீன ஒலிப்பதிவுக் கருவிகளுள்ள வசதிகளைப் பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றன.

■☆■

✉ **சிந்தியா, பகிடிவதை பற்றி என்ன சொல்கிறீர்?**

எம்.எம்.பைசல், கரம்பை.

பகிடியாகவே இருக்கும்வரை அதுவும் தேவைதான்.

■☆■

✉ **சிநேகமாய்ப் பழகப் போனாலும் முகத்தை 'உர்'ரென்று வைத்திருப்பவர்களைச் சமாளிப்பது எப்படி?**

எம்.மீனலோஜினி, வவுனியா.

பிரபல ரஷ்ய எழுத்தாளர் லியோ ரொல்ஸ்ரோய் ஒரு சமயம் பூங்காவில் இருந்தாராம். தன் அருகில் இருந்தவரிடம் "ஹலோ, எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டாராம். அந்த ஆசாமியோ சரியான முசுடர். "நாமிருவரும் இதற்கு முன்னர் ஒருமுறை கூட சந்தித்துக்கொண்டதில்லையே! பிறகு எப்படி 'ஹலோ' சொல்கிறீர்கள்?" என்று கடுகடுப்பாகச் சொல்லிவிட்டு நகர்ந்து விட்டாராம்.

அடுத்த நாளும் ரொல்ஸ்ரோய் பூங்கா சென்றபோது, அதே நபர் அமர்ந்திருந்தார். "ஹலோ, எப்படி இருக்கிறீர்கள்? நாம் இருவரும் ஏற்கனவே ஒருமுறை சந்தித்திருக்கிறோம்." என்று சிரித்துக் கொண்டே சொல்ல, அந்த நபராலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

■☆■

திருமறை தரும் பொது நெறி

புதிய ஆகமம் 36

உயிர்த் தெழுந்தார் உத்தமர்

"ஆண்டவருடைய திருக்குமாரனான இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்டு-மாபெரும் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனை எனக் கருதப்பட்டும் சிலுவையில் அறையப்பட்டு பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. எவருக்கும் ஓர் அணுப்பிரமாண அளவில் கூட தீங்கு நினைக்காத அவருக்கும் தன்னலக்காரர்களின் சூழ்ச்சியினால் இத்தகைய கொடுந் தண்டனை கொடுக்கப்பட்டது. தனக்களிக்கப்பட்ட தண்டனையை அவர் தடை எதுவுமின்றி ஏற்றுக்கொண்டார்.

மானிட சமுதாயம் செய்த பாவங்களைத் தானே ஏற்று, மானிடருக்காகவே சிலுவையில் மரித்தார். இயேசு பெருமானின் ஆவி பிரியும் போது ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்களால், இயேசு பிரானின் சீடர்களும் விசுவாசிகளும் அச்சம் கொள்ளவில்லை. ஆனால் அங்கு நின்ற காவலர்களும் தலைமைக் குருக்களின் தாசர்களும் கிலியடைந்து ஓட்டமெடுத்தனர்.

இயேசு பிரானின் நம்பிக்கைக்குப் பாத்திரமான யோசேப்பு என்பவர், தன்னை யூதர்களுக்கு வெளிப்படுத்தாமல் தலைமறைவாகவே நடமாடினார். இவர் அரிமத்தியா என்ற ஊரைச் சேர்ந்தவர். இவர் இயேசு பிரானின் ஆவி பிரியும் வரை, இயேசுவின் அன்னையார் கன்னி மரியாளின் அருகிலேயே நின்றிருந்தார். தனது தாயாரைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பினை இயேசு பிரான் யோசேப்புவிடமே ஒப்படைத்திருந்தார். இயேசுபிரான் ஆவி பிரிந்ததும், யோசேப்பு பிலாத்தின் மாளிகை சென்று பிலாத்தைக் கண்டார். இயேசுபிரானின் சடலத்தை யூத முறைப்படி நல்லடக்கம் செய்யும் பொறுப்பினைத் தன்னிடமே தரும்படி கேட்டுக் கொண்டார்.

இயேசு பெருமான் உயிர் நீத்த செய்தி அறிந்து பிலாத்து ஓரளவு மனம் வருந்தியவராகவே இருந்தார். யோசேப்பு, இயேசு பெருமானின் நல்லடக்கத்துக்கு அனுமதி கோரிய போது, தலைமைக் குருக்களின் கீழ் கடமை பார்க்கும். சிலர் பிலாத்துடன் இருந்தனர். அவரிடம் இயேசு பிரானின் உடலைக் கொடுக்கலாகாது என்று வாதிட்டனர். அது மட்டுமல்லாமல், ஏற்கனவே இயேசு பிரான் வெளிப்படுத்திய வாக்கியத்தை நினைவூட்டினர். 'மரித்து மூன்று நாளில் மீண்டும் வருவேன்' என்று பல சந்தர்ப்பங்களில் தமது அருளுரைகளின்போது கூறியிருந்தார். ஆகவே இயேசு பெருமானின் உடல் அடக்கம் செய்யப்படும் கல்லறையில் மூன்று நாட்கள் வரை காவல் போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

கல்லறைக்குக் காவல்

இக்கோரிக்கையை நிராகரித்த ஆளுநர் பிலாத்து, "உங்களிடமே காவல் காக்க வல்லவர்கள் இருப்பார்கள்தானே! அவர்களை அனுப்பி கல்லறையைக் காவல் புரியுங்கள்!" என்று சற்றுக்கடுமையாகவே கூறி விட்டார்.

இயேசு பிரான் வெள்ளிக்கிழமையன்று மாலை பொழுதில் உயிர் துறந்தார். அன்று பிறகல் யோசேப்பும் நிக்கதேம் என்பவரும், அங்கு நின்றிருந்த சிலருமாகச் சேர்ந்து சிலுவையிலிருந்து இயேசுபிரானின் சடலத்தை இறக்கினார்கள். நல்லடக்கத்துக்குத் தேவையான நறுமணப் பொடிகள் போன்றவற்றை நிக்கதேம் தம்முடன் கொண்டு வந்திருந்தார்.

இயேசு பிரானின் சடலத்தைச் சிலுவையிலிருந்து இறக்கியதும், அவருடைய தாயார் கன்னி மரியாளின் மடியில் அவருடைய உடலின் மேல் பாகத்தைக் கிடத்தினர். தனது மகனின் திருமுகத்தைப் பார்த்து தாயார் துக்கம் தாங்காமல் விம்மினார். மகதலாமேரி அருகே இருந்து வாய்விட்டு அழுது புலம்பினார். இயேசுபெருமானின் உறவினர்களும் சீடர்களும் மனையோரும் துக்கமேலீட்டால் கதறினார்கள்.

வாசனைப் பொடிகளை அவரின் சடலத்தில் தடவி, வெள்ளைத் துணிகளால் சுற்றினார்கள். அப்பகுதியிலிருந்த தோட்டமொன்றில் ஒரு கல்லறை இருந்தது. அதில் அதுவரை எச்சடலமும் வைக்கப்படவில்லை.

அந்தப் புதிய கல்லறைக்கு இயேசு பெருமானின் சடலத்தை எடுத்துச் சென்று வைத்தனர். அக்கல்லறையின் வாயிலை ஒரு பெரிய கல்லால் மூடிவிட்டனர். சகல சம்பவங்களும் முடிய இருள் கவிந்தது. தலைமைக் குருவினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த காவலர்கள் சிலர் காவல் கடமையை ஏற்றனர்.

இயேசு பிரான்மீது அதிக விசுவாசம் கொண்டவரான மகதலாமேரி, இயேசு பிரானின் திருப்பாடுகள் அனைத்தையும் தன் கண்களால் பார்த்தவர், அவருடைய இறுதி மூச்சுப் பிரியும்போது சிலுவையின் அடியில் நின்றவண்ணம் அவருடைய திருமுகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தவர். நல்லடக்கம் முடிந்து சீடர்களுடனும் கன்னி மரியாள் போன்றாருடனும், அவர்கள் தங்கியிருந்த

இராஜகுமாரன்

விடுதியில் வந்து தங்கியிருந்தார். அடுத்த நாள் சனிக்கிழமை ஓய்வு நாள். ஞாயிற்றுக் கிழமை வாரத்தின் முதல் நாளன்று- இயேசு பெருமான் சடலம் அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள். இரவு முழுவதும் தூக்கம் எதுவுமில்லாமல் பொழுது விடிவதற்காகக் காத்திருந்த மகதலாமேரி பொழுது புலர்வதற்கு முன்னரே இயேசு பிரானின் சடலம் வைக்கப்பட்டிருந்த கல்லறையை நாடி ஓடினார்.

திறந்து கிடந்த கல்லறை

கல்லறையை மூடியிருந்த கல் அகற்றப்பட்டிருந்ததைக் கண்டதும் மகதலாமேரி கதிகலங்கிப் போனார். உள்ளே சென்று பார்க்க அவருடைய மனம் இடம்தரவில்லை. எனவே பின்நோக்கி சீடர்களிடம் ஓடிச் சென்றார். முதலில் சீமோன் பேதுருவையும் இயேசு பிரானின் மற்றுமொரு சீடரான யோசேப்புவையும் கண்டார். கல்லறையிலிருந்து இயேசுபெருமானின் திருச்சடலத்தை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டதாக முறையிட்டாள். இதனைத் தொடர்ந்து மூவரும் ஓடிச் சென்று கல்லறை அருகே வந்தனர். யோசேப்பு திறந்து கிடந்த கல்லறை வாயிலடியில் நின்றவாறு உள்ளே எட்டிப் பார்த்தார். இயேசு பிரானுடைய சடலத்தைச் சுற்றியிருந்த துணிகள் மட்டும் கிடப்பதைக் கண்டார்.

பேதுருவும் அங்கு வந்து சேர்ந்ததும் இருவரும் கல்லறைக்குள் சென்றனர். சடலத்தைச் சுற்றியிருந்த துணிகள் சடலம் வைக்கப்பட்டிருந்த பீடத்தின்மீதும் அவருடைய தலையில் சுற்றப்பட்டிருந்த துணிகள் பிறிதோரிடத்தில் சுற்றப்பட்டும் கிடப்பதைக் கண்டனர்.

இயேசு பிரானின் சடலம் அங்கு காணப்படாமையினால், அவர் ஏற்கனவே தெரிவித்திருந்ததைப் போன்று உயிர்த்தெழுந்து விட்டார் என்று நம்பினர். கல்லறையை விட்டு வெளியே வந்து, ஏனைய சீடர்கள் தங்கியிருந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றனர்.

அவர்களுடன் செல்லாமல் மகதலாமேரி தனியாக நின்று கல்லறை வாயிலைப் பார்த்த வண்ணம் அழுது கொண்டிருந்தார்.

சற்று நேரம் கழிந்ததும் கல்லறையில் சிலரின் நடமாட்டம் இருப்பதை உணர்ந்து உள்ளே பார்த்தார். தூய வெண் உடை தரித்த இருவர், அங்கே காணப்பட்டனர். இயேசு பெருமானின் சடலம் கிடத்தப்பட்டிருந்த பீடத்தின் தலைமாட்டில் ஒருவரும் கால் மாட்டில் மற்றொருவருமாக அமர்ந்திருப்பதைக் கண்டார். அவர்களில் ஒருவர் மகதலாமேரியைப் பார்த்து, "ஏனம்மா அழுகிறாய்?" என வினவினார்.

இயேசுவைக் கண்டார்

"என் ஆண்டவரை எவரோ எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். அவரை எங்கே கொண்டு போனார்களோ தெரியவில்லை!" என்று மேரி அழுதழுது கூறினார். இவ்வாறு கூறிய பின்னர் மேரியின் பின்புறமாகவிருந்து மற்றுமொரு குரல் கேட்டது.

அவரும், "யாரை அம்மா தேடுகிறாய்?" என்று கேட்டார். அவ்வாறு கேட்டவர் உண்மையில் இயேசுபிரான்தான்; இருப்பினும் மகதலாமேரி அவரை இயேசுபிரான் என்று கருதாமல், தோட்டத்தில் பணிபுரியும் ஒருவராக இருக்கவேண்டும் என்று கருதினார். அவரிடம், "ஐயா, ஆண்டவரை நீர் தூக்கிச் சென்றிருந்தால் அவரை எங்கே வைத்திருக்கிறீர் என்று கூறும்!" என்றார். மேரி தொடர்ந்து அழுது கொண்டேயிருந்தார். அப்போது அவருக்கு நன்கு பழக்கப்பட்ட குரல் "மகதலாமேரி!" என்று அழைத்தது.

கனவு கண்டு விழித்தவரைப்போல், மேரி குரல் வந்த திக்கைத் திரும்பிப் பார்த்தாள். தான் முதலில் தோட்டக்காரன் என்று கருதிய அதே இடத்தில் இயேசுபிரானே நிற்பதைக் கண்டார். கண்களை நன்றாகக் கசக்கி விட்டு மீண்டும் பார்த்தார். சந்தேகமில்லை. அகிலத்தையே இரட்சிக்கவந்த ஆண்டவரின் திருக்குமாரரான இயேசுபிரானே தன் முன் நிற்பதைக் கண்டு ஆனந்த பரவசமடைந்தார்.

இயேசு பெருமான், "என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே! நான் இன்னும் என் தந்தையிடன் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், 'என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்' எனச் சொல்வாயாக" என்றார். மகதலாமேரி தன் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். இயேசுபெருமானின் திருவடிகளைத் தொழுது விட்டு, தாமதமில்லாமல் வெளியேறி ஓடிச் சென்று சீடர்களைக் கண்டு, "நான் ஆண்டவரைக் கண்டேன்!" என்று பலத்த தொனியில் கூறினார். தொடர்ந்து தான் கண்ட காட்சிகளையும் விவரித்து, அவர்கூறிய வார்த்தைகளையும் அவர்களுக்குக் கூறினார்.

(தொடர்ந்து வரும்)



திருமறை [பு.ஆ] 34 விடை: கொலைக் குற்றவாளி பரபாஸ்

பரிசு பெறுவோர்:

1. **ஆ. ஜெகதீஸ்வரன்,** ரொத்சைல்ட் தோட்டம், புசல்லாவ.
2. **ரி. கெத்திஸியாள்,** 175, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
3. **க. அந்தோணியம்மா,** தமிழ் பாடசாலை வீதி, சீனக்குடா.
4. **எம். ஸ்ரீகாந்தி,** றை இல.01, பலாங்கொடை.
5. **செல்வி அருள்மேரி கந்தசாமி,** புனித சிசிலியா மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு.

திருமறை [பு.ஆ] 36 வினா :- **மறைமுகமாக நடமாடிய இயேசுபிரானின் சீடர் யார்?**

பெப்ரவரி 26 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
திருமறை-பு.ஆ.36-தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

பல வருடங்கள் ஆராய்ச்சியின் பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான இரத்தினங்களை உங்கள் கைப்பிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டு பயணம் மற்றும் பல வகைகளில் அதிஷ்டத்தை அள்ளித்தரும் முழு சரீரத்திற்கும் பொருந்தும் இரத்தினங்களை நியமராணி முறையில் இலவசமாகக் கணித்துக் கூற அதை அணிந்து நீங்களும் அதிஷ்டசாலியாக மாறலாம்.

Accredited by National Gem & Jewellery Authority
தேசிய நகை ஆபரணங்களுடன்

அருள் ARUL JEWELLERS
3, Sea Street, Colombo - 11. Tel: 436331
Branch: 105, Galle Road, Colombo 6. Tel: 580230

வேகக்கார் ஓட்டப் போட்டியில் தொடர்ந்து பல வெற்றிகளை ஈட்டியவர் பிரிட்டனைச் சேர்ந்த கிரஹம் ஹில் என்பவர்.

1962 மற்றும் 1968ம் ஆண்டுகளில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி ஈட்டினார். தவிர மேலும் மூன்று போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். கிரஹம் ஹில்லின் மகன் டமன், தன் தந்தையைப் போல் இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி ஈட்டி வருகிறார்.

1996ம் ஆண்டு ஒக்டோபர் 13ம் திகதி இடம் பெற்ற உலக மோட்டார் சாரதிகள் சாம்பியன்போட்டியில், முதலாம் இடத்தை டமன் ஹில் வெற்றி பெற்ற பெருமையோடு இவ்வாறு காட்சி தருகிறார்.

Rothmans
elf
NAULT

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
3233657

திமிங்கிலத்தின் ஒரு வகையான ஓர்க்கா ரகத்தைச் சேர்ந்த இதற்கு 'கெய்கோ' என்று பெயர் சூட்டியுள்ளனர். 'சுதந்திரமான வில்லி'-ஃபிரீவில்லி-என்ற திரைப்படத்தில் பிரதான பாகம் ஏற்று நடிக்கும் இப்பிராணி, ஐஸ்லாந்து கடற்கரையில் 1970ம் ஆண்டு பிடிக்கப்பட்டது.

பெருமதி

இதனை வளர்ப்பதற்கேற்ற இயற்கையோடு இணைந்த சூழலை செயற்கையாக அமைப்பதற்கு 'ஃபிரீவில்லி ஃபவுண்டேஷன்' திரைப்பட நிறுவனத்துக்கு 2 கோடி 20 மில்லியன் டொலர் செலவானது.

வெற்றிப் பரம்பரை

அந்தத் தொட்டியும், வளர்ந்து கொண்டு வரும் கெய்கோவுக்குப் போதா திருந்தது. மேலும் ஒரு கோடி டொலர் செலவில் அமெரிக்கா-ஒரேகன் மாநிலத்தில் உப்பு நீர்க் குளம் ஒன்று அமைக்கப் பட்டது.

கடந்த 1998 செப்டம்பர் மாதத்தில் கெய்கோ ஐஸ்லாந்துக்கே கொண்டு வரப்பட்டு, ஒரு உதைபந்தாட்ட விஸ்தீரணமுள்ள மிகப் பெரிய தொட்டி அமைக்கப்பட்டு அதில் விடப்பட்டுள்ளது. ஐஸ்லாந்தில் அமைக்கப்பட்ட தொட்டிக்கு ஒரு கோடி 20 இலட்சம் டொலர் செலவிடப்பட்டதாம்.

உலகிலேயே உதைபந்தாட்டக் கழகம் ஒன்றுக்கு அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டது த சப்போட்டேர்ஸ் கிளப் ஒஃப் மாஞ்செஸ்டர் யுனைட்டெட் உதை பந்தாட்டக் கழகம்தான். இதன் உறுப்பினர் தொகை-138,000. பிரிட்டிஷ் தீவுகளில் மட்டும் இக்கழகத்துக்கு 276 கிளைகள் உள்ளன. மலேசியா, ஐஸ்லாந்து போன்ற நாடுகளிலும் 24 கிளைகள் இருக்கின்றன. ஸ்கண்டநேவிய நாடுகளில்தான் இதற்கு உறுப்பினர் தொகை அதிகமாம்.

இங்கு மொத்தம் மூன்று இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்தக் கழகத்துக்கு ஆதரவு வழங்குவோரின் சரியான தொகையைக் கணக்கிடுவது கடினம். எனினும் சீனாவில் மட்டும் 2 கோடிப் பேர் இருக்கின்றனராம். இந்தக் கழகத்தின் ஆதரவுச் சிறுவர்கள் இருவர் இக்கோலத்தில் காணப்படுகின்றனர்.

ஆதரவாளர்கள்


QUADRUPLE
CHAMPIONS
CHAMPIONS

வேகம்

டென்னிஸ் ஆட்டத்தில் 'சேர்வ்' என்று-பந்தைக் கைமிலெடுத்து மட்டையால் வீசி மறுபுறத்துக்கு அடித்துச் செல்வதைக் குறிப்பிடுவார்கள். அவ்வாறு பந்தடிப்பதில் அதிவேகம் காட்டுபவர் என அமெரிக்காவைச் சேர்ந்த வீனஸ் வில்லியம் கணிக்கப்பட்டுள்ளார். கலிஃபோர்னியாவிலுள்ள ஸாரிச் நகரில் 1998 ஒக்டோபர் 16ம் திகதி நடைபெற்ற ஐரோப்பிய உள்ளக டென்னிஸ் சம்பியன் ஷிப் போட்டியின் போது இவர் சேர்வ் செய்த பந்து 205 கிலோ மீட்டர் (127.4 மைல்) வேகமாக இருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது.

புதுமலர்கள் வாழ்த்து

தனுஷன் / 18.02.2000

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த பகீரதன்-ரிவேதினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தனுஷன் தனது முதலாவது பிறந்த நாளை 18.02.2000 அன்று இலண்டனிலுள்ள தனதிலத்தில் கெக்கு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், ஆசைமச்சான், தாத்தாமார், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் சகல சௌபாக்கியங்களும் ஐஸ்வர்யங்களும் பெற்று நீடூழி காலம் இன்பற்று சிறப்புடன் வாழ் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்- முரளிச் சித்தப்பா - இலண்டன்